24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 323 புரட்டாதி 29ஆம் நாள் திங்கட்கிழமை 15 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 30
பக்கங்கள்: 28



## யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்த பேருந்தில் 9 கிலோ கஞ்சா மீட்பு

### வவு. பொலிஸார் மடக்கினர் சந்தேகநபரும் கைது

வவுனியா, ஒக். 15
வவுனியாவில் நேற்றுக் காலை 9 கிலோ 314 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார். >> 23

## ஒரே தடத்தில் இரண்டு தொடருந்துகள் சாதுரியமான முயற்சியால் விபத்து தவிர்ப்பு

### கோண்டாவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 15
இரண்டு தொடருந்துகள் ஒரே தடத்தில் வந்துள்ளன. அவை ஒன்றுடன் ஒன்று மோதிப் பெரும் விபத்து ஏற்படும் நிலமை, தொடருந்து நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் சாதுரியமான நடவடிக் >> 25

## அரிசி விலையை குறைப்பதற்கு இணக்கம்

கொழும்பு, ஒக். 15
ஒரு கிலோ அரிசியின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்கு அரிசி உற்பத்தியாளர்கள் >> 22

### கைதிகள் விடுதலைக்காக பாதீட்டை கூட்டமைப்பு எதிர்க்கும் விவகாரம்

# பத்திரிகைகளில் வெளியான செய்தி போன்று நடக்கவும் வாய்ப்புள்ளது

### நேற்று இப்படிச் சொன்னார் மாவை.எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நாளை மறுதினம் புதன்கிழமை, அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில் நடக்கும் பேச்சு வெற்றிபெறாவிட்டால், வரவு – செலவுத் திட்டத்தை கூட்டமைப்பு எதிர்க்கும் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. அவ்வாறு நடப்பதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார். >> 25



## அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 15
நீண்ட காலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணம், நாவாந்துறையில் நேற்றுக் கவனவீர்ப்புப் >> 22

## எதிர்வரும் காலத்தில் வாராவாரம் எரிபொருள் விலை அதிகரிக்கலாம்

### ஆரூடம் கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஒக். 15
உலக சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் சிக்கல் காரணமாக எதிர்வரும் மாதங்களில் எரிபொருள் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று தலைமை அமைச்சர் >> 25



## மீண்டும் சந்தித்த மகிந்த - மைத்திரி

கொழும்பு, ஒக். 15
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும், இரண்டாவது தடவையாக நீர்கொழும்பில் உள்ள விடுதியில் கடந்த வாரம் >> 25

## பாதீட்டை எதிர்ப்பதால் பாதக நிலை ஏற்படும்

### எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஒக். 15
தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் மிக முக்கியமானது. அதேவேளை மகிந்த ராஜபக்சவுக்குத் தீனி போடாது >> 25

## பொதுத் தேர்தல் நடக்காது ஆட்சிமாற்றம் சாத்தியமில்லை

### அடித்துக் கூறுகிறார் மகிந்த

கொழும்பு, ஒக். 15
நாடாளுமன்றத் தேர்தல் நடக்காது நாட்டில் ஆட்சி மாற்றத்துக்குச் சாத்தியமே இல்லை என்று ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரும் அமைச்சருமான மகிந்த >> 22

## மோதலில் மகனைக் காப்பாற்ற முயன்ற தாய் அடித்துக் கொலை

### ஊரெழுவில் நேற்றிரவு துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 15
மகனைத் தாக்க வந்தவர்களைத் தடுக்க முற்பட்ட தாயை அடித்துக் கொலை செய்த சம்பவம், கோப்பாய் பொலிஸ் >> 25

## அணில் பிடிக்கச் சென்ற சிறுவன் கிணற்றில் வீழ்ந்து உயிரிழப்பு

### யாழ். நகரில் சம்பவம் >> 25

### இலங்கையில்

## 90% பெண்களுக்கு பாலியல் தொந்தரவு!

### ஐ.நா. அறிக்கை

கொழும்பு, ஒக். 15
இலங்கையில் பொதுப் போக்குவரத்தின்போது, பெண்களில் 90 சதவீத மாணவர்கள்பாலியல்தொந்தரவுகளுக்கு உள்ளாவதாக ஐ.நா. சனத்தொகை நிதியம் மேற் >> 23

## இளைஞர்கள் இருவர் மீது நேற்றுத் தாக்குதல்

### முன்னணி உறுப்பினர் மேற்கொண்டதாக காயமடைந்தவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15
காயமடைந்த நிலையில் இரண்டு இளைஞர்கள் தெல்லிப்பழை மருத்துவமனையில் நேற்று மாலை சேர்க்கப்பட்டுள்ளனர். தம்மைதமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் >> 25



## குடாநாட்டில் பல பகுதிகளிலும் பொலிஸார் திடீர்ச் சோதனை

### 40 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 15
யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வீதிச் சோதனைகளும், தேடுதல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சோதனை >> 25

### வடக்கு மாகாண

## நியதிச் சட்டக் குறைபாட்டால் திறைசேரியில் தேங்கும் நிதி

யாழ்ப்பாணம், ஒக். 15
வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு உட்பட்ட காணிகளை, வடக்கு மாகாண மாவட்டச் செயலகங்கள் ஊடாகப் பதிவு செய்யும் >> 23

## வாள்வெட்டோடு தொடர்பு: சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 15
யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் நடந்த வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் நேற்று அதிகாலை இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். >> 25

# பூஜித் பதவி விலகியதும் விக்கிரமசிங்க பதவிக்கு?

கொழும்பு, ஒக். 15

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர அடுத்தவாரம் பதவி விலகக் கூடும் என்று கூறப்படுகின்றது. அவர் பதவி விலகிய பின்னர் மகிந்த ராஜபக்ச ஆட்சியின்போதும், மைத்திரி சிறிசேன பதவிக்கு வந்த பின்னரும் அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்கபொலிஸ்மாஅதிபராகநியமிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

இந்தத் தகவலை கொழும்பு ஊடகம் வெளிப்படுத்தியுள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்க 12 ஆண்டுகளாக அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவின் தலைவராக பணியாற்றியவராவார்.

பூஜித்ஜெயசுந்தரவும், எஸ்.எம்.விக்ரமசிங்கவும், உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர்களாக 1985 ஆம் ஆண்டு பொலிஸ் துறையில் இணைந்து கொண்டனர். பொலிஸ் மா அதிபர் இலங்ககோனின் பதவிக்காலம் முடிந்த போது, பூஜித் ஜெயசுந்தர, எஸ்.எம்.விக்ரமசிங்க உள்ளிட்ட மூன்றுமூத்த பிரதிப் பொலிஸ்,மா அதிபர்கள், அந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் தகுதியைப் பெற்றிருந்தனர்.

அரசமைப்புசபையில்இதுகுறித்துவிவாதிக்கப்பட்டு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போது சபாநாயகரும், அரசமைப்பு சபையின் தலைவருமான கரு ஜெயசூரிய வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

வாக்களிப்பில் பங்கேற்ற 7 உறுப்பினர்களில், 5 பேர் பூஜித ஜெயசுந்தரவுக்கு ஆதரவாகவும், ஒருவர் எஸ்.எம்.விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். ஒரு வாக்கு நிராகரிக்கப்பட்டிருந்தது. பொலிஸ்மா அதிபர் பூஜித தற்போது சர்சைக்குள் சிக்கியுள்ளமையினால் அவர் பதவி துறக்க வேண்டும் என்று பல தரப்பினராலும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. (ற)

# நீர்கொழும்பில் சந்தித்த மைத்திரியும், மகிந்தவும்



கொழும்பு, ஒக்.15

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் இரண்டாவது தடவையாக நீர்கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்தனர் என்று கொழும்பு ஆங்கிலவார இதழ்ஒன்றின் அரசியல்பத்தியில்கூறப்பட்டுள்ளது.

பரந்தளவிலான இடைக்கால கூட்டணி அரசு ஒன்றை அமைப்பதற்கான இரகசியப் பேச்சு நடத்திய இரண்டு நாள்களின் பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும்முன்னாள்அதிபர்மகிந்தராஜபக்சவுக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நீர்கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் நடந்த திருமண நிகழ்விலேயேஇந்தச்சந்திப்புஇடம்பெற்றுள்ளதுஎன்று கூறப்படுகின்றது. அப்போது, விடயங்கள் தவறாகி விட்டன இல்லையா, என்று மைத்திரிபால சிறிசேனவை மகிந்த ராஜபக்ச புன்னகையுடன் வரவேற்றுள்ளார். அதற்கு மைத்திரிபால சிறிசேனவும், அப்படித் தான் என்று கூறியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலானசிறிலங்காசுதந்திரக்கட்சியின் மீரிகம அமைப்பாளர் சஞ்சய சிறிவர்த்தனவின்மகளுக்கும், மகிந்த ராஜபக்சவை நிழல் தலைவராக கொண்ட சிறிலங்கா பொதுஜன முன்னணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் சந்தியா சிறிவர்த்தனவின் மகனுக்குமேதிருமணம் இடம்பெற்றது. இந்ததிருமணத்துக்கு வேடர்சமூகத்தின்தலைவர் உருவரிகேவன்னிலாஅத்தோவும்அழைக்கப்பட்டிருந்தார். முதன்மை மேசையில் அவருக்கும் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட பாதுகாவலர்களின் கவனம்வேடுவர்தலைவரின் மீதே இருந்தது. அவர் பாரம்பரிய முறைப்படி தனது தோளில் கோடரியை கொளுவியிருந்தார். அதனால்அவரையே அரசதலைவர்பாதுகாப்புப்பிரிவினர் கண்காணித்தபடி இருந்தனர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ற)

# யாழ்ப்பாணப் பொலிஸாருக்குச்சவால் விடுகின்றனரா உந்துருளித் திருடர்கள்

## யாழ். நகரில் அடுத்தடுத்து திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணப் பொலிஸாருகக்கு சவால் விடும் வகையில் திருடர்கள் நடந்து கொள்கின்றனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக நிறுதி வைக்கப்பட்டிருந்த இரண்டாவது மோட்டார் சைக்கிளும் கடந்த வெள்ளிக்கிழமை திருடப்பட்டுள்ளது. இந்தச்சம்பவங்களை அடுத்து யாழ்ப்பாணப்பொலிஸார்மீதுமக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வருவோர், மருத்துவமனைக்கு முன்னாள் வீதியின் நடுவே உள்ள வாகனங்கள் நிறுத்துமிட த்தில் (பாங்கிங் ஏரியா) தமது மோட்டார்சைக்கிள்களை நிறுத்திவிட்டு உள்ளே செல்கின்றனர். எனினும் திரும்பி வரும் போது அவர்கள் நிறுத்திவைத்தமோட்டார்சைக்கிள்கள் திருட்டுப்போகின்றன. இந்தச்சம்பவம் அங்கு தொடர்ந்த வண்ணமே உள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட போதும் எந்த ஒரு மோட்டார் சைக்கிளும் மீட்கபப்பட்டதாக தகவல்கள் இல்லை. மோட்டார் சைக்கிள்களைத் திருடுவோர் அதை பாகங்களாகக் கழற்றி உருத்தெரியாமல் ஆக்கிவிடுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளன. வைத்தியசாலையில் இருந்து 500 மீற்றர் துரத்தில் யாழ்ப்பாணம்பொலிஸ்நிலையம் உள்ளது. வைத்தியசாலைக்கு முன்பாக போக்குவரத்துப் பொலிஸார் சோதனைகளில் ஈடுபடுகின்றனர். வைத்தியசாலையில் இருந்து சிலமீற்றர் தூரத்தில் பேருந்து நிலையத்தில் பொலிஸாருடைய சோதனைச் சாவடி உள்ளது இவைகள் அனைத்தும் இருந்தும் திருடர்கள்எப்படிநகர்கின்றனர்என்று மக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

மருத்துவமனையில் குழந்தைப்பேற்றிற்காக. அனுமதிக்கப்பட்டிருந்த மனைவியை பார்வையிடச் சென்ற ஒருவருடையஎக்ஸ். எல்2587இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் கடந்த வியாழக்கிழமை திருடப்பட்டது. மறுநாள் அவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார். எனினும்அவரது மோட்டார் சைக்கிள் மீட்கப்படவில்லை. அப்படி இருக்க மறுநாள் வெள்ளிக்கிழமைகாலையிலும்மற்றுமோர் மோட்டார்சைக்கிள் இதேபிரதேசத்தில் திருடப்பட்டுள்ளது. குறித்த மோட்டார் சைக்கிள் 3 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பிலும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதுபோன்றுஅந்தப்பிரதேசத்தில்திருடர்கள் திட்மிட்டுத் தமது கைங்கரியத்தை நிறைவேற்றுகிறார்கள். இதனால் பலர் பாதிப்படைந்துள்ளனர். அவர்களின் மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட வேயில்லை. இது தொடர்பில்பொலிஸார்எடுக்கும்நடவடிக்கை என்ன என்பதை பொலிஸ் உயரதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும். இவ்வாறானதிருடர்கள்மீதுஅசமந்தமாகச் செயற்படும்பொலிஸ்உத்தியோகத்தர்களுக்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லை எனில் பொலிஸார் மீது மக்களுக்கு எள்ளவவேனும் நம்பிக்கையோ மதிப்போ ஏற்படாது என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளையாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையில் உள்ள நோயாளர்களைப்பார்வையிடவருவோரின் மோட்டார்சைக்கிள்களின்திருட்டைத் தடுக்கும் வகையில் மருத்துவமனையின்சிசிரிவிகமராவசதிகளில்மருத்துவமனைக்குமுன்னால்உள்ளவீதியையும் உள்வாங்குமாறு மருத்துவமனைப் பணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தியிடம் மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன் கோரிக்கை விடுத்தார்என்றுதெரிவிக்கப்படுகிறது. வீதியில்நிறுத்தும்மோட்டார்சைக்கிள்கள்திருடர்களின்கைவரிசைக்குஉள்ளாவதோடு வீதியில் பயணிகளின் சேவைக்காகக் காத்திருக்கும் முச்சக்கர வண்டிகளிலும் திருடர்கள் சிலசமயம்தமதுகைவரிசையைக்காண்பிக்கின்றனர். எனவேதற்போதுமருத்துவமனையில் பொருத்தப்படும் கமராவசதிகளை மருத்துவமனையைநாடி வரும்நோயாளர்கள்மற்றும்பார்வையாளர்களின் நன்மைகருதி வீதியின் குறிப்பிட்ட பகுதியினையும் உள்ளடக்கும்வகையில்கமராபொருத்துவதன் மூலம் திருட்டைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பு உள்ளது என அவர் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்த மருத்துவமனைப்பணிப்பாளர்வைத்தியசாலையின்கட்டடத்தில்குறிப்பிட்ட வீதியினையும் உள்ளடக்கும் வகையில்கமராபொருத்த உடனடியாகவே நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பதிலளித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (21,105)

# தரம் 5 பரீட்சை தொடர்பில் ஆராய்வதற்கு நிபுணர் குழு

கொழும்பு, ஒக். 15

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையை இல்லாமல் செய்வதா அல்லது மறுசீரமைப்புக்கு உட்படுத்துவதா என்பதை ஆராய்வதற்கு நிபுணர் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வில் கலந்துகொண்ட கல்விஅமைச்சர்அகிலவிராஜ்காரியவசம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களின்எதிர்காலத்தைத் தீர்மானிக்கப்போவதில்லை. அது நினைவூட்டலைப் பரீட்சித்துப் பார்க்கும் பரீட்ஸையாகும். இந்தப் பரீட்சையில்மாணவர்களின்எதிர்காலத்தைத்தீர்மானிக்கப்போகின்றது என்று எண்ணி மாணவர்களுக்குப் பெற்றோர் அழுத்தம் கொடுக்கின்றனர்.

இந்தப்பரீட்சைதொடர்பில்சிந்திக்க வேண்டியுள்ளது. அது மறுசீரமைப்புக்குஉட்படுத்தப்படவேண்டும் அல்லது பரீட்சையை இல்லாமல்செய்யவேண்டும்என்றகருத்துக்களும் கூறப்படுகின்றன.

இந்தவிடயத்தைஆராய்வதற்குக் குழுவொன்று அமைக்கப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை டிசெம்பர் மாதத்தில் நடத்துவது தொடர்பாகவும் பரிசீலிக்கப்பட்டுவருகின்றது - என்றார். (ற)

விபத்துக்களைத் தடுக்க

# இ.போ.ச. பேருந்துகள் தமது வேகத்தை குறைக்கவேண்டும்

## யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கோரிக்கை


யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணமாவட்டத்தில்பயணிக்கும்இ.போ.சபைக்குச் சொந்தமான பேருந்துச் சாரதிகள் வீதி விதிமுறைகளையும், பேருந்துகளின்தரத்தையும்பேணுவதனை உறுதி செய்யவேண்டும். இது தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் சாரதிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைப்பணிப்பாளர்சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்பணிப்பாளர்சத்தியமூர்த்தி இலங்கைப் போக்குவரத்துச்சபையின்முகாமையாளருக்குஅனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் உள்ளதாவது

வடக்குமாகாணத்தில்தற்போதுஅதிகரித்திருக்கும்விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் வேகத்தை கட்டுப்படுத்தி பேருந்துதைச் செலுத்துமாறு அதன் சாரதிகளுக்குப் பணிப்புரை விடுக்க வேண்டும். குடாநாட்டில்மக்கள்நெருக்கடியானவீதிகள், அதிகபயன்பாட்டுவீதிகள்என அனைத்துவீதிகளும்இ.போ.சபைப் பேருந்துகள் அதிக வேகத்திலேயே பயணிக்கின்றனர். இவ்வாறு அதிக வேகத்தில் பயணிப்பதால் தனியார் பேருந்துகளும் போட்டி மனப்பாண்மையில் அதிக வேகத்தில் பயணிக்கின்றனர். இதனால் இ.போ.சபையின் பேருந்துகள் வேகத்தைக் கட்டுப்படுத்தியே ஆகவேண்டும். இதனை இ.போ.சபை ஓர் முன்னுதாரணமாக மேற்கொண்டால் குடாநாட்டில் இடம்பெறும் அதிகவிபத்துக்களைநிச்சயமாகக்கட்டுப்படுத்தமுடியும். இ.போ.சபையின் முன்னுதாரணத்தை அடுத்த கட்டமாக ஏனையோரும் கடைப்பிடிக்க முடியும். ஏனெனில் குடாநாட்டில்தற்போது அதிகரித்துச்செல்லும்விபத்துக்களின்எண்ணிக்கையைக்கட்டுப்படுத்தவேண்டியமருத்துவக் கடப்பாடு எமக்கும் உண்டு என்ற வகையில் இச் செயற்பாட்டுக்கு இ.போ.சாவின் ஆதரவைக் கோருகின்றோம் என்றுள்ளது. (21,105)

# சட்டவிரோத மணல் அகழ்வு மக்கள் முறைப்பாடு



வடமராட்சி,ஒக் .15

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணி மற்றும் வத்திராயன் கிராமத்தில் இரவு நேரங்களில் தனியார் காணிகளில், மக்களின் வாழ்விடங்களில் . சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் .

இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு அந்தக் கிராமங்களின் மக்கள் உரியவர்களுக்கு அறிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மக்கள் கவலைதெரிவித்தனர்.

# வவுனியா வடக்குப் பிரதேச சபையில் மாடு வெட்டவும் விற்பனை செய்யவும் தடை

வவுனியா,ஒக் .15

வவுனியா வடக்குப் பிரதே சபையின் மாதாந்த அமர்வு தலைவர் இ.தணிகாசலம் தலைமையில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது. குறித்த கூட்டத்தில் நெடுங்கேணி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அடுத்த வருடத்தில் இருந்து மாடு வெட்டுவதற்கும், அதனை விற்பனை செய்வதற்குமுரிய அனுமதிப்பத்திரம் வழங்கபடமாட்டாது எனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது .

நெடுங்கேணி பிரதேசத்தில் மாடுகள் வெட்டப்பட்டு விற்பனைக்காக வெளியிடங்களுக்கே கொண்டுசெல்லப் படுகின்றது. இதனால் மாடுகள் வெட்டுவதற்கான தடை விதிக்கப்பட்டதுடன், அடுத்தவருடத்தில் இருந்து மாட்டிறைச்சி விற்பனைசெய்யும் வியாபாரநிலையத்திற்கும் அனுமதிப்பத்திரம் வழங்குவதில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரதே சபையின் தலைவர் இ. தணிகாசலம் தெரிவித்தபோது எமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மாடுகள் அறுக்கப்பட்டாலும் அவை தமது பகுதியில் விற்பனைசெய்யபடுவது மிகவும் குறைவு. அதிகமாக இங்கு அறுக்கபட்டு வவுனியாவுக்கு கொண்டுசென்றே விற்பனைசெய்து வருகின்றனர்.எமது பகுதியில் மாட்டிறைச்சியை உணவுக்காக பயன்படுத்துபவர்களும் மிகவும் குறைவானவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவற்றை கருத்தில் கொண்டே குறித்த தடைவிதிக்கப்படுவதாக தெரிவித்தார்.

அத்துடன் சபையின் வருமானத்தை கருத்தில்க் கொண்டு பிரதே சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சோலை வரி. அறவிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றோம். அதன் முதற்கட்டமாக புளியங்குளம், கனகராயன்குளம், நெடுங்கேணி போன்ற நகர்ப்பகுதிகளில் வரி அறவிடும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக தீர்மானித்துள்ளோம். மக்களுக்கு சோலை வரிதொடர்பான போதிய தெளிவில்லாத நிலமை உள்ளது. எனவே அவர்களுக்கு இது தொடர்பாக தெளிவுபடுத்தும் செயற்பாடுகளையும் மேற்கோள்ள உள்ளதாக தெரிவித்தார். (110)

# கட்டுப்பாட்டை இழந்த பேருந்து பாலத்துடன் மோதி விபத்து



மன்னார் ,ஒக் .15

மதவாச்சி மன்னார் பிரதான வீதியின் பெரியகட்டுப் பகுதியிலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது . நேற்றுக் காலை நீர்கொழும்பு பகுதியில் இருந்து மன்னார் மடுத்தேவாலயத்திற்கு சென்றபேருந்து . பெரியகட்டுப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து .அருகில் உள்ள பாலத்துடன் மோதுண்டு விபத்திற்குள்ளா கியுள்ளது. இந்த விபத்தில் 8 பேர் காயமடைந்தநிலையில் செட்டிகுளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

விபத்துதொடர்பான மேலதிக விசாரணைகளை பறயனாளங்குளம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (110)

# மருத்துவமனையின்இல்ல மெய்வன்மைப் போட்டி



சாவகச்சேரி ,ஒக். 15

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின், முதலாவது இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நேற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

மருத்துவமனைப் பொறுப்பதிகாரியின் முயற்சியினால் அங்கு கடமையாற்றும் அனைத்து அலுவலர்களும் பணியாளர்கள்ும் பங்குபற்றும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டன. (9,159,131)

# காணி உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்



வடமராட்சி,ஒக் .15

வடமராட்சி கிழக்கு மக்கள் குழு ஏற்பாட்டில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையில், அரசியல் அமைப்பு கற்கை நிறுவனத்தால் நேற்று வடமராட்சி கிழக்கு பிரதேசம், கேவில் கிராம அலுவலர் பிரிவில் காணி உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தேசிய மீனவர் ஒத்துளைப்பு இயக்க யாழ்மாவட்ட தலைவர் இ.முரளீதரன் தலமையில் காலை 11 மணிக்கு கேவில் பொது மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தேசிய பூங்கா எனும் 22 ஜீன் 2015ஆம் ஆண்டுக்கான அரசிதழ் மூலம் அறிவிக்கப்பட்டு. சுவீகரிக்கப்பட்ட சுமார் 194 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்திற்குள் மக்களது காணிகள், கரவலை பாடுகள், நன்னீர் மீன்பிடி இடங்கள், வயல்நிலங்கள் ஆகியவற்றை வன ஜீவராசிகள் திணைக்களம் முடக்கி வருகிறது. இவற்றுக்கான தீர்வுகளை காணுதல் எப்படி எனும் தொனிப்பொருளில் கிராம மட்ட பிரதிநிதிகள் , பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சுமார் அறுபது பேர் வரை கலந்து கொண்டனர். (160)

# காலாவதியான பொருள்களை விற்பனை செய்தவர்களுக்குத் தண்டம்

சாவகச்சேரி ஒக்.15

காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை ,மற்றும் விலைப்பட்டியல் வைத்திருக்காத தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 10 ஆம் திகதி 21 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது நடத்திய திடீர் பரிசோதனையில் ,திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்த மற்றும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக ,சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தன்.

இந்த வழக்குகள் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டன. விசாரணையில் வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபாவும், மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் ,இருவருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது . (9)

# வவுனியாவில் முதியோர் தினம்



வவுனியா,ஒக் .15

வவுனியா, ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கிடாச்சூரி, கருவேப்பங்குளம் பாடசாலையில் முதியோர் தினம் நேற்றைய தினம் இடம் பெற்றது.

முன்னாள் வவுனியா மாவட்டச் செயலர் உடுவை தில்லை நடராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மீள்குடியேற்றம், மறுவாழ்வு வடக்கு அபிவிருத்திப் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண அமைச்சர்களான க. சர்வேஸ்வரன், க.சிவநேசன்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகரராத லிங்கம் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் முதியோர்கள்க்கு மதிப்பளிக்கப்பட்டனர். (110)

# பதினைந்து பேரப்பிள்ளைகளை கொண்ட வயோதிபத் தம்பதிகளுக்கு திருமணம்



யாழ்ப்பாணம், ஒக் 15

நான்கு பிள்ளைகள் 15 பேரப்பிள்ளைகளை கொண்ட வயோதிப தம்பதிகளுக்கு சட்டரீதியான திருமணம் நேற்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் முன்னிலையில் நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நடமாடும் சேவையில் செய்து வைக்கப்பட்டது.

இந்தப் பதிவுத்திருமணம் திருநெல்வேலியைச் சேர்ந்த ஐ.நகுலராஜா வயது 74.மு.ரோகிணி வயது 67 ஆகிய இருவருக்குமே திருமணம் செய்து வைக்கப்பட்டது. இவர்கள் கடந்த 1966 ஆம் ஆண்டு சம்பிரதாயபூர்வமாக திருமணம் செய்து ,நான்கு பிள்ளைகள்,15 பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.எனினும் சட் டரீதியாக இவர்கள் திருமணப் பதிவுகளை மேற்கொண்டிருந்த நிலையில் இவர்களுக்கு பிரதேச செயலகத்தினால் நேற்றைய நடமாடும் சேவையில் திருமணம்செய்து வைக்கப்பட்டது. இதில் அமைச்சர் மற்றும் அவர் அமனைவி சாட்சியம் அளிக்க திருமணம் எழுத்துமூலம் பதிவுசெய்யப்பட்டது . (8)

# உந்துருளி மோதி ஒருவர் காயம்

சாவகச்சேரி ஒக்.15

சாலையில் வந்த உந்துருளியை அதே மார்க்கத்தில் வந்த சிறிய ரக பட்டா வாகனம் ( வடி )_ மோதியதில் உந்துருளியில் பயணித்த தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் காயமடைந்தார்.இந்தச் சம்பவம் கடந்த 8 ஆம் திகதி பகல் சாவகச்சேரி இலங்கை வங்கி முன்பாக ஏ 9 முதன்மைச் சாலையில் இடம்பெற்றது.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு கடன் வழங்குவதற்கான படிவங்களை சமுர்த்தி மகா சங்கத்தில் பெற்று திரும்பிய சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ,விபத்துக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் . (9)

# யாழ். மாநகர வீதிகளுக்கு மின்விளக்குகள்பொருத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 15
யாழ்ப்பாணம்மாநகரவீதிகளுக்கு யாழ். மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந்ஏற்பாட்டில்வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டன.
யாழ்ப்பாண மாநகர சபையின் 2ஆம் வட்டாரமான கந்தர்மடம் வடமேற்குப்பிரிவில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர்ப.தர்சானந்தின்முயற்சியால் பல வீதிகள் மற்றும் உள்ளொழுங்கைகளுக்கு புதிய வீதி விளக்குகள்அண்மையில்பொருத்தப்பட்டுள்ளன.
ஜே/100 வண்ணார்பண்ணை வடகிழக்கு பிரிவில் பிறவுண் வீதி உள்ளொழுங்கைகள், அரசடி வீதி உள்ளொழுங்கைகள், கே.கே.எஸ் வீதி உள்ளொழுங்கை என்பனவற்றுக்கும் ஜே/102 கந்தர்மடம் வடமேற்கு பிரிவில் பிறவுண் வீதி உள்ளொழுங்கைகள், அரசடி வீதி உள்ளொழுங்கைகள் மற்றும் ஜே 123 கொக்குவில் தென்கிழக்கு பிரிவில் மதவடி ஒழுங்கை என்பனவற்றுக்குமே புதிய வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (ம)



வாகனங்களில்

# வலையால் மூடப்பட்ட நிலையில் கழிவுகள் அகற்றப்பட வேண்டும்

## திறந்த நிலையில் அகற்றக்கூடாது என்று யாழ். மாநகர ஆணையாளர் அறிவுறுத்தல்

**யாழ்ப்பாணம், ஒக். 15**
**யாழ்ப்பாணமாநகரபிரதேசத்தில்உழவுஇயந்திரங்கள்மூலம்அகற்றப்படும் கழிவுகள் யாவும் வலைகளால் மூடப்பட்டே கொண்டு செல்லப்பட வேண்டும் என்று தெரிவித்தார் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் ஜெயசீலன்.**

திறந்தவாகனங்களில்கழிவுகளை எடுத்துச் செல்லும்போது அவை நிலத்தில் விழுகின்றன. அவ்வாறு விழும் குப்பைகளால் வீதியில் துர்நாற்றம் நிலவுகிறது. அத்துடன் திறந்த வாகனத்தில் குப்பைகளை அகற்றும் போது காகங்கள் உள்ளிட்ட பறவைகள் குப்பைகளை இழுத்து விழுத்த வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. இவ்வாறான விடயங்களைக் கருத்தில்கொண்டு கழிவுகளை அகற்றும்போது வாகனங்களைப் பாதுகாப்பாக மூடியே கொண்டு செல்ல வேண்டும். தவறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

# கைதடி வீதியில் இரவு வேளையில் கழிவுகளைவீசுகின்றனர்விசமிகள்

## அந்தப் பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 15
கோப்பாய் கைதடி வீதியில் இரவு வேளைகளில் சிலர் கழிவுப் பொருள்களைக் கொட்டிவிட்டுச்செல்வதால்துர்நாற்றம்அதிகளவில்உள்ளதுஎன்று அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
கைதடி பாலத்துக்கு அண்மையில் இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுவது மிகவும் அதிகளவில் அவதானிக்கப்படுகிறது. அதனைவிட சிலர் கோழி மற்றும் விலங்குக் கழிவுகளையும் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இந்தப் பகுதியில் கழிவுகளை கொட்டுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்றுவலி.கிழக்குபிரதேசசபைமுன்னர் அறிவித்திருந்து. எனினும் கழிவுகள் தொடர்ந்தும் கொட்டப்பட்டுக்கொண்டுதான் உள்ளனஎன்று மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ம-17)

# நவராத்திரி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 15
சித்தன்கேணிசரஸ்வதிஉபதேச திருக்கோவிலின் நவராத்தி தின நிகழ்வுகள் இந்த வருடம் முதன் முறையாகநடைபெற்றுவருகின்றன. ஆறாம் நாளான இன்று சரஸ்வதிபூசையுடன்மாணவர்களின் பரீட்சை வெற்றிக்காக ஹோமவழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்வுகளும்இன்றுஇடம் பெறவுள்ளன. (ம)

# வலி. கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உபஅலுவலகத்துக்கென கட்டடத்துடன் காணி கொள்வனவு

யாழ்ப்பாணம், ஒக். 15
வலி. கிழக்குப் பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்துக்கென கட்டடத்துடன் கூடிய காணி ஒன்றைச் சபை கொள்வனவு செய்துள்ளது.
இருபாலைச்சந்திக்குஅண்மையில்உள்ளசபையின்நூலகக்கட்டடத்துக்கு அருகில் உள்ள காணியே இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
இந்தக் காணியில் உள்ள கட்டடத்தைச் சீரமைத்து விரைவில் கோப்பாய் உப அலுவலகத்தை இந்த இடத்துக்கு மாற்றி வைக்கவும் வலி. கிழக்குப் பிரதேசசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ம-17)



சீனாவில் நடைபெற்ற பன்னாட்டு கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 6இல் கல்வி கற்கும் மாணவன் சிவமோகன் அபிசாயீசன் தொகுதி 1 பிரிவில் இலங்கை அணியின் சார்பாக பங்கு பற்றி வெண்கலப் பதக்கம் பெற்றார். (ம)

# வாணிவிழா

யாழ்ப்பாணம், ஒக். 15
கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலையின் வாணி விழாவும், காத்தவராயன் இறுவெட்டு வெளியீடும் இன்று இடம்பெறவுள்ளன.
அருள்மிகு கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. பிறேமகுமாரன் செந்தூரன் தலைமையில் நடைபெறும்நிகழ்வுக்குமுதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன்கலந்துகொள்கிறார். (ம)

# கசிப்புக் காச்சியவர் என நபரொருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 15
தெல்லிப்பழை கட்டுவன் பகுதியில் பற்றைக்காடு ஒன்றில் 2 லீட்டர் கோடாவுடன் நபரொருவர் காங்கேசன்துறைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபருக்குவயது 56. அவர்தெல்லிப்பழைப்பொலிஸ்பிரிவில்பாரப்படுத்தப்பட்டுள்ளார். சந்தேக நபரை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர். (ம-26)

# மானியஅடிப்படையில் உரம்விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 15
நாவற்குழி மேற்கு விவசாய சம்மேளனத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்கப்படவுள்ளது. கைதடிகமநலசேவைகள் நிலையத்தில் வைத்து நாளை இந்த உரங்கள் வழங்கப்படவுள்ளன. மூன்று கட்ட உர வகைகளும் ஒன்றாக வழங்கப்படவுள்ளன என்றும் தெரியவருகிறது.

★★★

நுணாவில் கிழக்கு கமக்கார அமைப்பின் உறுப்பினர்களுக்கான மானிய உரவகைகள் நாளை செவ்வாய்க்கிழமை மீசாலைபுத்தூர்சந்தியில்உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்பட வுள்ளன.
அமைப்பில் பதிவு செய்த விவசாயிகள் தமக்குரிய உர வகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அமைப்பின் செயலாளர் பொ.நடராசா அறிவித்துள்ளார். (ம-9)



இள்வாலை யூதாததேயு ஆலயப் பங்கைச் சேர்ந்த 30 சிறார்களைக் கொண்ட குழு உதயன் பணிமனைக்கு நேற்றையதினம் வருகைதந்து, பத்திரிகை அச்சிடும் பணிகள் தொடர்பில் பார்வையிட்டனர். (ம)



வடமாகாணசபை உறுப்பினர் இ.ஜெயசேகரன் ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளிச் சமூகத்தின் கோரிக்கைக்கு அமைவாக நாற்பதினாயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சி, டி.வி.டி. பிளேயர், கதிரைகள் உள்பட பல பொருள்களை முன்பள்ளிச் சமூகத்துக்கு வழங்கினார். (ம)

## உரும்பிராயில் உலக உணவு தினம்



யாழ்ப்பாணம், ஒக். 15

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் உலக உணவு தினம் உரும்பிராயில் காளியம்மாள் திருமண மண்டபத்தில் கிராமிய உழைப்பாளர் சங்க தலைவர் என் இன்பநாயகம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண மீன்பிடி மற்றும் விவசாய அமைச்சர் சிவநேசன் கலந்து கொண்டார். தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க வடக்கு கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க யாழ்ப்பாண தலைவர் இ.முரளீதரன் பூந்தளிர், மகளிர் அமைப்பு யாழ். மாவட்ட தலைவர் மி.தர்மராகினி, வடமாகாண மீனவர் இணைய செயலாளர் என்.வீ.சுப்பிரமணியம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம)



கொக்குவில் மேற்கு கேணியடி ஒழுங்கையில் உள்ள ஞானவைரவர் தேவஸ்தானத்துக்கு மாகாண சபை உறுப்பினர் பொன்னுத்துறை ஐங்கரநேசனால் ஒலிபெருக்கிச் சாதனம் அண்மையில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கோயிலின் தலைவர் பொ.தவராசலிங்கம், செயலாளர் சி.கனகரத்தினம், பொருளாளர், சு.கருணாகரன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம)

## யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு

# மானிய விலையில் உருளைக்கிழங்கு

அச்சுவேலி, ஒக்.15

**யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு 50 வீத மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு இந்த வருடமும் வழங்கப்படவுள்ளது.**

விதை உருளைக்கிழங்கை மானிய விலையில் வழங்குவதற்கென ஏற்பாடுகளை சமாசம் மேற்கொண்டு வருகின்றது என்று உருளைக்கிழங்கு உற்பத்தி- விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான விதை உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பாக சமாசத்தின் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

மானிய விலையில் விதை உருளைக்கிழங்கை இந்த வருடமும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாக பிரதி விவசாய அமைச்சர் அறிவித்துள்ளார். அந்த வகையில் விவசாயிகள் மத்தியில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உருளைக்கிழங்கு கோரி பதிவு செய்துள்ள விவசாயிகளின் பதிவுகள், தோட்ட நிலங்களை நேரில் சென்று பார்வையிட்டு ஒப்புநோக்கி உறுதி செய்யப்படவுள்ளது.

தோட்ட நிலங்களை நேரில் பார்வையிட்டு ஒப்புநோக்கும் பணிகளை கமநலசேவை திணைக்கள அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மற்றும் சமாசத்தின் நிர்வாகிகள் உள்ளடங்கிய குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்த வருட விதை உருளைக்கிழங்கு பிராந்திய கமநலசேவை நிலையங்களில் வைத்து திணைக்கள அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வழங்கப்படவுள்ளன என்றார். (ம-11)



வடமாகாண கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவினரால் அண்மையில் நடத்தப்பட்ட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலில் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உற்பத்தியாளர்களுக்கான சான்றிதழ்கள் பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. (ம)

# 3 கோடி ரூபா செலவில் நவீன வணிகத்தொகுதி

## விரைவில் அமைக்கப்படும் என்றார் கரவெட்டித் தவிசாளர் ஐங்கரன்

வடமராட்சி, ஒக்.15

நெல்லியடி பழைய சந்தைக் கட்டடத் தொகுதியில் 3 கோடி ரூபா செலவில் சகல வசதிகளுடன் கூடிய வணிகத் தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்த நவீன வணிகத் தொகுதியை நிறுவ யாழ். மாவட்டச் செயலர் 150 மில்லியன் ரூபாவை சபைக்குப் பெற்றுத்தர இணங்கியுள்ளார். மிகுதி 150 மில்லியன் ரூபாவை சபையின் ஏதாவது ஒரு நிதியில் இருந்து பெற்றுக் கொள்வோம் என கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தலைவர் தங்கவேலாயுதம் ஐங்கரன் தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச சபையின் இந்த மாதத்துக்கான அமர்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சந்தைக் கட்டடத்தை விரிவாக்கி நவீன வணிகத்தொகுதி அமைக்க சந்தைக்குப் பின்புறத்தில் உள்ள 3 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்யவுள்ளோம். இதற்கான நடவடிக்கையில் உறுப்பினர் வியாகேசு தலைமையிலான குழு ஈடுபட்டுள்ளது. இந்தக் காணியை கொள்வனவு செய்ததும் சந்தைக்கென 9 பரப்புக்கு மேற்பட்ட காணி கிடைத்தவிடும். அத்துடன் சந்தைக் காணிக்குப் பின்புறமாகவும் புதிய வீதி ஒன்றையும் வாகனத் தரிப்பிடத்தையும் அமைப்பதன் மூலம் அங்கு நிறுவப்படும் வணிகத் தொகுதிக்கு வாடிக்கையாளர்களைக் கவர முடியும்.

வரி அறவீட்டுக்கான மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் பூர்த்தி அடைகின்றன. பூர்வாங்கப் பணிகள் நிறைவுற்றதும் ஏப்ரல் மாதம் முதல் வரிகளை வசூலிக்க முடியும். இந்த ஆதனவரிகள் மூலம் 4 கோடி ரூபா தொடக்கம் 6 கோடி ரூபா வரை வருமானமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வேள்ட் விசன் நிறுவனத்தின் உதவியுடன் எமது சபையில் பிளாஸ்ரிக் போன்ற பொருள்களை மீள் சுழற்சி செய்யப்படவுள்ளன - என்றார். (173)

## கால் நடைகளை கட்டி வளர்க்குக

யாழ்ப்பாணம், ஒக். 15

கோப்பாய் மற்றும் நீர்வேலி வயல் பிரதேசங்களில் நெல் விதைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது பெய்த மழையை அடுத்து வயல்களில் செய்கையாளர்கள் நெல்விதைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வேளையில் கால்நடை வளர்ப்போர் அவற்றை கட்டி வளர்க்குமாறு விவசாய சம்மேளனங்கள் கேட்டுள்ளன. (ம-17)



வலி வடக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட மத்தியஸ்தர் சபையில் கடந்த இரு தடவைகளாக தொடர்ந்து தவிசாளராக்ச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் திருமதி சுரேஸ்குமார், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அண்மையில் மதிப்புறுத்தப்பட்டார். (ம-36)

# முதியோர்களுக்கு உதவி

முதியோர் மற்றும் சிறுவர் தினத்தை முன்னிட்டு இணுவில் மத்தியகல்லூரியைச்சேர்ந்தகல்விச்சமூகத்தினர்கைதடிமுதியோர் இல்லத்துக்குச் சென்று அங்குள்ள முதியோர்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களுக்கு உதவிப் பொருள்களையும் வழங்கினார்கள். கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மாணவர்கள் தம்மால் சேகரிக்கப்பட்ட பிஸ்கட், சவர்க்கார வகைகள்உட்படபலஉதவிப்பொருள்களைமுதியோர்களுக்கு வழங்கிவைத்தனர். தொடர்ந்துமாணவர்களால்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-17)

## கட்டாக்காலிகளைப் பிடிக்க களத்தில் இறங்கிய பிரதேச சபை



வவுனியா.ஒக் .15

வீதிகளில் திரியும் கட்டா காலி மாடுகளால் வீதி விபத்து, போக்குவரத்து சிக்கல்கள் வழமையாக இடம்பெறுவது யாவரும் அறிந்ததே. இதற்காக செட்டிகுளம் பிரதேச சபை ஊழியர்கள் வாகனம் சகிதம் நேரடியாக களத்தில் குதித்துள்ளனர்.

எனினும் பிரதான வீதிகளுடன் சேர்த்து உள்வீதிகளில் உள்ள மாடுகளையும் பிரதேச சபையினர் கட்டி வைத்து, உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க தற்போது செட்டிகுளம் பிரதேசத்திலுள்ள கிராமங்களில் வலம் வந்து கொண்டிருக்கின்றனர். எனவே முன்னேற்பாடாகவும், சிரமங்களை தவிர்த்துகொள்ளும் முகமாகவும் தங்களது கால்நடைகளை வீதியில் திரிய விடாது கட்டி வைக்குமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(222)

# உள்ளக வீதிகளை சீரமைக்குமாறு நானாட்டான் மக்கள் கோரிக்கை

மன்னார்,ஒக். 15

**கடந்த வாரம் பெய்த கனமழையின் காரணமாக, நானாட்டான் பிரதேசத்தில் உள்ள எருவிட்டான், இராசமடு முள்ளிமோட்டை எனப் பல கிராமங்களின் உள்ளக வீதிகள் கடுமையாக சேதமாகி ,பள்ளங்களில் நீர் நிரம்பி சகதியாகியுள்ள நிலையில், பாடசாலை மாணவர்கள் முதியவர்கள் பெண்கள் எனப் பலரும் சிரமத்தினை எதிர் நோக்கியுள்ளார்கள்.எனவே சம்பந்தபட்ட அதிகாரிகள் குறித்த வீதிகளை விரைவில் சீரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.**

இந்த வீதிகள் தொடர்பாக நானாட்டான் உபதவிசாளர் புவனத்திடம் கேட்ட போது:

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் பல வீதிகள் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. ஒதுக்கீடு செய்யப்படும் பணத்தில் , ஒரு கிராமத்தில் அனைத்து வீதிகளையும் திருத்தம் செய்ய முடியாது. தற்போது அவசர தேவை உள்ள வீதிகள் மட்டுமே திருத்தம் செய்யப்படுகிறது. மக்கள் உழவு இயந்திரங்கள் தந்து உதவி செய்தால் சில சமூக நல செயற்பாட்டாளர்களிடமுள்ள பைக்கோ போன்ற வாகனங்கள் பெற்று, வீதி திருத்த உதவி செய்யப்படும் என்று நானாட்டான் பிரதேச சபையின் உபதவிசாளர் புவனம் தெரிவித்தார்.



## பனை மரம் அகற்றியவர்கள் கைது

கிளிநொச்சி,ஒக்.15

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தனியார் காணி ஒன்றில் நேற்றுக் காலை அனுமதி இன்றி பனைமரங்களை ஜே.சி.பி கொண்டு அகற்றிய குற்றச்சாட்டில் காணி உரிமையாளர் மற்றும் வாகன சாரதி ஆகியோர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸார் சந்தேகநபர்கள் பயன்படுத்திய வாகனம் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் கிளிநொச்சி மாவட்ட சிறப்பு பிரிவு பொறுப்பதிகாரி சத்துரங்கவிடம் பாரப்படுத்தியுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களை இன்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்த இருப்பதாகச் சிறப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (35)



## உதவி வழங்கல்

வவுனியா .ஒக் .15

வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாக ராசாவின் 2018 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து, கனகராயன்குளம் வடக்கு லக்சபானா வீதி, பெரியகுளம் காளிகோயிலுக்கு ,ஐம்பதாயிரம் ரூபாவும், கொர்லர்புளியங்குளம் சிறிமுத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாவும், பிரதானமின் இணைப்பு வழங்குவதற்காகப் பெரியகுளம் பாலையடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு இருபதுனாயிரம் ரூபாவும், வைரவபுளியங்குளம் கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவினால் கடந்த 10 ஆம் திகதிவழங்கிவைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வகளில் ஆலங்களின் தலைவர், செயலர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

## புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

அம்பாறை.ஒக்.15

அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வனப்பகுதியில் அளிக்கம்பை கிராமம் காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் தங்களுக்குள்ளே தெலுங்கு மொழியை பேசுகின்றனர். இவர்கள் ஒதுக்கப் பட்டவர்களாக அடிப்படை வசதிகள் இன்றி பல தரப்பட்ட இன்னல்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இதன்படி இந்தக்கிராம பிள்ளைகள் இங்குள்ள புனித சவேரியார் வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர். இந்தப்பாடசாலையானது, உட்கட்டுமான வசதிகள் மற்றும் பிள்ளைகளுக்கு போதுமான தளபாடங்கள் இன்றியும் ஆசிரியர் பற்றாக்குறையுடனும்காணப்படுகின்றது. இதன்படிஇம்மாதம் வெளியாகியுள்ள தரம் 5 புலமை பரிசில்பரீட்சையில் முதன்முறையாக இப்பாடசாலை வரலாற்றில் 169 புள்ளிகளைப்பெற்று பிலிப் ஜபிக்சன் என்ற மாணவன் சாதனை படைத்துள்ளார். அத்துடன் பல மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுள்ளனர்.

இதன்படி இம்மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு 8 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி ந.புள்ளநாயகம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் குணாளன் ஆகியோரும் கலந்துகொண்டனர் .

1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பாடசாலையானது கவனிப்பாரற்று கல்வியில் பின்தங்கி காணப்பட்டதனால் பாடசாலை வரலாற்றில் இதுவரை இரு மாணவர்களே புலமைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமையும் சிறப்பு அம்சமாகும்.





## ஆசிரியர் மதிப்பளிப்பு நிகழ்வு

கிளிநொச்சி, ஒக் .15

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் ம.அருணன் தலைமையில் கல்லூரியின் பொன்சபாபதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களால் மாலை அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டு, மாணவர் மன்றத்தினரால் நினைவுப் பரிசில்கள் வழங்கியும் மதிப்பளிக்கப்பட்டனர் .

கலை நிகழ்ச்சிகளாக ஆசிரியர்களின் நடனநிகழ்வுகளும், பாடல்களும் இடம் பெற்றதோடு, மாணவிகள் வரவேற்பு நடனம் மற்றும் ஆசிரியர்களை வாழ்த்திப் பாடல்களையும் வழங்கியிருந்தனர்.

(159)

# வீதி சீரமைப்புச் செய்ய இரு அரசியல் கட்சிகளுக்கிடையே போட்டி

மன்னார்.ஒக் .15

மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான வீதி ஒன்றை சீரமைக்கும்படி கடந்த கால பிரதேச சபை நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு முடிவுகாணாமல் இருந்தபோதும், தற்பொழுது ஏட்டிக்குப் போட்டியாக இந்த வீதியை சீரமைப்பதில் இரு கட்சி சார்பானவர்கள் மத்தியில் பிரச்சினை தலைதூக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது: மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்டபேசாலை மீனவர்கள் மற்றும் நாலாம் வட்டார மக்கள் நடமாடும் முக்கிய வீதியான புனித யோசப் வீதி நீண்டகாலமாக மிகவும் பாதிப்படைந்த நிலையில் காணப்பட்டதாகவும், இவற்றை சீரமைக்கும் நோக்குடன் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் திருமதி ஆர்.டிப்னா குரூஸ் , என்.செபமாலை பீரிஸ் ஆகியோர் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியுதீனிடம் கேட்டுக் கொண்டதுக்கு இணங்க, அவருடைய அமைச்சின் நிதியிலிருந்து ஒரு கோடியே 42 லட்சம் ரூபா நிதியின் கீழ் ஒரு கிலோ மீற்றர் தூரமுள்ள கார்ப்பட் வீதியாக இவற்றை சீரமைப்பதற்கான நடவக்கை கடந்த மே மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டுத் தற்பொழுது இந்த வீதிக்கான ஆரம்ப வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 45 லட்சம் ரூபா செலவில் ஒரு குறிப்பிட்ட தூரம் வரை இதே வீதியை கிரவல் வீதியாக அமைப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதனால் இந்தப் பகுதிக்கு கார்ப்பட் வீதியே வேண்டும் என்று ஒரு சாராரும், எங்களுக்கு கிரவல் வீதிதான் வேண்டும் என்று இன்னொரு சாராரும் கையொப்பம் இட்டு மன்னார் பிரதேச சபை தவிசாளரிடம் கையளித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இவ் வீதியை சீரமைத்து தாருங்கள் என அன்றைய ஆட்சியாளர்களிடம் வேண்டியும், தற்பொழுது நீயா நானா என்ற அரசியல்நோக்கால்இருகுழுக்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இது விடயமாக மன்னார் பிரதேச சபை தவிசாளரிடம்வினவியபோது: தாங்கள் ஏற்கனவே இந்த வீதியை கார்ப்பட் வீதியாக அமைப்பதற்கு இதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு நிதி விடுவிக்கும் தருணத்தில் இருக்கின்றது.

அதேநேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்மைப்பு சாரார் இவற்றை கிரவல் வீதியாக அமைப்பதற்கு மதிப்பீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என நேற்று முன்தினம் ஒரு சில பொது மக்களை கூட்டிக் கொண்டு வந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நான் இவர்களின் நிதியை வேறொரு வீதிக்கு சிபாரிசு செய்து தருவ தாக தெரிவித்தும் அவர்கள் ஒத்துக்கொள்ள வில்லை. இருந்தும் எவருடைய நிதி முதல் கிடைக்குமோ அவர்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும் எனத் தெரிவித்தார். (60)

முள்ளிக்குளம் மக்கள்

# தற்காலிக கொட்டகை அமைக்க கடற்படையினரால் இடையூறு

மன்னார் ,ஒக் .15

மழை வெள்ளம் மற்றும் யானைகளின் அட்டகாசத்துக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் முள்ளிக்குளம் மக்கள் தங்களுக்கு விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட காணியில் பாது காப்பு கருதி, தற்காலிக கொட்டகை அமைத்து இருப்பதற்காக எடுத்த முயற்சியை தடுத்து நிறுத்த கடற்ப்படையினர் எடுத்த நடவடிக்கையால் ,அப்பகுதி மக்களுக்கும் கடற்படையினருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.



இதனால் கடற்படையினருக்கும் மக்க ளுக்கும் இடையே ஏற்பட முறுகல் நிலையை அடுத்து அந்தப் பகுதி பங் குத் தந்தையின் உத்தரவாதத்துக்கு அமையமக்கள் தற்காலிக கொட்டகை அமைப்பதைக் கைவிட்டுள்ளனர்.

முள்ளிக்குளம் மக்கள் அங்கு மீள்குடி யேறச் சென்றபொழுது அவர்களின் குடியிருப்புக் காணிகள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விடுவிக்கப்படும் என்ற காரணத்தினால், கடந்த பல மாதங்களாக முள்ளிக்குளம் பகுதியில் காடுகளில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

முள்ளிக்குளம் மக்கள் காட்டுப்பகுதிப் பள்ளத்தாக்கில் தற்காலிக கொட்டகை அமைத்து இருப்பதால் அப்பகுதியில் மழை நீர் வெள்ளமும், அத்துடன் காட்டு யானையகளின் தொல்லையும் அதிகரித்ததைத் தொடர்ந்து, தங்க ளுக்கு விடுக்கப்படுவதாக

தெரிவித்த, குடியிருப்புக் காணியில் தற் காலிக கொட்டைகள் அமைப்பதற்கான முயற்சிகள் கடந்த வியாழக்கிழமை முதல் எடுக்கப்பட்டபோது, அப்பகுதி கடற்படையினர் அவற்றை தடுத்து நிறுத்தி வருவதாகக் கவலை தெரிவிக் கப்படுவதுடன்,

இரு பகுதியினருக்குமிடையே முறு கல் நிலைகள் தோன்றும் அபாயமும் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தப் பகுதி மக்கள் மழை வெள்ளத் தாலும் காட்டு யானைகளின் தொல் லையாலும் அவதிப்படுவதை அவ்வூர் பங்கு தந்தை அருட்பணி லோறன்ஸ் அடிகளார் கவனித்தபோதும், அப்பகுதி யில் கடற்படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையே அமைதி நிலை தோன்ற வேண்டும் என்ற நிலையை கவனத்தில் எடுத்து, இது விடயமாக அரசியல் தலைவர்களு டன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுநல்ல முடிவுகளுக்கான நடவடிக்கை எடுப்பதாக தெரித்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து இவர்களுக்கு விடு விக்கப்பட இருப்பதாக தெரிவித்த காணியில் தற்காலிகக் கொட்டகை அமைப்பதை கைவிட்டு மீண்டும் பாதுகாப்பற்ற இடத்துக்குத்திரும்பியுள்ள தாகவும் கூறப்படுகிறது.

இது விடயமாக அப்பகுதி மக்கள் எமது நிருபருக்கு தெரிவிக்கையில் பல போராட்டங்களின் பின்னர் நாங்கள் எங்கள் கிராமத்துக்குள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டிருந்தோம்.

எங்கள் வீடுகளில் கடற்படையினரின் குடும்பங்கள் அமர்ந்திருக்க நாங்கள் எங்கள் வீடுகளுக்கு முன்பாக உள்ள காட்டுப்பகுதிக்குள் தற்காலிக கொட்ட கைகள் அமைத்து பாதுகாப்பற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றோம்.

நாங்கள் மீள்குடியேறுவதற்கு வருகை தந்தபொழுது குறிப்பிட்ட காலத்துக்குள் எங்களின் வீடுகள் விடு விக்கப்படும் எனவும் அதேநேரத்தில் எங்களின் குடியிருப்பு காணிகள், குறிப்பிட்டக் காலத்தில் விடுவிக்கப்படும் எனவும் எங்களுக்கு உத்தரவாதமளிக் கப்பட்டது. ஆனால் காலங்கள் கடந்தும் இவைகள் நடைமுறைப்படுத்தப்பட வில்லை என மக்கள் தெரிவித்த னர். (60)

# கனடா புன்னகை அமைப்பின் உதவியால் விதவைத் தாயின் வீட்டில் இருள் விலகியது

வவுனியா .ஒக் .15

கனடா புன்னகை அமைப் பினரால் அமரர் குமார வேலு சபாரத்தினத்தின் 31 ஆம் நாள் நினைவாக வித வைகுடும்பத்தின் வீட்டுக்கு மின்சாரம் பெற்றுக் கொள் வதற்கான நிதியுதவி அண் மையில் வழங்கப்பட்டது.




வவுனியா ஈஸ்வரி புரத்தில் இரண்டு பிள்ளைகளின் தயாரான ஜெகன் யோக ராணி என்பவரின் கணவர் 2006 ஆம் ஆண்டு இரா ணுவத்தினரால் கொல்லப் பட்டார் . மிகவும் வறிய நிலையில் யோகராணி யின் வயோதிப தந்தையா ரின் பராமரிப்பில் தனது இரண்டுபிள்ளைகளையும் பராமரித்து வந்தநிலை யில் தந்தையாரும் 2014 ஆம் ஆண்டில் காலமாகி யதைத் தொடர்ந்து மிகவும் வறிய நிலைக்கு தள்ளப்பட் டார். குறித்த வீட்டிற்கான மின்சார கட்டணம் செலுத் தாத காரணத்தினால் கடந்த நான்கு வருடங்களாக மின் சாரமும் துண்டிக்கப்பட்டி ருந்தது. இந்தக் குடும்பத்தின் நிலை தொடர்பாக கனடா புன்னகை அமைப்பினரி டம் தெரிவித்தபோது இவ ரின் நிலையைக் கருத்திற் கொண்டு அமரர் குமார வேலு சபாரத்தினத்தின் 31 ஆம் நாள் நினைவை முன் னிட்டுகனடாசமூகஆர்வலர் உமாகாந்தன் சசிகலா குடு பத்தினரால் கனடா புன் னகை அமைப்பின் ஊடாக வவுனியா இணைப்பாளர் வழங்கி வைத்தார். குறித்த நிகழ்வில் கிராம அபிவிருத் திச் சங்கத்தின் தலைவர் மற்றும் சமூக ஆர்வலர் மாணிக்கம் ஜெகன் உட் பட பல்வேறு பொது அமைப்பினரும் கலந்து கொண்டனர் (110)

# வவுனியாவில் இளையோர் பரிமாற்று வேலைத்திட்டம்

தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான இளையோர் பரிமாற்று வேலைத்திட்டம் வவுனியாவில் நடைபெற்று வருகின்றது. அதன் கீழ் மொனராகலையில் இருந்து வருகைதந்திருந்த சிங்கள, முஸ்லிம் இளையோர்கள் ,வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளை நேற்று மேற்கொண்டனர்.

இனங்களுக்கிடையில் ஒன்றுமையினை ஏற்படுத்தும் நோக்கோடும், சகோதர இனத்தவரது கலை, பண்பாட்டம்சங்களை ஏனையோரும் புரிந்துகொள்ளும் வைகையில் குறித்த பூசை வழிபாடுகள் ஏற்பாடுசெய்யபட்டிருந்தது. (110)

# வவுனியா நகரசபையின் 'எழுநீ பண்பாட்டு முற்றம்'

வவுனியா,ஒக் .15

"எழுநீ பண்பாட்டு முற் றம்" நடத்தும் பல்துறை சேவையாளர் விருது வழங்கும் 2018 ஆம் ஆண்டுக்கான நிகழ்வு நிகழ்வு இடம்பெறவுள் ளது. வவுனியா மாவட் டத்தில் இலை மறை காயாக இருக்கும் பல் துறை சேவையாளர் களை 30 தொடக்கம் 60 மற்றும் 60 ற்கு மேல் என இரு பிரிவுகளாக பிரித்து "எழுநீ விருதுகள் " வழங்கி மதிப்பளிக்கப்ப டவுள்ளனர்.

ஆகவே தது வவுனியா மாவட்டத்தில் இலை மறை காயாக இருக்கும் பல்துறை சேவையாளர் களின் விபரங்களை வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நகரசபை அலு வலகத்தில் ஒப்படைக்கு மாறு கேட்டுக்கொள்கிவ தோடு மேலதிக விபரங் களை 0774248267 என்ற தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொண்டுபெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது. (222)



# சிறுவர் தின நிகழ்வுகள்

மன்னார் ,ஒக் .15

சிறுவர் தினத்தையொட்டி மாந்தை மேற்கு பிரதேச செயல கம் ஏற்பாடு செய்திருந்த சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முந்தினம் மடு கல்வி வலயத்திற்குறப்பட்ட தேவன் பிட்டி றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையில் இடம் பெற்றது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம் பெற்ற சிறுவர் தின நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேசச் செயலர் எஸ்.கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன் போது சிறுவர்களுக்கான பல்வேறு போட்டிகளும் கலை நிகழ்வுகளும், பரிசளிப்பு விழாவும் இடம் பெற்றது.

கலை நிகழ்வுகளின் போது சிறுவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்திய நிலையில் பல்வேறு நிகழ்வுகளை அரங் கேற்றினர். சிறுவர்களுக்குப் பரிசில்களும் வழங்கி வைக் கப்பட்டது.

மேலும் மடு கல்வி வலயத்திற்குறப்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் களும் மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (56)

# முதியோர் சிறுவர் தின விழா

வவுனியா,ஒக் .15

வவுனியா மாளிகை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அலைகல்லு போட்டகுளம் கிராமத்தில் முதியோர் சிறு வர் தின விழாநேற்று முன் தினம் கிராம அலுவலர் நா.சிறிதரன் தலைமை யில் நடைபெற்றது.

முயற்சி அறக்கட்டளை யின் ஏற்பாட்டில் நடை பெற்ற இந்த நிகழ்வில் வவு னியா உதவிப் பிரதேச செயலர் திருமதி.ச.பிரிய தர்சினி முதன்மை விருந் தினராகக் கலந்துகொண்டி ருந்தார்.

நிகழ்வில் விருந்தினர்கள் மற்றும் வயோதிபர்கள் மாலை அணிவித்து மண் டபத்திற்கு அழைத்து வரப் பட்டு மங்கள விளக்கேற்ற லுடன் நிகழ்வுகள் ஆரம்ப மாகியது.

சிறுவர்களின் குழுப்பாடல், கிராமிய நடனங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது டன், நிகழ்வில் பங்குபற் றிய சிறுவர்கள் அனைவ ருக்கும் முயற்சி அறக்கட்ட ளையின் நிறுவனர் கே. சந்திரகுமாரினால் பரிசில்கள் வழங்கி வைக் கப்பட்டது.

முதியோர்களை மதிப்ப ளித்து அவர்களுக்கான பரிசில்களை வவுனியா விஜியா பில்டர்ஸ் உரிமை யாளர் கு.விஜயரத்தினத்தி னால் வழங்கி வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட சமூகசேவைகள் உத்தி யோகத்தர் எஸ்.எஸ். வாசன், மாளிகைக் கிரா மத்தின் அபிவிருத்தி உத்தி யோகத்தர் எஸ்.சுரேன், நொச்சிக்குளம் கனிஸ்ட உயர்தரவித்தியாலயத்தின் அதிபர் க.ஜெயக்குமார், அலைகல்லு போட்டகுளம் வீரமாமுனிவர் வித்தியால யத்தின் அதிபர் ச.சிவக ணேசன், கிராம அலுவலர் சிறிநாகராயா, முதியோர் மேம்பாட்டு உத்தியோகத் தர் திருமதி.அ.பிரகாசினி, கிராம மட்ட பொது அமைப் புக்கள் மற்றும் சமூக ஆர் வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (110)







## மறவன்புலவில் சிறப்பாகியது சிறுவர் முதியோர் மதிப்பளிப்பு

கொடிகாமம், ஒக். 15

முதியோர் மற்றும் சிறுவர் தினத்தையொட்டி முதியோர் மற்றும் சிறுவர் மதிப்பளிப்பு நிகழ்வு மறவன்புலவு சிறிபேச்சியம்மன் ஆலய முன்றலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஐக்கிய நாணய சங்க செயலாளர் நா. சிவலிங்கம் தலைமையில் இது நடைபெற்றது.

மறவன்புலவு சிறிபேச்சியம்மன் ஆலயத்தின் கீழ் மறவன் புலவு மத்திஇணைந்தகரங்கள்அமைப்பினர் இதனை நடத்தினர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேச சபை வட்டார உறுப்பினர் அ. நிமலரோகன், சிறப்பு விருந்தினர்களாக ஜே/298 மறவன்புலவு கிராம அலுவலர் ந. தனபாலசிங்கம், ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர் வி. சகாதேவன், திருமதி சகாதேவன், சாவகச்சேரிப்பிரதேசசபைஉறுப்பினர் வை. ஜெகதாஸ், மறவன்புலவு சச்சிதானந்தன் கலந்து கொண்டனர். அதில்கிராமமக்கள் பொது அமைப்புகளின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மூத்த குடிமக்களுக்குச்சிறுவர்கள்மாலைஅணிவித்து ஆசி பெற்றனர். சிறு வர்களுக்குப்பரிசில்களும்குளிர்காலம் ஆரம்பித்ததால்முதியோர்களுக்கு கம்பளிப்போர்வைகளும்அவர்களின் நிழற்படம் பதித்த வாழ்த்து மடலும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

கிராம மக்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலமாக நிதி சேகரித்து மக்கள் இணைந்த கரங்களின்அமைப்பின்ஊடாகச்சிறுவர் முதியவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர்சகாதேவன், மறவன்புலவு சச்சிதானந்தன் ஆகியோர்மக்கள்இணைந்தகரங்கள் அமைப்புக்கு நிதியுதவி வழங்கினர்.

விருந்தினர்களாககலந்துகொண்டவர்கள்முதியோர்களைவிழுந்து வணங்கி ஆசிபெற்றனர்.

(4.159)

## ஆசிரியர் தின விழாவும் நிலைய நூல் வெளியீடும்

கொடிகாமம், ஒக். 15

மட்டுவில்கிழக்குசிறிகிருஷ்ணாகல்விநிலையத்தின் ஆசிரியர்தினவிழாவும் நூல் வெளியீடும் கல்வி நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாணவி செல்வி சி. நிந்துஷா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான கே. சயந்தன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், மட்டுவில்கமலாசினிவித்தியாலய அதிபர்ஜ. தேவராஜன், கிராம அலுவலர் க. கார்த்திகேயன், மதிப்புறு விருந்தினர்களாக கல்வி நிலைய ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணதாரன்களனும்நூலைக்கல்விநிலைய இயக்குநர்சாவ. ரஜீபன் வெளியிட்டு வைக்க முதன்மை விருந்தினர் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். நூல் வெளியீட்டுரையை கல்வி நிலைய ஆசிரியர் விஜயரூபன் நிகழ்த்தினார். போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி. அபராஜிதன் மதிப்பீட்டுரை நிகழ்த்தினார்.

ஆசிரியர்களும் விருந்தினர்களும் கல்வி நிலையத்தினரால் மதிப்பளிக்கப்பட்டனர். இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(4.159)



# பேருந்துநிலையத்துக்கு இளம் பச்சை வர்ணம்

## சிலர் ஆட்சேபிக்கின்றனர்

சாவகச்சேரி, ஒக். 15

**சாவகச்சேரி பேருந்து நிலையக் கட்டடத்துக்கு குருத்துப் பச்சை வர்ணம்பூசப்பட்டமைகுறித்துபொதுமக்கள்விசனம்தெரிவித்தனர்.**

முன்னர் பூசப்பட்டிருந்த வர்ணத்துக்கு மாறாகப் புதிய வர்ணம் தீட்டும் பணிகள் தனியார் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டது. இதன் போதுதினமும்நூற்றுக்கணக்கான மக்கள் பயணிக்கும் பேருந்து நிலையத்தில் சகோதர இனமான முஸ்லிம்கள் தமது பள்ளிவாசலுக்குப்பயன்படுத்தும்குருத்துப்பச்சை வர்ணத்தைப்பொதுமக்கள்பயன்படுத்தும் பேருந்து நிலையக் கட்டடத்துக்குப்பூசியுள்ளமைகுறித்துக் கவலைதெரிவித்தனர்.

பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ளநவீனசந்தைக்கட்டடத்துக்கும் வெவ்வேறு வர்ணங்கள் பூசுவது நகரின் அழகைக் கெடுக்கும் செயலாக இருக்குமெனவும் கவலைதெரிவித்தனர்.

இது தொடர்பாக நகரசபை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டபோது, நகரப் பகுதியில் உள்ள வர்த்தகர் பேருந்துநிலையக்கட்டடத்துக்குத் தனது செலவில் வர்ணம் தீட்டவுள்ளதாக விடுத்த வேண்டுகோளையடுத்து அனுமதி வழங்கப்பட்டது. வர்ணம் பற்றிய விவரம் பின்னர் தெரிவிப்பதாக கூறியபோதிலும் சபையினருக்கோ தொழில்நுட்ப அலுவலருக்கோ தெரியாமல் புதிதாக வர்ணம் பூசியுள்ளார். இது தொடர்பாகப் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிப்பதால் வேறு வர்ணம் பூசுவது ஆராயப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (4,9,159)

## குடாவின்பாடசாலைமாணவர்களுக்கு நாவலர்விழாவையொட்டிப்போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 15

ஆறுமுகநாவலர் விழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு யாழ்ப்பாணமாவட்டம்தழுவியரீதியில் நடத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான திறந்த பிரிவு வினாடி வினாப் போட்டிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் கரிகணண் பதிப்பகமும் இணைந்துஇந்தவிழாவைநடத்துகிறன.

இந்தப் போட்டி குறித்துத் தமிழ்ச் சங்கத்தினர் தகவல் வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டாவது:

இது ஒரு குழு நிலைத் திறந்த போட்டி.

### குழு அமைப்பு முறை

- ஒரு பாடசாலையை பிரதி நிதித்துவப்படுத்தி ஐந்து மாணவர்களைக் கொண்ட ஒரு அணியை அமைக்கவேண்டும். வயதுபால் வேறுபாடின்றிமாணவர்கள்எந்தத்தரத்தில்கல்விகற்பவராகவும் இருக்க முடியும். (2018 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் கலந்து கொள்ளலாம்)
- குழுவில் ஐந்துக்கும் மேற்பட்ட மாணவர்களை இணைக்கமுடியும். ஆனால் போட்டியின் ஒரு சுற்றில் ஐந்து மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும். சுற்று மாறும்போது மாணவர்களைமாற்றிக்கொள்ளலாம்.
- குழு பாடசாலையின் பெயராலேயே அழைக்கப்படும்.

### போட்டியின் அமைப்பு

- ஐந்து சுற்றுக்களைக் கொண்டதாக இந்தப் போட்டி அமையும். ஒவ்வொரு சுற்றிலும் பத்து வினாக்கள் கேட்கப்படும்.

வினாவுக்கு விடையளிப்பதற்கு ஒருநிமிடம்வழங்கப்படும். குழுவாக கலந்துரையாடி கேட்கப்பட்ட வினாவுக்கான விடையை தரப்பட்ட தாளில் எழுதி சுற்று நிறைவில் ஒப்படைக்கவேண்டும்.

விடைகளை தீர்மானம் செய்ய ஒவ்வொருசுற்றின்நிறைவிலும் ஒருநிமிடம்வழங்கப்படும்.

- ஐந்துசுற்றுக்கள்பின்வருமாறு அமையும்.

நாவலரின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புடைய வினாக்கள், நாவலரின் சைவ வினாவிடைமற்றும்பாலபாடம்தொடர்பான வினாக்கள், சைவ சமய பாடத்திட்டத்துக்கு உட்பட்ட வினாக்கள், பொதுவான சமய அறிவுசார்ந்தவினாக்கள், தமிழறிவு சார்ந்த வினாக்கள்.

எதிர்வரும்29ஆம்திகதிக்குமுன்னர் விண்ணப்பப் படிவங்களை அனுப்ப வேண்டும்.

எதிர்வரும்நவம்பர்மாதம்5ஆம் திகதி திங்கள்கிழமை பி.ப 2 மணிக்குப்போட்டிநடைபெறும். தங்கள்பாடசாலைகலந்துகொள்ளவிருப்பதை உறுதிப்படுத்திய அதிபரின் கடிதம் அல்லது மின்னஞ்சல் அல்லது செய்தியைப் பொறுப்பாசிரியரின் தொலைபேசி இலக்கத்துடன் பின்வரும் வழியில் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம்.

தபால் முகவரி : யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்

இல. 28, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். மின்னஞ்சல்: vanshajee24@gmail.com

### பரிசு விபரம்

போட்டியில் கலந்துகொள்ளும் அத்தனை மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. முதல் மூன்று நிலைகளைப்பெறும்பாடசாலைகளுக்கு வெற்றிக்கிண்ணமும்மாணவர்களுக்கு பதக்கங்களும் பரிசுகளும்வழங்கப்படும்.

- பொறுப்பாசிரியருக்கான பரிசு

முதல்நிலை பெற்ற பாடசாலையின் பொறுப்பாசிரியருக்கு நினைவுச்சின்னமும் பாராட்டுப் பத்திரமும்முதல்மூன்றுநிலைகளைப் பெற்ற பாடசாலைகளை வழிநடத்திய பொறுப்பாசிரியர்களுக்கு பாராட்டுப்பத்திரமும் வழங்கப்படும்.

- பாடசாலைக்கான பரிசு

முதல்மூன்றுஇடங்களைப்பெற்ற பாடசாலை நூலகங்களுக்கு பெறுமதியான புத்தகப்பொதி வழங்கப்படும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## தாக்குதலில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஒக். 15

தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் தலை மற்றும் கால் ஆகியவற்றில் பாதிப்புக்குள்ளான ஒருவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்து கொடிகாமம் பாலாவியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது. பாலாவி வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த மகேந்திரன் ரமேஸ் (வயது 23) சாவகச்சேரி மருத்துவமனையிலும், பாலாவி கொடிகாமத்தைச் வல்லிபுரம் உதயகுமார் (வயது 46) யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர்.

(4.9)

## உந்துருளியில் சென்றவரை வாகனம் மோதி தப்பி ஓட்டம்

சாவகச்சேரி, ஒக். 15

வீதியில்சென்றஉந்துருளியை மற்றொரு வாகனம் மோதிவிட்டுத் தப்பியோடியுள்ளது. விபத்தில்காயமடைந்தவர்யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து கொடிகாமம் வரணி வீதியில்நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வரணி இயற்றாலையைச் சேர்ந்தமூர்த்திசாரூஜன்(வயது 24) என்பவரே காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் உந்துருளியில் பயணித்துள்ளார். வரணியை அண்மித்த வேளையில் அந்த வழியேவந்தவாகனம்மோதித் தள்ளிவிட்டுத் தப்பியோடியுள்ளது. காயங்களுக்கு இலக்காகி வீதியில் காணப்பட்ட அவர் 1990 நோயாளார்காவுவண்டி மூலமாகச்சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (4,9)

# அடாவடித்தனம் நுழையும்போதுதான் சிக்கல்கள் ஆரம்பமாகிவிடுகின்றன!

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 15**

**ஒரு ஆண் ஒரு பெண்ணின் அன்பிற்கே அடிமையாகின்றான், அடாவடித்தனத்திற்கு அல்ல. அவளின் அடாவடித்தனத்தை எதிர்பார்க்கும் அல்லது இரசிக்கும் ஆண் மனோநிலை பாதிக்கப்பட்டவன் என்றே கொள்ள வேண்டும். பெண்களும் அப்படித்தான். ஓர் ஆணின் அன்பிற்கே பெண் அடிமையாகின்றாள். ஆனால் அங்கு அடாவடித்தனம் நுழையும் போது தான் சிக்கல்கள் ஆரம்பமாகின்றன.**

இவ்வாறு வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கலாலயா இசை நடனப்பள்ளி சிறிலங்கா தமிழ் மகளிர் ஒன்றியம் இணைந்து நடத்திய வருடாந்த நவராத்திரித் திருவிழா கொழும்பு 7 பௌத்தாலோக மாவத்தையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் 'பெண்ணியமும் கண்ணியமும்' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்பில் ஆண்டான் அடிமை என்ற பேதத்திற்கு இடமில்லை. அன்பிற்கு அடிமையாவது என்பது ஆண்டானையும் அடியாளையும் சமநிலையில் இணைக்கின்றது. உண்மையில் அன்புக்கு அடிமை என்பது ஒரு பிழையான சொற்றொடர். அன்பில் அடக்கம் என்பதே அதன் அர்த்தம்.

ஆகவே அடாவடித்தனத்தை ஆண்கள் வாழ்கையிலும் பெண்கள் வாழ்க்கையிலும் தவிர்ப்பதே கண்ணியமாகும். கண்ணியம் என்ற சொல் மதிப்புடைய, மாண்புடைய என்று பொருள்படும். ஆண்களும் பெண்களும் மாண்புடனும், மதிப்புடனும், விட்டுக்கொடுக்கும் மனோபாவத்துடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். ஆணோ பெண்ணோ ஒருவர் தான்தோன்றித்தனமாக வாழத்தலைப்பட்டால், தப்பாக நடக்கத் தலைப்பட்டால், தவறாக நடக்கத் தலைப்பட்டால், திசை மாறிச் செல்ல எத்தனித்தால் அங்கு கண்ணியம் போய்விடுகின்றது.

தான்தோன்றித்தனம் என்பது அகங்காரத்துடன் செயற்படுவது. அவ்வாறு செயற்படும் போது கண்ணியம் போய்விடுகின்றது. மாண்பு கலைந்து விடுகின்றது. தப்பாக நடப்பது என்பது குடும்பத்தின் எதிர்பார்ப்புக்கு மாறாக நடப்பது. தவறாக நடப்பது என்பது சமூகத்தின் எதிர்பார்ப்புக்கு எதிராகச் செயற்படுவது. திசைமாறுவது என்பது கண்ணிய வாழ்க்கைக்கு மாறாக நடக்க எத்தனிப்பது. எனவே பெண்ணியம் பற்றிச்சிந்திப்போர்இன்றையவாழ்க்கை முறையின் சுழிவு நெழிவுகளைப் புரிந்து கொண்டே கருத்துக்களை வெளியிட வேண்டும்.

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும், பிரச்சினைகளையும் புரிந்துகொண்டு அவற்றைக்களைய முற்படுவதாகும்.

**எப்பொழுதும் போராடுவது என்பது வன்மனோநிலை**

பெண்ணியம் என்பது பொதுவாகவே போராடுவது என்று பொருள்படுகின்றது. எப்பொழுதுமே போராடுவது என்பது ஒருவித வன்மனோநிலையை உண்டுபண்ணுகின்றது.

பெண்ணியம் ஆணுக்கு எதிரானது அன்று. அது ஆணாதிக்கத்தை எதிர்ப்பது. ஆண் பெண் சம உரித்து நிலையையே பெண்ணியம் வலியுறுத்துகின்றது. பெண்மை பெண்களுக்கே உரிய தன்மை. ஆண்மையாக அதை மாற்ற விழைவது தவறான ஒரு சிந்தனை.

பெண்ணியம் பெண்களை இழிவுபடுத்தும் போக்கினை மாற்றியமைக்கப் பாடுபடுகிறது. உடல் உள ரீதியில் அடக்கப்பட்ட பெண்களின் சமூகப் பொருளாதார நிலையை அறிந்து அதற்கான மாற்று நடவடிக்கைகளை எடுக்க விழைகின்றது. இவற்றில் ஆணுக்குப் பங்குண்டு.

ஆணாதிக்கத்தைநாம்எதிர்க்கும்போது ஆண்களை நாம் எதிர்க்கவில்லை. ஆண்களின் பிழையான மனோநிலையையே எதிர்க்கின்றோம்.

தாய்மை என்பது பெண்ணின் ஒரு சிறப்பு அம்சம். அதனை ஒரு ஆண் அனுபவிக்க முடியாது. ஆண்மைக்கு ஒரு நாள் பெண்மைக்கு ஒன்பது நாள்கள் என்று எமது சமயம் சிவராத்திரியையும் நவராத்திரியையும் வகுத்திருக்கின்றது.

**அருகிவருகின்றது அன்பு**

இன்று குடும்பங்களில் அன்பு, கரிசனை, அக்கறை போன்ற குணங்கள் அரிதாகி வருகின்றன. ஆணவம் மேலோங்கி நிற்கின்றன. எமது உரிமைகளை நாம் வலியுறுத்தி எமது கடமைகளை மறந்ததால்த்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. உரிமைகளும் கடமைகளும் ஒரு சல்லிக் காசின் இரு பக்கங்களாவன. ஒன்றை மட்டும் நாம் வலியுறுத்தி மற்றதை மறந்து நடக்கும் போது குடும்பங்களில் பிரச்சினைகள் உண்டாகின்றன. கணவன் - மனைவிமாரிடையே உரிமைகளுடன் கடமைகளும் வலியுறுத்தப்பட்டால் அங்கு அன்பு நிலவும். அடக்கி ஆளும் சிந்தனை எழாது.

அடக்கி ஆளும் சிந்தனையே குடும்பங்களிலும் நாட்டிலும் பிரச்சினைகளை உருவாக்கி வந்துள்ளன.

அடக்கி ஆள நினைத்த சிந்தனையே இன்றும் தமிழர்களுக்கு சமநிலை அளிக்கப் பின்னிற்பதன் காரணம். அதே போல்த்தான் குடும்பங்களிலும் ஒருவர் மற்றவரை அடக்கியாள நினைத்தால் குடும்பத்தினுள்ளும் பிரச்சினைகள் எழுவது திண்ணம் - என்றார். (4)

# நான்கு மாதங்களாக இழுத்தடித்துவிட்டு இறுதி அறிவித்தலென சிட்டை திணிப்பு

## தென்மராட்சியில் தொடரும் இந்த அவலத்தை தீர்க்குமாறு பயனாளிகள் கோருகின்றனர்

சாவகச்சேரி, ஒக். 15

தென்மராட்சி மின்பாவனை பற்றிய சிட்டைகள் நான்கு மாதங்களாக வழங்கப்படாத நிலையில் நான்கு மாதங்களின் பின்னர், இறுதி அறிவித்தல் சிட்டை வழங்கப்பட்டுள்ளது என்று தென். மட்டுவில், கைதடி, நுணாவில், நுணாவில் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மின்பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி வாடிக்கையாளர் அலுவலகத்தினரால் கடந்த ஜூன் மாதம் மின்பாவனை கட்டணச் சிட்டைகள் விநியோகிக்கப்பட்ட பின்னர் ஒக்ரோபர் மாதம் வரை மின்பாவனைச் சிட்டை வழங்கப்படவில்லை. இந்த நிலையில் கடந்த வாரம் பாவனையாளர்களுக்கு, மின் பாவனைக் கட்டண நிலுவை செலுத்தப்படாவிடின் மின் இணைப்புத்துண்டிக்கப்படுமென்று குறிப்பிட்டு இறுதி அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு மாதங்களாக மின்பாவனை தொடர்பான எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்படாத நிலையில் இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளமை குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

முன்னர் மாதாந்தம் மின்பாவனைச் சிட்டை வழங்கப்பட்டன. பின்னர் வேலையாள்கள் பற்றாக்குறை எனக் கூறி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின்பாவனைக் கட்டணச் சிட்டைகள் வழங்கப்பட்டன.

கடந்த ஜூன் மாத நடுப்பகுதியில் மின்பாவனைச் சிட்டை வழங்கிய பின்னர் கடந்த வாரம் மின் பாவனைக் கட்டணச் சிட்டைக்குப் பதிலாக இறுதி அறிவித்தல் சிட்டை வழங்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நான்கு மாதங்களாக மின்பாவனைச் சிட்டை வழங்கப்படாமல் ஒரேயடியாகச் செலுத்துமாறு வழங்கிய சிட்டை பாவித்த அலகின் எண்ணிக்கை கணிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளன.

மாதாந்தம் 250 ரூபா தொடக்கம் 300 ரூபா வரையான பாவனைக் கட்டணம் குறிப்பிட்டு வழங்குவார்கள். அண்மையில் வழங்கப்பட்ட இறுதி அறிவித்தல் சிட்டையில் 3 ஆயிரம் தொடக்கம் 6 ஆயிரம் ரூபா வரை நிலுவையாக உள்ளதாக அறிவிக்கப்பட்டதால் பொருளாதார நிலையில் பின்தங்கிய பல குடும்பங்கள் கட்டணத்தை ஒரே தடவையில் செலுத்த முடியாமல் மின்னிணைப்புத் துண்டிக்கப்படும் நிலையில் உள்ளனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மின்சார சபையின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட போது மின்பாவனையாளர்கள் பாவித்த மின் அலகுகள் நாள்கணக்கில் கணிப்பிட்டு சிட்டை வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கின்றனர். எனினும் பயனாளிகள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். இந்த சீரற்ற நடைமுறை மாற்றி அமைக்கவேண்டும். அல்லது மாதாந்தம் பயன்படுத்தப்பட்ட அளவுப் பட்டியலுக்கான சிட்டையைத் தர வேண்டும். ஆளணி வளம் பற்றாக் குறை என்றுகூறி பயனாளிகளை மின்சாரசபையினர் வதைக்கக்கூடாது என்று கோருகின்றனர். (4,9,159)

# பொருளாதார முகாமைத்துவத்தில் அரசு இயலாமையைக் காட்டுகிறது

## முன்னாள் முதலமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 15

நாட்டில் ஜனநாயக சூழலை ஏற்படுத்தியிருப்பதாகப் பெருமைகொள்ளும் இன்றையஅரசு, நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதில் தனது இயலாமையையே தொடர்ந்து காட்டிவருகின்றது.

இவ்வாறு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் அமைப்புச் செயலாளரும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சருமான அ.வரதராஜா பெருமாள் தெரிவித்துள்ளார். அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நாட்டின் பருமட்டான பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கும், சாதாரண மக்களினது வாழ்க்கைத் தரம் தொடர்ந்து வீழ்ச்சி அடைவதற்கும் கடந்த அரசு பெருமளவில் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன் சுமைகளையும், அமெரிக்காவின் அண்மைக்காலப் பொருளாதாரக் கொள்கைகளையும், பன்னாட்டுச் சந்தையில் தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் எரிபொருள்களின் விலை உயர்வையும் காரணங்களாகக் காட்டி தனது பொறுப்பிலிருந்து இந்த அரசு தப்பித்துக் கொள்ள முற்படுவதாகவே தெரிகின்றது.

நாட்டின் பொருளாதாரநிலை மோசமான கட்டத்துக்குள் மூழ்கியபின்னர்தான் நிதி அமைச்சர் உயர்மட்ட வகுப்பினரின் சொகுசு வாழ்க்கைத் தேவைக்கான இறக்குமதிகளில் சிலவற்றைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார். அத்துடன் தாராளவாத பொருளாதாரக் கொள்கையில் ஊறிப் போன இந்த அரசு இறக்குமதிபிரதியீட்டுக் கொள்கையையும் கடைப்பிடிக்காது என்பது தெரிந்ததே.

கடந்த அரசு பெற்ற கடன்களை இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணமாகக் காட்டும் அரசு கடந்த மூன்று வருடங்களாகத் தனது பங்குக்கு வெளிநாட்டுக் கடன்களைவாங்கிக் குவித்த வண்ணமேதான் உள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமானவற்றை அரசு உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும் - என்றுள்ளது. (4)

# மாநகரில் இடிதாங்கி அமைக்கும் செயற்றிட்டம் குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ்ப்பாண மாநகரத்தின் கரையோரத்தில் இடிதாங்கி அமைக்கும் செயற்றிட்டம் தொடர்பிலான உண்மை நிலை என்ன என்று மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் செய்திக் குறிப்பொன்றை அனுப்பியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாண மாநகரத்தின் பாசையூர் கரையோரப் பகுதியில் இடிதாங்கி அமைப்பது தொடர்பில் கடந்த 4 வருடங்களாக யாழ்ப்பாண மாநகர முதல்வரும், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினருமாகிய இம்மானுவல் ஆனல்ட் பல தடவைகள் மாகாண சபை அமர்வுகளின் போது சுட்டிக்காட்டியிருக்கின்றார். இடிதாங்கி தொடர்பாக அவரால் பேசப்பட்ட விடயங்களை ஹன்சார்ட் பதிவுகளில் காணமுடியும். யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போதும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் பலதடவைகள் சுட்டிக்காட்டியிருந்தார். இவ்வாறான பல சந்தர்ப்பங்களில் பேசியுள்ளதன் விளைவாகத் தற்பொழுது இளைஞர் விவகாரம், திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் "வசதி குறைந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினூடாக 11 இலட்சம் ரூபா ஒதுக்கீட்டில் அதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கடந்த 8 ஆம் திகதி காலை கலந்துரையாடல் ஒன்று பாசையூர் கடற்றொழிலாளர் சங்கத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் மற்றும் மாநகர முதல்வர் ஆகியோரின் தலைமையில் குருநகர் மற்றும் பாசையூர் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கங்களின் நிர்வாகததினர் மற்றும்பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

கலந்துரையாடலைத் தொடர்ந்து இடிதாங்கி அமைப்பதற்கான பணிகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்றன. யாழ். பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் இடிதாங்கி அமைத்தல் திட்டத்துக்கும் யாழ்ப்பாண மாநகரசபைக்கும் உத்தியோகபூர்வமாக எவ்வித தொடர்பும் இல்லாதபோது புதிதாகப் பொறுப்பேற்று 6 மாதங்களே ஆகின்ற மாநகரசபையின் நிர்வாகத்தின் மீது குறிப்பிட்ட சிலரால் முன்வைக்கப்படும் போலியான விமர்சனங்கள் அவர்களின் கையாலாகாத தனத்தையும் , கட்சி முரண்பாடுகளைத் தோற்றுவித்து அரசியல் ஆதாயம் தேடநினைக்கும் அநாகரீகமான போக்கையுமே காட்டுகின்றது. இதுதொடர்பானஇணையத்தளச்செய்தி மற்றும் முகநூல் பதிவுகள் குறித்து அருவருக்கத்தக்கதான நிலையையேவெளிக்காட்டி நிற்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ந்தும்அனுமதிக்கமுடியாது - என்றுள்ளது. (4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/புதுக்குடியிருப்பு
ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில்
கல்வி கற்று 2018 இல் தரம் - 5
புலமைப்பரிசில் பரீட்சையில்
**180 புள்ளிகள்** பெற்று சித்தியடைந்த
எமது செல்வப்புதல்வி

**சசிகரன் சுடர்ணா**

அவர்கள் மேலும் கல்வியில் பலபட்டங்கள்
பெற வாழ்த்துகின்றோம்

**வாழ்த்துவோர்:**
அப்பப்பா (வைரமுத்து)
அப்பம்மா (கண்மணி)
பெரியப்பாமார்கள் - வினோகரன்
- குடும்பம் (லண்டன்)
பாஸ்கரன் - குடும்பம் (பிரான்ஸ்)
அத்தைமார் (ரசிதாசினி குடும்பம்), சுயதாசினி குடும்பம்),
அப்பா (சசிகரன்),
அம்மா (பாக்கியலக்சுமி), சித்தப்பா (சுதீஸ்கரன் - குடும்பம்)

Congratulations

(1683)

## அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்







ஜெயரஞ்சன் பிரசன்னா
181 புள்ளிகள்

ஆன்சுஜீனா பிரான்சிஸ்
ஜெயநாயகம்
165 புள்ளிகள்

யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
மாணவர்களாகிய ஜெயரஞ்சன் மேரிகலிஸ்ரா தம்பதியரின் செல்வப் புதல்வனான பிரசன்னாவும், பிரான்சிஸ் ஜெயநாயகம் மேரிஸ்ரெலா தம்பதியரின் செல்வப் புதல்வியான ஆன்சுஜீனாவும் 2018 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்: குடும்பத்தினர்
நவாலி கிழக்கு, மானிப்பாய்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது கல்வி நிலைய
**தரம் - 5 புலமைப்பரிசில்**
வகுப்பு ஆசிரியர்
**திரு.வேலுப்பிள்ளை**
**அன்பழகன்** அவர்கள்
05.10.2018 அன்று கொழும்பு பண்டார
நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச
மாநாட்டு மண்டபத்தில்
**"குரு பிரதீபா பிரபா"**
விருதினை பெற்றுக்கொண்டமையையிட்டு
அவரை உளமாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

அன்பொளி கல்வி நிலையம்,
பெருங்குளம் சந்தி,
தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(1683)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



யா/ இந்து ஆரம்ப பாடசாலையில் 2018
தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில்
**180 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்த எமது செல்வன்

**ரமணாகரன் பிரஷ்னா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலை அதிபர் ந.மகேந்திரராஜா,
வகுப்பாசிரியர் ஜெயகரன் சுபாஜினி,
உமாதவா கல்வி நிலைய ஆசிரியர்களான
க.தவயோகராஜா, உமாராணி,
ஆங்கில ஆசிரியர் ப.மயூரதன் ஆகியோரைப்
பாராட்டி வாழ்த்துவதோடு நன்றியையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவர் கல்வியில் மேலும் பல
சித்திகளைப் பெற்று சிறப்புடன் வாழ உளமார
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:-
தாத்தா, அம்மம்மா, அப்பம்மா,
தங்கை -வர்ஷிகா, அப்பா, அம்மா, மாமா, அத்தை,
உறவினர்கள், நண்பர்கள்
**கிளிக்கடை, கோயில் வீதி, நல்லூர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை



அதிபர்
திரு.அ.மரியதாசன்



ஆசிரியர்
திருமதி I.M.கிரேசியன்

2018 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்



யோ.ஜெப்றினா
178



கெ.தர்சனா
177



யோ.ஜோதினி
172



வெ.யெரோமி
165

150 புள்ளிக்கு மேற்பட்ட மாணவர்கள்



யூ.ஜெரோமி
162



யோ.பிரியங்கா
152



பு.மெகா
151

Congratulations

இவர்கள் மேலும் பல
சித்திகளைப் பெற்று சீரும்
சிறப்புடனும் வாழ
வாழ்த்துவதோடு இவர்களை
நெறிப்படுத்திய
அதிபர், ஆசிரியரையும்
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- பழைய மாணவர்கள்
யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

(CS 20423) (11.17)

## சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்

## Kids Park Pre School & Day Care Campus

**528, பலாலிவீதி, திருநெல்வேலி.**

**19.10.2018 விஜயதசமிப் பூசையும், ஏடு தொடக்குதலும்,**
**கலை விழாவும், புதிய மாணவர்கள் அனுமதியும்**

(2+ Play Group) (3+ Montessori) (4+ Pre School)



சிறுவர்களுக்கே உகந்த மிகப் பாதுகாப்பான, மகிழ்ச்சிகரமான சூழலில்
முன்பள்ளிக் கல்வி, காப்பக அனுபவத்துடன் சுஹமுடைய குடும்ப உறவும், வாழ்வும்

உலகத்தரம் வாய்ந்த பயில்வுகள் .....

யோகாசனம், ஆன்மீகச் செல்நெறி, சுதந்திரமான கற்றல் வட்டக்களக் கற்கைகள், விளையாட்டு மூலம் செயல் வழிக் கல்வி, ஆடல், பாடல், ஓவியம், பொம்மலாட்டம், நாடகம், மணல் நீர் விளையாட்டுகள், ஆங்கில தகவல் தொழில்நுட்ப் ஆற்றுகை பங்கேற்றுக் கற்றல், நூலக அனுபவம், களச் சுற்றுலாக்கள்..........

களிமண் பிசைவிலிருந்து கணினிக் கற்கை வரை ஆசிரிய அம்மாக்களின்
அர்ப்பணிப்பு - அரவணைப்பினூடாக முன்பள்ளிக் கல்வி

19.10.2018 காலை 8.30 மணிக்கு விஜயதசமி பூசை, கலைவிழா புதிய மாணவர்களுக்கான கற்றல் ஆரம்பமும், ஏடு தொடக்குதலும் கலாநிதி பா.தனபாலன்
அவர்களால் மேற்கொள்ளப்படும் உரியவர்கள் முற்பதிவு செய்து கொள்ளவும்.


கல்விப் பணியே கடவுள் பணி - Service to Education is Service to God

**கலாநிதி பா.தனபாலன் (நிபுணத்துவ ஆலோசகர்)**
M.Phil in Pre School Education PhD - Pre School & Primary Education

**திருமதி கர்ணி தனபாலன் (பணிப்பாளர்)**
Dip in Pre School Education ( Distinction) T.P.: 076 848 5213
Dip in Guidance Counselling (1st Class) Cert.in Pre School Management.

கல்வியால் உயர்வோம் காலத்தை வெல்வோம்!

(cs.20539) (13.17)





## உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு

கொழும்பு, ஒக் 15

தகவல் வழங்கும் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு திருகோணமலை ஜேகொப் பாக் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்களில் தகவல் வழங்கும் உத்தியோகத்தர்களாக நியமிக்கப் பட்டுள்ளவர்களின் தகவல் உரிமைச் சட்டம்தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் சிறப்பு செயலமர்வாக இது இடம்பெற்றது.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச நிறுவனங்களில் கடமையாற்றும் தகவல் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு தங்களது அனுபவங்கள் மற்றும் எதிர்கொண்ட பிரச்சினைகளை எடுத்துரைத்ததுடன் அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் விளக்கங்களை தகவல் அறியும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியதிஸ்ஸ ரணசிங்க மற்றும் தேசிய ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஜகத் லியனாரச்சியும் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதன்மைச் செயலாளர் டி.எம்.எஸ்.அபேகுணவர்தன, திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.அருந்தவராஜா உட்பட தகவல் வழங்கும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.



## நாட்டின் நலனில் அரசியல்வாதிகள் அக்கறை கொள்ளவேண்டும்

*அரச தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக் 15

நாட்டின் நலன் தொடர்பில் அரசியல்வாதிகள் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மஹர பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அரசியல்வாதிகள் எமது நாட்டினதும் நாட்டு மக்களதும் நலனில் அக்கறை கொண்டு பொறுப்புடன் செயற்படவேண்டும். அரசியல் இலாபத்துக்காக கருத்துக்கள் தெரிவிப்பதை விடுத்து மக்கள் நலன்சார்ந்த திட்டங்களில் அவதானம் செலுத்தவேண்டும்.

பெரும்பாலான அரசியல்வாதிகள் தமது நேரத்தினை தேவையற்ற கருத்துக்களைக் கூறி வீணடித்து வருகின்றனர். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொறுப்பற்ற கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர்.

இயற்கை இடர் மற்றும் பொருளாதாரச் சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார்.

அரசமைப்பு மறுசீரமைப்பின் மூலமே

## இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படும்

கொழும்பு, ஒக் 15

முழுமையான அரசமைப்பு மறுசீரமைப்பின் மூலமே நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புதிய அரசமைப்புச் சட்டம் மற்றும் 20ஆவது திருத்தச் சட்டம் என்ற தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எழுத்தாளரும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதியுமான காமினி வியங்கொட இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "பல்வேறு இனங்கள் மற்றும் மதங்களைக் கொண்ட மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வருவதன் காரணமாக இந்தத் தேவை ஏற்பட்டுள்ளது. முழுமையான அரசமைப்பு மறுசீரமைப்பின் மூலமே நாட்டில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும்" - என்றார்.

## நிறமூட்டிய அரிசி விற்பனை

கொழும்பு, ஒக். 15

நிறமூட்டிய அரிசி விற்பனை செய்யப்படுவது தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகப் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டரிசிக்குப் பதிலாக நிறமூட்டிய அரிசி விற்பனை செய்யப்படுவதாகச் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

பசறை, அநுராதபுரம், குருநாகல் உள்ளிட்ட பகுதிகளில் இந்த அரிசி விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிவப்பு நிறத்தில் அரசி காணப்படுமாயின் அல்லது விரலில் வர்ணங்கள் ஒட்டும் பட்சத்தில் அது குறித்து அறியத்தருமாறும் அவர் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

## இன ஐக்கிய மேம்பாட்டுக்காக சம்பந்தனுடன் இணையத் தயார்

*கூறுகிறார் அமைச்சர் ராஜித சேனாரத்ன*

**கொழும்பு, ஒக் 15**
**இன ஐக்கிய மேம்பாட்டிற்காக சம்பந்தனுடன் இணைந்து பயணிக்கத் தயார் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**



பண்டாரவளை பூனாகலை அம்பிட்டிகந்த தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 157 வீடுகளை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"பெருந்தோட்ட மக்களுக்கு அபிவிருத்தி ஊடாக புதிய உலகை உருவாக்க நாட்டில் இன ஐக்கியத்தை மேம்படுத்த அமைச்சர் திகாம்பரம் மற்றும் எதிர் கட்சி தலைவர் சம்பந்தன் ஆகியோரை இணைத்து கொண்டு பயணிக்கவுள்ளோம். கடந்த காலங்களில் பெருந்தோட்ட மக்களுக்கு 7 பேர்ச் காணியை வழங்க வேண்டும் என நானும் கூட அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்தேன். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை.

இது அரசியல் இலாபம் கருதி செய்யப்படும் ஒரு வேலை அல்ல. இன்று லயன் குடியிருப்புகளில் வாழும் பெருந்தோட்ட மக்களுக்குத் தனி வீடுகளை அமைத்து கொடுப்பதற்கு உறுதுணையாக இருப்போம். எதிர்காலத்தில் மலையக வரலாற்றில் முக்கிய இடம் பிடிக்கும் வகையில் மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சின் செயல்பாடுகள் அமையும் என்பதில் ஐயம் இல்லை.

இந்திய அரசின் 4 ஆயிரம் வீடுகளுக்கு அப்பால் கிடைக்கப்பெற்றிருக்கும் 10 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தில் கூட ஆயிரத்து 134 வீடுகள் தற்பொழுது கட்டப்பட்டுள்ளது.

அதேபோல் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள சுகாதார மத்திய நிலையங்கள் அனைத்தையும் அரசமயமாக்கப்படும்" -என்றார்.

## உலகப் பொருளாதார கட்டமைப்பில் திருத்தம் கொண்டு வரவேண்டும்

*கூறுகின்றார் அமைச்சர் மங்கள சமரவீர*

கொழும்பு, ஒக் 15

உலகப் பொருளாதாரக் கட்டமைப்பில் திருத்தங்களை அறிமுகப்படுத்துமாறு வல்லரசு நாடுகளிடம் கோரிக்கை விடுப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் பாலித் தீவில் இடம்பெறும் பன்னாட்டுக் கூட்டத்தொடரில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகப் பொருளாதாரம் பரந்த அடிப்படையில் வளர்ச்சி கண்டாலும், அதன் எதிர்மறைத் தாக்கங்களால் வளர்முக நாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

குறைந்த அளவில் வருமானம் ஈட்டும் நாடுகளின் கடன்சுமை மொத்த தேசிய உற்பத்தி சதவீதத்தின் அடிப்படையில் 33 இலிருந்து 47 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. மேலும் இத்தகைய கூடுதலான கடன்சுமையானது கடன் வழங்கும் மற்றும் கடன் பெறும் தரப்புக்கள் மீது தாக்கம் செலுத்துவதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.






## ஆசிரியர் சேவை சங்கத்தின் வருடாந்த தேசிய மாநாடு

கொழும்பு, ஒக். 15

ஒரே குரல் ஒரே இடம் என்ற தொனிப் பொருளில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வருடாந்தத் தேசிய மாநாடு கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது. தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் லால் காந்த , கல்விக் கொள்கை வகுக்கும் குழுவின் அங்கத்தவரான பேராசிரியர் பிரபா மனுரட்ண தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் முதன்மைச் செயலாளர் மகிந்த ஜெயசிங்க, தலைவர் தம்பிக்க அழகப்பெரும உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் அதிபர் சங்க பிரதிநிதிகள் நாட்டின் சகல மாவட்டங்களிலிருந்தும் வருகைதந்திருந்த ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் பங்களிப்புடன் மிக வெற்றிகரமாக மாநாடு நடைபெற்றது. (159)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கைதிகளுக்கு நன்றி!

மீண்டும்தெளிவானமுடிவுஏதுமின்றிஅரசியல்கைதிகளின் போராட்டம்முடிவுக்குவந்திருக்கின்றது. போராட்டத்தை எப்படியாவதுமுடித்துவைக்கவேண்டும்என்கிறநெருக்கடியில் வாக்குறுதிகளைக்கொடுத்து அதனைமுடித்துவைத்துவிட்டார்கள். ஆனால், போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததை ஒரு வெற்றிகரமான அரசியல் நடவடிக்கையாக எந்தவொரு அரசியல் தரப்பும் உரிமைகோர முடியாது. பற்றியெரியும் ஒரு விவகாரத்தில்இருந்துகூட மக்கள்எழுச்சியைக்கட்டியெழுப்ப, கட்டமைக்க முடியாத கையறு நிலையில்தான் தமிழ் அரசியல் தலைமைகள் அனைத்தும் உள்ளன என்பதை இந்தப் போராட்டம் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல, அதனை விமர்சித்து நிற்கும் மற்றைய அரசியல் கட்சிகளும் வடக்கு மாகாண முதலமைச்சரும்கூட அதேநிலையில்தான்நிற்கிறார்கள். இங்கேமாற்றத்தைஉருவாக்கக்கூடிய எந்தவொரு தலைமையும் இல்லை என்பது தமிழ் மக்களின் சாபக்கேடு.

கைதிகளின்போராட்டம்இப்படித்தோல்வியோடுமுடிவடைந்திருப்பது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள்இப்படித்தான்எந்தத்தெளிவானமுடிவையும்அரசு அறிவிக்காமலேயேபோராட்டம்முடித்துவைக்கப்பட்டிருக்கிறது. தொடக்கத்தில் எல்லாம் தலைமை அமைச்சருடன் பேசி, சட்டமாஅதிபர்ஊடாகநடவடிக்கைஎடுக்கப்படும்என்றுஅவர் கூறியதைநம்பி, கூட்டமைப்புநாடாளுமன்றஉறுப்பினர்களே கைதிகளுக்குவாக்குறுதி வழங்கிப்போராட்டங்களைமுடித்து வைத்தார்கள்.


அதன்பின்னர்,நடந்துமுடித போராட்டத்துக்குமுன்னர்நடந்த கைதிகளின்போராட்டத்தின்போது அரசியல்வாதிகள்எதனையும் செய்கிறார்கள் இல்லை என்று அவர்களைக் கடுமையாக விமர்சித்துக்கொண்டு கைதிகள் விடயத்தைத் தாங்கள் தமது கையில்எடுத்துஅவர்களுக்கொருதீர்வைப்பெற்றுத்தருவோம் என்று வாக்குறுதி வழங்கினார்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாணவர்கள். ஆனால்,நடந்தது என்ன ? கைதிகள்தமக்கான போராட்டத்தைத்தாமேமீண்டும்தொடங்கும்வரைக்கும்இந்த விடயத்தில்எந்தவொருதரப்பும்எந்தவொருநடவடிக்கையையும்எடுத்திருக்கவில்லை. அரசியல்தரப்புகளும்சரிபல்கலைக்கழக சமூகமும் சரி மாற்று அரசியல் தலைமை ஒன்றாக வளர விரும்பும் முதலமைச்சர் உள்ளிட்ட பரிவாரங்களும் சரி எந்தவொருநகர்வையும் மேற்கொள்ளவில்லை.

கைதிகள்போராடாமல் இருக்கும்போது மட்டுமல்ல அவர்கள் போராடும்போதும்கூட எந்தவொரு மாற்றத்தையும் உருவாக்கக்கூடியவல்லமையை இந்தத்தரப்புகள்எதுவும்கொண்டிருக்கவில்லை என்பதும் அதற்கான முயற்சிகளையோ செயற்பாடுகளையோ முன்னெடுக்கும் வல்லமையைக்கூட இந்தத் தரப்புகள் கொண்டிருக்கவில்லை என்பதும் வெளிப்படையான உண்மை.

கைதிகள்தமது போராட்டத்தைத் தொடங்கியதும் தாம் அவர்களுக்கு ஆதரவாகப் போராட்டங்களை நடத்தினோம் என்றும் அறிக்கைகளைவிட்டோம்என்றும்இந்தத்தரப்புகள்கூறக்கூடும். தமது இத்தகைய செயற்பாடுகளால் கொழும்பில் ஒரு துரும்பைக்கூட அசைக்கமுடியாது என்பதைத் தெரிந்துகொண்டும் தம்மைத் தாமே நியாயப்படுத்திக்கொள்ளும் முயற்சியாகவே இத்தகையநடவடிக்கைகள்எடுக்கப்பட்டன. ஒவ்வொருவரும் தம்மை நியாயப்படுத்திக்கொள்ள ஒவ்வொரு கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடும். ஆனால், அது அவர்களைத்திருப்திப்படுத்த மட்டுமே உதவும், இனத்தின்விடுதலைக்கோ, அரசியல்வேணவாவை அடைவதற்கோ கடைசிவரைக்கும் உதவாது.

அரசியல்கட்சிகளின்நிலமையோமிகமிகமோசமானது. ஆளும் தரப்புடன் சேர்ந்து நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இந்த விடயத்தில் அரசை இசைய வைக்கவும் முடியவில்லை. அரசுக்கு எதிராக மக்கள் எழுச்சியை உருவாக்கவும் முடியவில்லை. மற்றைய கட்சிகளோ கூட்டமைப்பில் பழியைப்போட்டுவிட்டு அதுவேதான் தமது கடமை என்பதைப் போல பதுங்கிக்கொள்ள மட்டும்தான் திராணி உள்ளவைகள் என்பதை வெளிப்படுத்திவிட்டன. ஆனால் இதே தரப்புகள் எல்லாம்தமது அரசியல் இருப்பு என்று வரும்போது எழுகதமிழ் என்றும் போராட்டம் என்றும் வீறு கொண்டு எழ முடிந்த இந்தத் தரப்புகளால் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அத்தகைய ஒரு முடிவைச்சிந்திக்கக்கூட முடியவில்லை. தமிழர்களின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கும் அனைத்து அரசியல் தரப்புகளினதும் உண்மையான நிலையை வெளிப்படுத்தியமைக்காக அரசியல் கைதிகளுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும்.

# சிக்கல்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் தலைமை அமைச்சரது தந்திரம்



சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில் – வீ.எஸ்.ரீ.

கட்சியை, இந்த அரசை, அரசின் கொள்கை நிலைப்பாட்டை நாசப்படுத்தும் சில அரசியல்வாதிகள் இன்றைய அரசில் அங்கம் வகிக்கின்றனர். அவர்களை அரசினின்றும் வெளியேற்றுவது தலைமை அமைச்சரின் கடப்பாடு. தலைமை அமைச்சரது, இந்த நாட்டினது, இன்றைய அரசினது மற்றும் கட்சியின் எதிர்காலத்தை இன்று தீர்மானிப்பவர்களாக ஒரு சில அமைச்சர்கள் விளங்குகின்றனர். எட்டாம் வகுப்பில் சித்தியடையாத, நாட்டு மக்களது ஆதரவு வாக்குகள் சிலவற்றையாவது பெற இயலாதுபோன இந்த அமைச்சர்கள் என்றைக்கு இந்த அரசிலிருந்து வெளியே தூக்கி வீசப்படுகின்றனரோ, அன்று தான் இந்த அரசுக்கு விமோசனம் கிட்டுமென எண்ணத் தோன்றுகிறது. இத்தகைய தராதரமற்ற அமைச்சர்களே நாட்டின் பொருளாதாரத்தைக் கையாளும் பொறுப்பை ஏற்றுள்ளார்கள். வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள பொருளாதார ஆலோசகர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்குகின்றனர். நாட்டின் பொது மக்களது சுக துக்கங்கள், வாழ்க்கைச் சிரமங்கள் குறித்து அறிந்திராத பொருளாதார விற்பன்னர்கள் அரசின் பொருளாதாரத்தைக் கையாண்டு வருகின்றனர். இத்தகைய தகுதிகளற்ற தரப்பினர்களை வெளியேற்றிவிட்டு, இன்றைய அரசை அதிகாரத்துக்குக் கொண்டு வர அன்று அரும்பாடுபட்டுழைத்த தராதரம் கொண்ட, திறமைமிக்க புத்திஜீவிகள் மற்றும் புத்திசாலிகளை இன்றைய அரசின் பொருளாதாரத் துறையைக் கையாளப்பயன்படுத்திக்கொள்ள அரசு கவனம் செலுத்தவேண்டும்.

### சதுர சேனரத்னவின் கருத்து வெளிப்பாடு ஆறிப்போன கஞ்சிக்கு ஒப்பானது

மேற்கண்ட கருத்தை இன்றைய அரசின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான ராஜித சேனாரத்னவினது மகனும், இன்றைய அரசில் அங்கம் வகிப்பவருமான சதுரசேனரத்ன அண்மைய ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பொன்றின்போது வெளியிட்டிருந்தார். அவரது மேற்கண்ட கருத்து வெளிப்பாட்டில் மூன்றில் இரண்டு மடங்கு உண்மையானதே. ஆனால் அரசியல் அனுபவம் அதிகம் பெற்றிராத, இளவயதுக்காரரான சதுர சேனரத்னவுக்குப் புரியாத பல அரசியல் பின்னணிகளும் நடைமுறையில் உள்ளன என்பதும் யதார்த்தமானதொன்றே.
ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்தை வகிக்கும் வரை ஐ.தே.கட்சியினாலோ, அல்லது அதன் தலைமையினாலோ இன்றைய அரசாலோ, தலை நிமிர்ந்து இந்த நாட்டை நிர்வகிக்க இயலாது என்பதைத் தற்போது சதுர சேனரத்ன போன்றோர் உணரத் தலைப்பட்டிருக்கும் நிலையில், திருவிழாக் கொண்டாட்டம் முடிந்து போய்விட்டுள்ளது எனக் கூறுவது தவறல்ல. எவர்தான் தலையால் கிடங்கு கிண்டினாலும் சரி, ரணில் ஒருபோதுமே தமது தரப்பினர்களில் எவரையும் அரச செயற்பாடுகளிலிருந்து விலக்கி வைக்கப்போவதில்லை. நாட்டின் பொருளாதார நிலைமையை முன்னோற்றுவோம், நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வோம், நாட்டு மக்களுக்குக் கடன் பெறத் தக்க வாய்ப்புக்களை உருவாக்கி உதவுவோம், நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகளை இலாபம் ஈட்டும் வகையில் மாற்றிக்காட்டுவோம் என்றெல்லாம், தாம் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் முன்னர் அரச தரப்பினர்கள் இந்த நாட்டு மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வீசினர். ஆனால் பதவிக்கு வந்த கையோடு, பெரும் ஏமாற்றுப் பேர்வழியொருவரை நாட்டின் முக்கிய பதவியொன்றான மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் அமர்த்தியதன் மூலம் ரணிலின் தலைமையிலான அரசு பெரும் நிதி மோசடியொன்றுக்கு வழி ஏற்படுத்தி வைத்தது. அத்தகைய மோசடியுடன் நிலமை முற்றுப் பெற்றுவிடவில்லை. அண்மையில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது, ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சித் தரப்பினர்கள் தமக்கு இசைவானவர்களை அரச வங்கிகளது பணிப்பாளர்கள் சபைகளின் உறுப்பினர்களாக நியமித்து அரசின் தலைவரான தமக்கு நெருக்கமான வர்த்தக சமூகத்தினர்கள், வங்கிகளில் பெற்றிருந்த கோடிக்கணக்காண கடனுக்காக நியாயமற்ற அதிஉயர் அறவீட்டுத் தொகைகளை அறவிட்டு வருவதாகக் குற்றம் சாட்டியிருந்தார். தாம் அரச தலைவர் என்ற ரீதியில் இத்தகைய வங்கிப் பணிப்பாளர்கள் சபைகளைக் கலைத்துவிடுமாறு ஆலோசனை தெரிவித்திருந்தும் ரணில் தரப்பினர்கள் அதற்கு மதிப்பளித்துச் செயற்படத் தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார். ரணிலின் ஏகாதிபத்தியப் போக்குக்குச் சார்பாகச் செயற்படும் தரப்பினரை அடக்கி ஒடுக்கும் தமது முயற்சி வெற்றியளிக்கவில்லை என்ற உண்மையை அரச தலைவர் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி மற்றும் அமெரிக்க டொலரின் பெறுமதிக்கு ரூபாவின் மதிப்பு வீழ்ச்சி போன்ற பின்னடைவுகள் குறித்து ரணிலின் தரப்பினர் கவலைகொள்ளாது, செயற்படுவதைத் தெளிவாக உணரமுடிந்துள்ளது.

### அரசியல்வாதி அசாத்சாலி போட்டுடைத்த உண்மை

மேற்குறிப்பிட்ட கூட்டு அரசின் நிலைப்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்துக் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் அசாத்சாலி அண்மையில் கதையொன்றைக் கூறியிருந்தார். "இந்த நாட்டை நாசப்படுத்துபவர் மலிக் சமரவிக்கிரம என்ற அமைச்சரே என்பதை நான் வெளிப்படையாகவே கூறிக்கொள்கிறேன். ஐ.தே.கட்சி, கட்சியின் நலன் கருதி மலிக் சமரவிக்கிரமவைத் தனது தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு உள்வாங்கிக் கொண்டது. நாடாளுமன்றத்

தில் மலிக் சமரவிக்கிரம ஒரு தடவைதானும் உரையாற்றியதில்லை. அவர் ஐ.தே.கட்சி அரசில் அமைச்சராகச் செயற்படும் வரை, இலங்கையில் எந்தவொரு வெளிநாடும் முதலீடு மேற்கொள்ளமுன்வரப்போவதில்லை. பதிலாக ஏற்கனவே தமது முதலீடுகள் மூலமான தொழில் முயற்சிகளையும் கைவிட்டு, அவர்கள்வேறு நாடுகளுக்குத் தமது முதலீடுகளை இடம் மாற்றுகின்றனர். இந்த நாட்டின் பின்னடைவுப் பொருளாதார நிலை காரணமாக அமெரிக்க டொலரின் பெறுமதிகள் இலங்கை ரூபாயின் மதிப்புமென்மேலும் வீழ்ச்சியடை யும் அபாயம் தோன்றியுள்ளதாகக் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அசாத் சாலி சுட்டிக் காட்டியிருந்தார். இலங்கை மக்கள் வங்கி, அதனது வரலாற்றில் முன்னெப்போதும் எவருக்கும் வழங்காத விதத்தில் முக்கிய அமைச்சரொருவரது நெருங்கிய சகா ஒருவருக்கு ஆயிரம் கோடி ரூபாய்களைக் கடனாக வழங்கியுள்ளதாக வங்கியின் உள்ளக வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. குறித்த அந்த நபர் 2010ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவராக இருந்து வருகின்றார். அரசுகள் மாறும் சந்தர்ப்பங்களில் வங்கிகளது பணிப்பாளர்கள் சபையினும் உறுப்பினர்கள் மாற்றப்படுவதுண்டு. ஆனால் மேற்குறிப்பிட்ட நபர் ஏதோ விதத்தில் மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையில் தொடர்தும் அங்கம் வகித்து வருகிறார்.

**நாட்டைக் குட்டிச் சுவராக்க முனையும் ரணில் தரப்பினர்**

"ரணில் தரப்பினரும், மலிக் சமரவிக்கிரம தரப்பினரும் இந்த நாட்டை முன்னேற்றும் நோக்கில் அரசை நிர்வகிக்க முயற்சிக்கவில்லை. அந்தத் தரப்பினர்கள் கடந்த பல ஆண்டுகளாக இருப்பிலிருந்த வருமதியை இப்போது அறவிட்டுக்கொள்ளும் விதத்திலேயே செயற்படுகின்றனர்." மேற்கண்ட விதத்தில் தமது மன ஆதங்கத்தை அண்மையில் வெளிப்படுத்தியவர், ஜனவரி எட்டாம் திகதிய ஆட்சி மாற்றத்துக்காகக் கடுமையாக உழைத்த, நாட்டு நலன் நாடிச் செயற்பட்ட ஒரு பிரமுகராவார். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் என்னவானபோதிலும், இலங்கை மத்திய வங்கி உட்பட்ட அரச வங்கிகள் மற்றும் சில அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை நலிவுபடுத்தும் விதத்தில் ரணில் தரப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

உண்மையில் இந்த நாட்டின் பொருளாதார நிலை வலுமிக்கதாகத் திகழ்ந்ததொரு காலகட்டாகச் சிறிமாவோ பண்டாரநாயகாவின் ஆட்சிக்காலத்தையே குறிப்பிட இயலும். 1960துகளில் நாட்டின் பொருளாதார நிலை பலம் கண்டிருந்தது. தனியார் துறைகள் பலவற்றை அரசுடமையாக்கிய சிறிமாவோ, அரச நிறுவனங்களது வர்த்தகச் செயற்பாடுகளில் முன்னேற்றங்களை ஈட்ட வழியமைத்து வைத்தார். 1961ஆம் ஆண்டில் இலங்கை வங்கியை அரசுடமை ஆக்கி வைத்த சிறிமாவோ, மக்கள் வங்கிச் சேவையையும் உருவாக்கி வைத்தார். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை நிறுவியதுடன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். சகல வெளிநாட்டு நிறுவகங்களது சொத்துக்களையும் அரசுடமை ஆக்கி வைத்தார். இலங்கையைத் தென்னாசிய வட்டகை நாடுகளில் பொருளாதாரத்துறையில் வலு மிக்கதொரு நாடாகச் சிறிமாவோ ஆக்கி வைத்தார்.

ஆனால், 1977ஆம் ஆண்டில் ஜே.ஆரின் தலைமையில் ஆட்சி அமைத்த ஐ.தே.கட்சி அரசு திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்து வைத்தது. அதன் காரணமாக நாட்டின் பல்வேறு துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படப் பெரும் காலநேரம் ஆகவில்லை. அந்த வகையில் இன்றைய காலகட்டத்தில் அரச நிறுவனங்கள் செயலிழந்த நிலையை எட்டியுள்ளன. மீளச் செலுத்த இயலாத நிலையில் கடன்சுமை நாட்டைச் சிறைப்படுத்தியுள்ளது.

**ஆரம்பகால இலங்கை அரசியல் போக்கு**

1950 மற்றும் 1960துகளில் இந்த நாட்டை நிர்வகித்த அரசியல் தலைவர்கள், நாட்டின் வளங்களைச் சுரண்டுவதைவிடுத்து, நாட்டின் பொருளாதார வளத்தை வலுவுள்ளதாக்கும் விதத்தில் செயற்பட்டனர். ஆனால் இன்று கால ஓட்டத்தில் ஊழல் மோசடிகள் மலிந்த அரசியல் செற்பாடுகளால் நாடு பெரும் இக் கட்டு நிலைக்கு உட்பட்டுள்ளது. ரணில் தரப்பினருக்கு முழு நாடுமே கொழும்பு நகரம் போன்ற தோற்றத்தை ஏற்படுத்திவைத்துள்ளது. இந்த நாட்டின் கிராமப் புறங்களின் சாதாரன பொது மக்களது சிரமங்கள், கவலைகள் என்பவற்றை இந்தத் தரப்பினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.



ஆயினும் ரணிலின் குறித்த தரப்பினரால் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள இயலாதுள்ளது. அவர்களுக்கு பணம் வருவதும், போவதும் மட்டுமே தென்படுகிறது. இந்தத் தரப்பினர்கள் முழுநாட்டையுமே சூறையாடி முடிக்கும் வரை, ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டில் என்ன நடக்கிறது என்பது குறித்து எதுவும் தெரிந்து கொள்ள இயலாத ஒருவராக , எதனையும் கண்டுகொள்ளாத ஒருவராக, நாட்டின் யதார்த்த நிலை குறித்துச் சிந்தித்து உணர்ந்து கொள்ள இயலாத ஒருவராக ஒரு கைக்குழந்தை போன்று நடித்து வருகிறார். இது எந்த அளவுக்கு இந்த நாட்டை அதலபாதாளத்துக்கு .இட்டுச் செல்லப்போகிறது என்பது பலரும் கவலைகொள்ள ஆரம்பித்துள்ளனர்.

**முக நூலிலும் கேலி செய்யப்படும் இன்றைய அரசியல் நிலை**

கடைசியாகப் 'பேஸ்புக்' எனப்படும் முக நூல் நண்பரான சொனால குணவர்த்தன என்பவர் தமது முகநூலில் பதிவிட்டுள்ளன கதையொன்றை இங்கு குறிப்பிடுவதன் மூலம் நாட்டின் இன்றைய நிலை குறித்து வெளிப்படுத்த முடியுமெனத் தோன்றுகிறது. நண்பர் சொனால குணவர்த்தன தமது முக நூலில் பதிவிட்டுள்ள கதை இது தான்.

இந்த நாட்டின் தலைமை அமைச்சர் தமக்குக் கிடைத்த, தமது பெயருக்கு எழுதப்பட்டதான காசோலையொன்றை எடுத்துக் கொண்டு அரச வங்கியொன்றில் அதனை மாற்றிப் பணமாகப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் குறித்த அந்த வங்கிக்குள் உட்புகுகிறார். பணம் பெற்றுக் கெள்ளும் கரும பீடத்தில் அதற்காகக் காத்திருப்பவர்கள் வரிசையில் அமைதியாக இணைந்து கொள்கிறார்.

சில நிமிடங்களுக்குப் பின்னர் தமக்கான வாய்ப்புக்கிட்டியதும் அவர் பணம் பெற்றுக் கொள்ளும் கரும பீடத்தில் கடமையில் ஈடுபட்டிருக்கும் வங்கி உத்தியோகத்தரிடம் தமது கையிலிருந்த காசோலையைக் கையளிக்கிறார்.

**தலைமை அமைச்சர்:** - தயவுசெய்து இந்தக் காசோலையை மாற்றிப் பணம் தர இயலுமா?

**வங்கி உத்தியோகத்தர் :** தயவு செய்து உங்களுடைய ஆள் அடையாள அட்டையைத் தாருங்கள்!

**தலைமை அமைச்சர்:** - உண்மையில் நான் எனது ஆள் அடையாள அட்டையை எடுத்து வரவில்லை. ஆனால், எமது விடயத்தில் அது அவசியமானது அன்று. நான் ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டின் தலைமை அமைச்சர்

**வங்கி உத்தியோகத்தர் :** நீங்கள் யாரென்பதை நான் நன்கறிவேன். ஆனால் வங்கியின் சட்ட திட்டங்களுக்கு அமைய உங்களது ஆள் அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கப்படுவது அவசியமானது.

**தலைமை அமைச்சர் :** - இந்த வங்கியில் கடமையாற்றும் எந்தவொரு உத்தியோகத்தரிடமும் கேட்டுப்பாருங்கள் நான் யாரென்பதை? சகலருக்கும் என்னை நன்றாகத் தெரியும்.

**வங்கி உத்தியோகத்தர் :** நீங்கள் தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும் நான் எந்த விதத்திலும் வங்கியின் சட்ட திட்டங்களுக்கு அமைந்தே பணியாற்ற வேண்டியுள்ளது.

**வங்கி உத்தியோகத்தர்:** (பொறுமை இழந்த நிலையில் உரத்த குரலில்)

சேர்! நான்சொல்வதைக் கேளுங்கள்! ஒரு தடவை பிரபல சிங்களப் பாடகர் விக்ரர் ரத்நாயகாவுக்கும் இதேபோன்ற சிக்கல் தான் ஏற்பட்டது. பின்னர் அவர் மிக இனிமையானதொரு பாடலைப் பாடிக்காட்டினார்.

அவர் பாடலைப் பாடிய விதத்திலி ருந்து அவர் உண்மையில் விக்ரர் ரத்நாயக தான் என்பதை நாம் உணர்ந்து கொண்டு அவரது காசோலையை மாற்றிப் பணம் வழங்கினோம்.

மற்றொரு நாள் ஆள் அடையாள அட்டை இல்லாமல் காசோலை ஒன்றை மாற்றுவதற்கு இங்கு வந்த ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திசநாயகவுக்கும் இதேபோன்றுதான் சிக்கல் ஏற்பட்டது. எமது மறுப்பை அடுத்து அவர் ஆக்ரோசமான குரலில், கண்களை உருட்டி "மகிந்த ஒரு கள்ளன்"" என மூன்று தடவைகள் கோசமிட்டார்.

அவர் அவ்விதம் சத்தமிட்டதை வைத்து அவர் அனுரகுமார திசநாயகதான் என்று தீர்மானித்து நாம் அவரது காசோலையை மாற்றிப் பணம் வழங்கினோம். நீங்கள் தான் இந்த நாட்டின் தலைமை அமைச்சர் என்று நாங்கள் ஏற்றுக் கொ்ள்ளத்தக்க விதத்தில் நீங்களும் அதேபோன்று ஏதாவது செய்து எங்களை நம்பவைக்க முடியுமா சேர்? என்றார்.

இதனையடுத்து நீண்ட யோசனையின் பின்னர் ரணில் வாயைத் திறந்து "உண்மையில் எனது மூளையில் எதுவென்றும் தோன்றவில்லை. என்னால் இது விடயத்தில் என்ன செய்ய முடியும் என்று கூடச் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை என்றார்.

எதுவொன்று குறித்தும் உறுதியாக முடிவு செய்ய இயலாத இந்த மனிதர் நாட்டின் தலைமை அமைச்சர் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட அந்த வங்கி உத்தியோகத்த் "சரி சேர்! உங்களுக்கு ஆயிரம் ரூபா நோட்டுக்களாகளாவா? அல்லது ஐயாயிரம் ரூபா நோட்டுக்களாகவா பணம் வேண்டும்" என்று கேட்டார்.

முகநூல் நண்பர் சொனால குணவர்த்தன தமது முக நூலில் பதிவிட்டுள்ள மேற்குறித்த கதை, ஒரு புறம் தலைமை அமைச்சரைக் கிண்டல் செய்யும் விதத்தில் கருதத்தக்க ஒன்றானாலும் மறு புறத்தில் யதார்த்த உண்மையும் அதுவேதான் என்பதை உறுதிப்படுத்துகிறதல்லவா?

## ஆசிரியருக்கான கடிதம்

# தமிழ்த் தலைமைகள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்?

சுதந்திரத்துக்குப் பின் இன விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் தமிழ்த் தலைமைகள் மேற்கொண்ட அகிம்சை வழிப் போராட்டங்கள் அனைத்தும் சிங்களக் காடையர்களாலும் அரச படைகளாலும் அச்சுறுத்தப்பட்டுத் தடை செய்யப்பட்டது வரலாறு. 1956ஆம் ஆண்டு நாடாளுமன்றச் சதுக்கத்தில் தந்தை செல்வா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் சிங்களக் காடையர்களின் அடிதடிக்கு உள்ளானது. இதை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தார் அன்றைய தலைமை அமைச்சர் பண்டாரநாயக்கா.


இப்படியே போராட்டங்கள் நசுக்கப்பட்டு வந்தன. அதன் விளைவு ஆயுதப்போராட்டத்துக்கு வித்திட்டது. ஐ.நா. சபையோ பன்னாடுகளோ இந்தப் பிரச்சினையை உரிய முறையில் தீர்த்துவைப்பதற்கு இதயசுத்தியுடன் செயற்படவில்லை. ஆயுதப் போராட்டம் வலுவடைந்த பின் ராஜபக்சாக்களின் 'பயங்கரவாதம்' என்ற காட்டுக் கத்தலை ஏற்றுக் கொண்டு பன்னாடுகளும் ஐ.நா. சபையும் இன அழிப்புக்குத் துணைபோயிருந்தன.

ஐ.நா. செயலாளர் பான்கி மூன் ராஜபக்சாவின் கையாளாகவே செயற்பட்டு வந்தார். பயங்கரவாத முத்திரை குத்திய இன அழிப்புப் போர் முடிவடைந்து பத்து வருடங்கள் கடந்திருக்கின்ற நிலையில் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வேதும் கிட்டவில்லை. சிங்கள ஆட்சியாளர்களின் இழுத்தடிப்புகளுக்குத் துணைபோகும் நிலையே தொடர்கிறது.

2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.நா. சபை ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பாவை. அதன் செயற்படு நம்பகத் தன்மையற்றது. எனவே மாற்று அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் வெளிவந்தது.

பன்னாடுகளினதும் ஐ.நா.வினதும் செயற்பாடுகள் அந்தக் கருத்தை மெய்ப்பிற்பதாகவே அமைந்துள்ளன. இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் அரச படைகளும் புத்த பிக்குகளும் மேற்கொள்ளும் செயல்களை இன்றைய அரசும் ஊக்குவிப்பதாகவே உள்ளது. ஜனநாயக முத்திரை அணிந்த நாடுகளும் இந்தச் செயல்களுக்குப் பக்கபலமாகவே இருந்து வருகின்றன. இதில் தமிழ்த் தலைமைகள் மௌனம் காப்பது தான் வேதனையும் வேடிக்கையுமாக உள்ளது.

ப.யேசுபாதம்



## நிலவில் மனிதன் கால்பதித்தது உண்மையில்லை!

நியூயோர்க்.ஒக்.15
நிலவில் மனிதன் கால்பதித்தது மானுடகுலத்தின் மிக உயர்ந்த சாதனையாகக் கருதப்பட்டு வரும் நிலையில், நிலவில் மனிதன் கால் வைத்தது உண்மையில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் ஒரு கானொலி வெளியாகியிருக்கிறது.
நிலவில் மனிதன் கால்பதித்தான் என்பது பொய். அது ஏதோ ஓர் இடத்தில் எடுக்கப்பட்ட காட்சியாகும். நாசா உண்மையைக் கூறவில்லை. என்று பலரும் விமர்சித்தே வந்துள்ளனர். 1969ஆம் ஆண்டு அப்பலோ நிலவில் இறங்கியதிலிருந்தே பலரும் நிலவில் மனிதன் கால் வைத்ததாகக் காட்டப்படும் கானொலி போலியானது என்றே கூறி வந்தார்கள். நிலவில் கால் வைத்த விண்வெளி வீரர்கள் அணிந்திருக்கின்ற தலைக்கவசத்தில் பொருத்தப்பட்டிருக்கின்ற கண்ணாடியில் பலரது உருவங்கள் தெரியும் கானொலி ஒன்று அண்மையில் வெளியானது. இந்த நிலையில் 1966ஆம் ஆண்டுக்கும் 1972ஆம் ஆண்டுக்கும் இடையே படம் பிடிக்கப்பட்டதாகக் கருதப்படும் இன்னொரு கானொலி தற்போது வெளியாகியுள்ளது. அந்தக் கானொலியில் நிலவின் தரை போன்று காணப்படும் ஓர் இடத்தில் படம் எடுப்பவர்கள் தங்கள் ஒளிப்படக் கருவிகளைத் தயாராக வைப்பது தெரிகிறது. ஒரு விண்வெளி வீரர் அமெரிக்கக் கொடியை நடும்போது இயக்குநர் ஒருவர் ரெடி, ஆக்ஷன் என்று கூறும் குரலும் அந்தக் கானொலியில் பதிவாகியுள்ளது. இன்னொரு காட்சியில் அப்பல்லோ விண்கலம் போல் காணப்படும் ஒரு பொருளைச் சுற்றிப் படப்பிடிப்புக் குழுவினர் நிற்பது தெரிகிறது. நீல் ஆம்ஸ்ட்ரோங், பஸ் ஆல்ட்ரின் மற்றும் மைக்கல் காலின்ஸ் மூவரும் விண்கலத்தை நோக்கிச் செல்லும்போதும் ரெடி, ஆக்ஷன் என்று கூறும் குரல் ஒலிக்கிறது.
இந்தக் கானெலி காரணமாக மானுட குலத்தின் ஆகச்சிறந்த அறிவியல் உச்சம் என்று கருதப்பட்டு வருவது ஏமாற்று வேலையா? என்ற கருத்துக்கள் உருவாகி வருகின்றன.

## துடைப்பத்துடன் களமிறங்கிய கான் தூய்மை பாகிஸ்தான் திட்டம் ஆரம்பம்



இஸ்லாமபாத்.ஒக்15
பாகிஸ்தானின் கல்லூரி ஒன்றில், நேற்று முன்தினம் கையில் துடைப்பத்துடன் களமிறங்கிய பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தூய்மை பாகிஸ்தான் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.
தூய்மையான பாகிஸ்தான் மற்றும் பசுமையான பாகிஸ்தான் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் தலைவரான இம்ரான் கான் நாடாளுமன்ற தேர்தலின்போது வாக்குறுதி அளித்திருந்தார். அதன்படி, பாகிஸ்தான் நாட்டிலுள்ள 4 மாகாணங்களைச் சேர்ந்த முக்கிய பெருநகரங்களில் அவர் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார். இஸ்லாமாபாத் நகரில் உள்ள கல்லூரி வளாகத்தை துடைப்பத்தால் பெருக்கிச் சுத்தம் செய்த இம்ரான் கான், அங்கு மரக்கன்று ஒன்றையும் நட்டிருக்கிறார். இதற்கு முதலில் இந்தத் திட்டம் தொடர்பாக அவர் பேசியிருந்த போது, இஸ்லாமாபாத் நகரில் உள்ள குடிசைப்பகுதிகள் குப்பைமேடாக மாறிப்போனதாகவும், நீரூற்றுகள் அனைத்தும் சாக்கடைகளாகி விட்டதாகவும் குறிப்பிட்டு, "இந்த நிலையை மாற்றுவதற்கு நாம் அனைவரும் ஒன்றுகூடி உறுதியேற்க வேண்டும். அடுத்த தலைமுறையினரிடம் தூய்மையான பாகிஸ்தானை நாம் ஒப்படைக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டிருந்தார். இந்தத் திட்டம் படிப்படியாக நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் எனப் பாகிஸ்தான் அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பாகிஸ்தானின் அயல்மற்றும் எதிரிநாடான இந்தியாவில் 'சுவாச் பாரத்' என்ற பெயரில் தூய்மை இந்தியா திட்டத்தை அந்த நாட்டின் தலைமை அமைச்சர் மோடி செயல்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

பத்திரிகையாளர் காணாமல்

# சவூதி –துருக்கி

# மோதல் பே

இஸ்தான்புல்.ஒக்.15
துருக்கியிலுள்ள சவூதியின் தூதரகத்துக்குள் சென்ற பத்திரிகையாளர் ஜமால் காணாமல் போயிருந்தார். அவர் கொலை செய்யப்பட்டதாகத் துருக்கி, சவூதி மீது குற்றஞ்சாட்டி வருகின்றது. இந்த விவகாரத்தால் சவூதி துருக்கி இடையே மீண்டும் மோதல் வெடித்துள்ளது.



துருக்கி திட்டமிட்டுப் பொய்ப் பரப்புரை செய்து வருவதாகச் சவூதி குற்றம்சாட்டியுள்ளது. பத்திரிகையாளர் ஜமால், சவூதியால் கொல்லப்பட்டுவிட்டார் என்று கருதப்படத்தக்கதான ஆதாரங்களைத் துருக்கி வெளியிட்டிருந்தது. "எங்களுக்குக்கிடைத்த குரல் பதிவு மற்றும் கானொலி ஆதாரங்களின் அடிப்படையில் ஜமால் ஒக்ரோபர் 2ஆம் திகதி கொல்லப்பட்டிருக்கிறார். அவரைக் கொன்று அவரது உடலைச் சவூதி அதிகாரிகள் அழித்துள்ளனர். எங்களுக்குக் கிடைத்த அந்தக் கானொலியில் உள்ள நபர்கள் அரபிக் பேசுவதை நீங்கள் கேட்கலாம். அவர்கள் ஜமாலைத் தாக்குகின்றனர். அவர்கள் அவரைத் துன்புறுத்திக் கொலை செய்கின்றனர். இதில் நீங்கள் ஜமாலின் குரலைக் கேட்கலாம்" என்று துருக்கி மேலும் சுட்டிக்காட்டி யிருந்தது.




### துருக்கியின் குற்றச்சாட்டு

கடந்த வாரம் துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதியின் தூதரகத்துக்குள் சென்றிருந்தபோது அங்கிருந்து ஜமால் காணாமல் போயிருந்தார். இந்த வழக்குடன் தொடர்புடையதாகக் குறிப்பிட்டுச் சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரைத் துருக்கி வெளியிட்டிருந்தது. ஜமாலைக் கொடூரமாகக் கொலை செய்து அவரது உடல் அழிக்கப்பட்டிருப்பதாகவும் துருக்கி குற்றம் சாட்டியது. ஜமாலை சவூதி அரசு கொலை செய்திருக்கிறது என்று உறுதியாகக் கூறிக் கானொலி, மற்றும் குரல் பதிவு ஆதாரத்தை வெளியிட்டிருக்கிறது. பன்னாட்டு அளவில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

### சவூதி மறுப்பு

சவூதி அரேபியத் தூதரகத்துக்குள் வந்த ஜமால் சிறிது நேரத்தில் திரும்பி விட்டார். அவர் எங்கு சென்றார்? எங்கு இருக்கிறார் என்ற விவரங்களை சொல்ல வேண்டிய பொறுப்பு துருக்கிக்கு உள்ளது.
ஆனால், இந்த விவகாரத்தைத் திசை திருப்பும் வகையில் போலியான கானொலிக் காட்சிகளை வெளியிடுவது கண்டிக்கத்தக்கது. இது
இரண்டு நாடு
கள் இடையே
யான உறவைச்
சீர்குலைக்க வகை செ
றது சவூதி அரசு. இத
விதமாக ஜாமல் சவ
இருந்து நலமுடன் வெ
லிக் காட்சியை வெளியி
எனத் துருக்கி சவால் எ

### மாநாடு புறக்கணிப்பு

ஜமால் காணாமல்போ
பொருளாகியிருக்கின்
சவூதி அரேபியாவில் இ
கிய மாநாடு ஒன்றை
குறித்துப் பிரிட்டன் ம
யோசித்து வருவதா
செய்தி வெளியிட்டுள்ள
பத்திரிகையாளர் ஜம
சவூதி அரசுதான் கார
றியப்பட்டால், சவூதிக்
தண்டனையை வழ



# தற்கொலைப் படைத் தாக்குதல்

மொகடிசு.ஒக்.15
சோமாலியாவில் விடுதிகளைக் குறிவைத்து அடுத்தடுத்து நிகழ்ந்த தற்கொலைப் படைத் தாக்குதல்களில் 14 பேர் சாவடைந்துள்ளனர். சோமாலியா நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பே பிராந்தியத்தில் தற்கொலைப் படைப் போராளிகள் இரண்டு இடங்களில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
பாய்டோவா நகரில் உள்ள பிலன் விடுதி மற்றும் பத்ரி விடுதிக்குள் திடீரெனப் புகுந்த தற்கொலைப்படைப் பேராளிகள் தங்கள் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர். இந்தத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதிக்கு உணவருந்துவதற்கு வந்த பொதுமக்கள் ஆவர். இந்தத் தாக்குதலுக்கு அல்ஷபாப் அமைப்புப் பொறுப்பேற்றுள்ளது.
இந்த அமைப்பு, சோமாலியாவிலும் கிழக்கு ஆபிரிக்காவின் சில பகுதிகளிலும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவது குறிப்பி டத்தக்கது.
சோமாலியாவில் 30ஆண்டுகளாகப் பாதுகாப்பற்ற சூழ்நிலை, தலைவிரித்தாடும் வன்முறை மற்றும் அரசியல் குழப்பங்கள் நிலவுகின்றன. அரச படைகளுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையே நடைபெற்று வரும் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.



...ல்போன விவகாரம்

# ...கி இடையே
# ...போக்கு



...ார்
...கத்
...ல்

...து. இது ...6 நாடு ...டையே ...றவைச் ...க வகை செய்யும் என்றிருக்கி ...தி அரசு. இதற்குப் பதிலளிக்கும் ... ஜாமல் சவூதித் தூதரகத்தில் ...நலமுடன் வெளியேறிய கானொ ...ியை வெளியிடுவதற்குத் தயாரா? ...ருக்கி சவால் விடுத்துள்ளது.

**...புறக்கணிப்பு**

...ாணாமல்போன விவகாரம் பேசு ...ாகியிருக்கின்ற இந்தச் சூழலில் அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஜமால், சவூதி அரசால் கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டால் கூட்டுக் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிடவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பியத் தூதர்கள் ஆலோசித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஜமால் அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பத்திரிகையான வோஷிங்டன் போஸ்டில் கட்டுரைகளை எழுதி வந்தவர். சவூதி




...ரேபியாவில் இடம்பெறவுள்ள முக் ...நாடு ஒன்றைப் புறக்கணிப்பது ... பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ...து வருவதாகவும் ஊடகங்கள் ...வெளியிட்டுள்ளன.

...கயாளர் ஜமால் கொலைக்குச் ...ரசுதான் காரணம் என்று கண்ட ...டால். சவூதிக்குக் கடுமையான ...னையை வழங்கப்படும் என்று அரசை விமர்சித்தும், குறிப்பாக அந்த நாட்டு இளவரசர் முகமது பின் சல்மானைக் கண்டித்தும் பல கட்டுரைகள் எழுதியிருந்தார். துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்ததாகத் தகவல் வெளியானது. இந்த நிலை யில் தான் துருக்கியிலுள்ள சவூதியின் தூதரகத்துக்குள் நுழைந்த அவர் காணாமல்போயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்தோனேசியாவில் நிலச்சரிவு மாணவர்கள் உட்பட 22 பேர் சாவு

ஜகார்த்த.ஒக்.15

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி மாணவர்கள் உட்பட 22 பேர் பரிதாபமாக சாவடைந்துள்ளனர். இந்தோனேசியாவில் கடந்த மாதம் சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டிருந்தது. இதில் சிக்கி ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இந்த நிலை யில் தான் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி மாணவர்கள் உள்பட் 22 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் வடபகுதியில் அமைந்துள்ள மண்டெய்லிங் நடால் மாவட்டத்தில் உள்ள மவுரா சலாதி கிராமத்தில் இஸ்லாமிக் உறைவிட பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பகுதியில் நேற்று கனமழை பெய்தது. இதனால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி அந்த பள்ளி கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது.

கட்டட இடிபாடுகளில் சிக்கி 11 மாணவர்கள் பரிதாபமாக சாவடைந்தனர். மேலும் 11 பேர் நிலச்சரிவில் சிக்கிச் சாவடைந்தனர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்தனர் என்றும், 15க்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

## 3கோடிக்கும் அதிகமான முகப்புத்தகக் கணக்குகள் திருட்டு முகப்புத்தக நிறுவனம் அதிர்ச்சித் தகவல்




வோஷிங்டன்.ஒக்.15


முகப்புத்தகப் பயனாளர்கள் 3 கோடி பேரின் பிறந்த திகதி, கல்வி, உள்பட பிற தகவல்கள் இணையத் திருடர்களால் திருடப்பட்டுவிட்டதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தலின் போது, முகப்புத்தகத்தில் உள்ள 5 கோடி வாக்காளர்களின் தகவல்களை கேம்பிரிட்ஜ் அனாலிடிகா நிறுவனம் திருடியதாகப் பிரிட்டனின் பிரபல தொலைக்காட்சி நிறுவனமான நியூஸ் 4 செய்தி வெளியிட்டிருந்தது. அமெரிக்க தேர்தல் விவகாரத்தில் முகப்புத்தகத்தின் பங்களிப்பு இருந்துள்ளதாக வெளியான தகவலையடுத்து முகப்புத்த நிறுவனம் பெரும் சர்ச்சையில் சிக்கியது. ஒரு குறிப்பிட்ட தொழில்நுட்பத்தின் மூலம் இந்தத் தகவல்கள் திருடப்பட்டதாகவும், இதை டிரம்ப் அரசியல் பரப்புரையின்போது பயன்படுத்திக் கொண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து, முகப்புத்தக நிறுவனர் மார்க் சூகர்ஸ்பெர்க் இந்த விவகாரத்தில் தவறு நடந்து விட்ட உண்மையை ஏற்றுக் கொண்டிருந்தார். இந்த நிலையில், முகப்புத்தகப் பயனாளிகள் 3 கோடி பேரின் தகவல்கள் தற்போது திருடப்பட்டு உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

## துருக்கி சிறைப்படுத்தியிருந்த அமெரிக்கப் பாதிரியார் விடுதலை

அங்காரா.ஒக்.15

துருக்கியில் உள்ள போராளிக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டுக் காரணமாகத் துருக்கியால் சிறைப் பிடிக்கப்பட்ட அமெரிக்கப் பாதிரியாரை விடுதலை செய்து அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பாதிரியார்,



ஆண்ட்ரூ பரன்சன், துருக்கியில் ஒரு தேவாலயத்தில் பணிபுரிந்து வந்தார். அவர் அங்கு உள்ள குர்து இனப் போராளிகள் குழுவுடன் தொடர்புகள் வைத்து இருக்கிறார், உளவு வேலைகளில் ஈடுபடுகிறார் என்று கூறி, துருக்கி அரசு அவரைக் கைது செய்து சிறைக் காவலில் வைத்திருந்தது. அவரை விடுதலை செய்து, அமெரிக்காவுக்குத் திருப்பி அனுப்புமாறு டிரம்ப் நிர்வாகம் கூறியும், துருக்கி அவரை விடுதலை செய்ய மறுத்தது. இந்த நிலையில் அவருக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துத் துருக்கி நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு அளித்தது. அவர் தண்டனைக் காலத்தை ஏற்கனவே கழித்து விட்டதால், அவரை விடுதலை செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பைக் கேட்டு பாதிரியார் ஆனந்தக்கண்ணீர் சிந்தினார். மனைவி நொரினை கட்டித்தழுவி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அத்துடன் அமெரிக்க அதிபர் டிரம்புக்கு நன்றி கூறுவதாகவும் தெரிவித்தார். விடுதலையைத் தொடர்ந்து அவர் மனைவியுடன் துருக்கியை விட்டு வெளியேறி உடனடியாக அமெரிக்காவுக்குத் திரும்பியுள்ளார்.


# ...ததல்கள்; சோமாலியாவில் 14 பேர் சாவு



# சில மணி நேரம் மட்டும் நடக்கும் கதைதான் 'சூப்பர் டிலக்ஸ்'!

திருநங்கை வேடத்தில் விஜய் சேதுபதி நடித்து வரும் 'சுப்பர் டிலக்ஸ்' படத்தின் கதை குறித்து அதன் இயக்குநர் தியாகராஜன் குமார ராஜா கூறியதாவது:

"தொடர்பில்லாத 13 பேர் ஒன்றாக இணைவதுதான் இந்தப் படத்தின் கதை. அதுவும் சில மணி நேரங்களில் நடக்கும் கதைதான் இது. சமந்தாவுடன்தான் இந்தப் படம் தொடங்கும். தன்னுடைய பாத்திரத்தை உணர்ந்து, முகச் சுளிப்பே இல்லாமல் அந்தக் காட்சியை நடித்துக் கொடுத்துள்ளார் அவர்." என்றுள்ளார்.




# சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | 7 | 6 | | |
| | | 2 | 9 | | | 1 | | |
| 9 | | | 8 | | 4 | | | |
| 3 | 7 | | | | | | 8 | 5 |
| | 4 | | | | | | 6 | |
| | | | | 4 | | | 1 | 2 |
| | | | 4 | | 9 | | | 1 |
| | | 9 | | | 5 | 2 | | |
| | | 6 | 2 | | | | 3 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 8 | 1 | 9 | 2 | 5 | 6 | 7 |
| 9 | 2 | 6 | 5 | 8 | 7 | 1 | 3 | 4 |
| 5 | 7 | 1 | 6 | 3 | 4 | 2 | 8 | 9 |
| 4 | 3 | 2 | 8 | 7 | 5 | 9 | 1 | 6 |
| 6 | 8 | 5 | 2 | 1 | 9 | 7 | 4 | 3 |
| 1 | 9 | 7 | 3 | 4 | 6 | 8 | 5 | 2 |
| 8 | 6 | 3 | 9 | 2 | 1 | 4 | 7 | 5 |
| 2 | 1 | 4 | 7 | 5 | 3 | 6 | 9 | 8 |
| 7 | 5 | 9 | 4 | 6 | 8 | 3 | 2 | 1 |


நேற்றைய விடை

# twitter



Vimal.Suresh@vimal_suresh

சமூகத்தில் வாழ்வதை விடச் சமூக வலைதளங்களில் வலம் வர, அதிக மனமுதிர்ச்சி தேவைப்படுகிறது!!!







# எந்தக் காலம்

பொறியின் வழியே எலியைப்
பிடித்தது அந்தக்காலம்
சுட்டெலியின் (மவுஸ்)வழியே
பேரறிவைப் பிடிப்பது இந்தக்காலம்!

கடிதம் போட்டுக் காத்துக்கிடந்தது
அந்தக்காலம்
மின்னஞ்சல் வழியே காலம்
சுருங்குது இந்தக்காலம்!

படைப்புகள் அனுப்பி
ஏங்கிக்கிடந்தது அந்தக்காலம்
ப்ளாக்கின் வழியே யாவரும்
படைப்பாளரானது இந்தக்காலம்!

வீட்டுமுகவரிகள் மட்டுமே
அடையாளமானது
அந்தக்காலம்
முகநூலும் கீச்சகமும்
அடையாளமானது இந்தக்காலம்!

தீப்பெட்டியும், நூலும்
தொலைபேசியானது
அந்தக்காலம்
ஸ்கைப்பும், ஜியும் முகம்பார்த்துப்
பேசச்சொல்லுது இந்தக்காலம்!



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவீர்கள்.

**இடபம்:** கடந்த கால அனுபவத்தால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திருப்திகரமாக நிறைவேறும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மிதுனம்:** சிரமங்களை வெல்லும் திறன் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**கடகம்:** சுயபெருமை பேசுவதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சிறக்க கூடுதல் பணிபுரிவது அவசியம். வருமானம் சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** நற்செயலில் ஈடுபட்டு பாராட்டு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான நிலை உருவாகும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** உறவினரின் அன்பைக் கண்டு பெருமிதம் கொள்வீர்கள். பேச்சு, செயலில் நேர்மை வெளிப்படும். தொழில், வியாபாரம் செழித்து இலாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** உறவினர்களிடம் உங்கள் மீதான மதிப்பு உயரும். தொழில், வியாபாரம் செழிக்க நவீன சீர்திருத்தம் அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** முன்னர் செய்த உதவிக்கு நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி மேற்கொள்வீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**தனுசு:** உங்கள் சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேற தாமதமாகலாம். திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**மகரம்:** பொதுநல சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**கும்பம்:** சவால்களை வெல்லும் திறன் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்த வேண்டாம். பணவிஷயத்தில் விழிப்புடன் செயல்படவும்.




# மனம் தொட்ட கதை

மதிப்புக்குரிய முதலாளிக்கு வணக்கம்.

என் பக்கத்து வீட்டுக்காரர்கள், எதிர் வீட்டுக்காரர்கள் மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டரில்தான் அலுவகம் போகிறார்கள். இன்னும் நான் சைக்கிளில்தான். இது எனக்கு உறுத்தவில்லை.

அதனால் உங்களிடம் நான் சம்பள உயர்வு கேட்கவில்லை.
என் அருகாமை வீட்டுப் பெண்களில் பலர், சிறப்பு நாள்களில் பட்டுப்புடவைதான் கட்டுகிறார்கள். என் மனைவியோ நூல் சேலையில்தான். அவள் புலம்பவில்லை.
அதனால் உங்களிடம் நான் சம்பள உயர்வு கேட்கவில்லை.
இப்போது கேட்கிறேன் எனக்குச் சம்பள உயர்வு வேண்டுமென்று. ஏன் தெரியுமா? அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகள் மூன்று வேளையும் சாப்பிடுவதை என் குழந்தைகள் கண்டு பிடித்து விட்டன.



# தோட்டம் நல்ல தோட்டம்



தோட்டம் நல்ல தோட்டமாம்- நம்மைச்
சொக்க வைக்கும் தோட்டமாம்
கூட்டமாக நாமும் ஒன்றாய்க்
கூடி ஆடும் தோட்டமாம்

வண்ண வண்ணப் பூக்களால்- நம்மை
மகிழ வைக்கும் செடிகளாம்
தின்னத் தின்னப் பழங்களாம் தினம்
தின்னக் கொடுக்கும் மரங்களாம்

கொஞ்சம் கிளியின் குரலுடன் கருங்
குயிலின் இசையும் அடடா!
நெஞ்சை அள்ளும் இவற்றை
நினைக்கும் போதே இன்பம்

பட்டுப்சூபால அழகாய் புற்கள்
படர்ந்திருக்கும் தரையில்
விட்டுப் போக மனமேயில்லை
மிகவும் நல்ல தோட்டமாம்.

# ஆமையும் நத்தையும்

அது ஓர் அடர்ந்த காடு. அந்தக் காட்டில் ஆமையும் நத்தையும் இணைபிரியா நண்பர்களாக இருந்தன. நண்பர்கள் இரண்டு பேருக்கும் நீண்டகாலமாக ஒரு மனக்குறை இருந்து வந்தது. தங்களால் வேகமாக நடக்கவோ, தாவிக் குதித்து ஓடவோ முடியவில்லை என்ற மனக்குறைதான் அது.

ஒருநாள் அவை இரண்டும் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஓர் அழகிய வெள்ளை நிற முயல் தாவிக்குதித்து. ஓடி வருவதைக் கண்டன. "முயலாரே நில்லுங்கள்" என்றது ஆமை. முயல் நின்றது. "நீ எப்படி இவ்வளவு வேகமாய் தாவிக் குதித்து ஓடுகிறாயே என்று" கேட்டது நத்தை.

"இது என்ன கேள்வி! உங்களுக்கு இருப்பதுபோல் என் முதுகில் கனமான ஓடு இல்லை. இந்தச் சுமை இல்லாததால் தான் வேகமாக ஓடுகிறேன் " என்று சொல்லிவிட்டு முயல் அவை இரண்டையும் இளக்காரமாகப் பார்த்தது.

"ஓஹோ! எங்களின் வேகக் குறைவுக்கு எங்கள் ஓடுகள்தான் காரணமா?" என்று கேட்டன.

"ஆமாம் நீங்கள் உங்கள் ஓடுகளைக் கழற்றிப் போட்டுவிட்டால் என்னைப் போல வேகமாக ஓடலாம். வேகமாக ஓடுவதில் ஓர் அலாதியான சுகம் இருக்கிறது தெரியுமா? அனுபவித்துப் பாருங்கள் தெரியும்" என்றது முயல்.

ஆமைக்கும் நத்தைக்கும் அந்த இடத்திலேயே தங்கள் முதுகு ஓடுகளைக் கழற்றி போட்டு விட வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அவற்றைக் கழற்ற முயன்றபோது திடீரெனப் புதர் மறைவில் ஏதோ அசையும் ஓசை கேட்டது. ஆமையும் நத்தையும் ஆபத்தை உணர்ந்தன.

தங்கள் ஓடுகளைக் கழற்றும் முயற்சியைக் கைவிட்டன. சட்டெனப் புதர் மறைவிலிருந்து ஒரு ஓநாய் வெளிப்பட்டு முயலை நோக்கிப் பாய்ந்தது. ஆமையும் நத்தையும் விருட்டென்று தங்கள் உடலை ஓடுகளுக்குள் இழுத்துக் கொண்டு உயிர் பிழைத்தன.

ஓநாய் முயலைப் பிடிப்பதற்காகத் துரத்தியது. சிறிது நேரம் சென்ற பிறகு ஓடுகளை விட்டு வெளியே வந்த ஆமையும் நத்தையும் முயலின் குருதியைப் பார்த்து உறைந்து போயின.

தாங்கள் வேகமாக ஓடுவதை விட உயிர்பிழைத்து வாழ்வதே முக்கியமானது என்பதை உணர்ந்தன. எதிரியி டமிருந்து தமது உயிர்களைக் காப்பாற்றிய தங்கள் ஓடுகளுக்கு அவை நன்றி தெரிவித்தன.



# நனவான கனவு!

மைக்கேல் பாரடே மிக ஏழ் மையான குடும்பத் தைச் சேர்ந்தவர். அதிகம் படிக்க வில்லை. புத்தகம் கட்டும் இடத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

அங்கே வரும் புத்தகங் களை எல்லாம் ஆர்வத்து டன் படித்தார். படித்தவற் றைக் குறிப்பு எடுத்துக் கொண்டார். ஒருநாள் வில் லியம் டான்ஸ், கட்டப்பட்ட புத்தகத்தை வாங்குவதற் காக வந்தார். அப்போது கடையின் உரிமையாளர் வ்பாரடேயின் குறிப்பு களைக் காட்டினார்.

ஒரு சாதாரண சிறுவன் எளிமையான முறையில் இரசாயனச் சோதனைக ளைப் பற்றி எழுதியிருந்த தைக் கண்டு வில்லியம் டான்ஸ் ஆச்சரியமடைந் தார்.

புகழ்பெற்ற விஞ்ஞானி சர் ஹம்ப்ரி டேவியின் உரை களைக் கேட்பதற்காக அனுமதி ரிக்கெற்றுக்களை வழங்கினார்.

நான்கு நாள்கள் உரைக ளைக் கேட்டார். 'இதே போல் ஒரு நாள் நானும் பேச முடியுமா? என் பேச் சையும் மக்கள் கேட்பார் களா? நான் அதிகம் படிக்கா தவன். நன்றாகப் பேசவும் தெரியாது. வசதியும் இல்லை' என்று யோசித்தார்.

அதற்காகக் கடுமையாக உழைத்தார். 15 ஆண்டுக ளுக்குப் பிறகு சிட்டி பிலாச பிகல் சொசைட்டியில் விஞ் ஞானி மைக்கேல் வ்பார டேயின் உரை நிகழ்ந்தது. ஹம்ப்ரி டேவிக்கு வந்த கூட்டத்தை விட அதிகமான கூட்டம் அங்கு கூடியது!




## எதிர்க்கருத்துச் சொற்களை இணைப்போம்

| | |
|---|---|
| 1. கேள்வி | மண் |
| 2. இரவு | பொய் |
| 3. விண் | தீது |
| 4. உண்மை | பதில் |
| 5. நன்று | பகல் |



## வர்ணம் தீட்டுவோம்



## பொருத்தமான சொல்லை எழுதுவோம்

| | | |
|---|---|---|
| 1. காகம் வசிக்கும் இடம் | | டு |
| 2. வண்டி இழுப்பது | | டு |
| 3. வெப்பம் என்பதன் மறுபெயர் | | டு |
| 4. மனிதன் வாழும் இடம் | | டு |
| 5. பெண்கள் காதில் அணிவது | | டு |

# வழிவிட்டு ஒதுங்கினார்

ஒருநாள் ஆங்கில நாடக மேதை .ஜோர்ஜ் பெர்னாட்ஷா குறுகலான ஒரு பாதை வழியாகச் சென்று கொண்டி ருந்தார். பெர்ணார்ட் ஷாவைப் பிடிக்காத ஒருவர் எதி ரில் வந்து கொண்டிருந்தார்.

அப்போது யார் யாருக்கு வழி விடுவது என்கிற பிரச் சினை எழுந்தது. எதிரில் வந்தர் "முட்டாள்களுக்கு நான் வழி விட்டு ஒதுங்குவதில்லை" என்றார் கார மாக.

"நான் ஒதுங்குவது உண்டு" எனச் சொல்லி பெர் னாட்ஷா வந்தவருக்கு வழிவிட்டு விலகி நின்றார்.



# ஒளியை அன்பால் உணர்வோம்!

அன்புமாறன்

> "உலகிலே உயிர் பெற்ற அனைத்து ஜீவராசிகளின் தேவைகளும் துலக்கம் பெற்று ஈடேறி வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அதேவேளை கண்பார்வையற்ற, விழிப்புலனற்ற மானிதங்கள் மீது எமது கவனம் ஈர்க்கப்பட வேண்டிய நல்லதோர் வாய்ப்பை உலகுக்கு வெளிச்சமிட்டு காட்டுவதே வெள்ளைப் பிரம்பு தினமாகும்."

விழிப்புலனற்றவர்கள் அல்லது முழுமையான பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் பயன்படுத்தும் ஒரு சாதனமாக வெள்ளைப் பிரம்பு விளங்குகின்றது. விழிப்புலனற்றவர்களின் ஒளிவிளக்காகவும், ஊன்றுகோலாகவும், அடையாளச் சின்னமாகவும் வெள்ளைப் பிரம்பு உள்ளது. 1964ஆம் ஆண்டிலிருந்து ஒக்ரோபர் 15 ஆம் திகதி பன்னாட்டு ரீதியில் வெண்பிரம்புப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

### வெள்ளைப் பிரம்பு

பிறிஸ்ரலைச் சேர்ந்த ஜேம்ஸ் பிக்ஸ் என்பவரால் 1921 ஆம் ஆண்டு வெள்ளைப் பிரம்பு கண்டு பிடிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. ஒரு விபத்தால் பார்வையை இழந்த ஜேம்ஸ் பிக்ஸ் வீதியில் செல்லும் வாகனங்களில் இருந்து தன்னைப் பாதுகாப்பதற்கு வெள்ளை நிறம் பூசப்பட்ட தடியைப் பயன்படுத்திக் கொண்டார். பத்து வருடங்களின் பின்பு வெள்ளைப் பிரம்புப் பாவனை உறுதிப்படுத்தப்பட்டது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இதன் தொழில்நுட்பம் அதிகரிக்கப்பட்டது. கலாநிதி 'றிச்சார்ட் கூவர்' நீளமான வெள்ளைப் பிரம்பை உருவாக்கினார்.

### வழிகாட்டு நாய்கள்

1931 ஆம் ஆண்டில் 'முரேல் குறூக்' , 'ரோசமன்ட் பொண்ட்' என்ற இரண்டு பிரித்தானியப் பெண்களால் முதன் முதலில் நான்கு 'வழிகாட்டு நாய்'களுக்கான பயிற்சி வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. 16ஆம் நூற்றாண்டு ஆங்கில இலக்கியங்களில் வழிகாட்டு நாய்கள் பற்றிக் கூறப்பட்டிருப்பதால் முன்பே பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. வழிகாட்டு நாய்கள் பார்வையற்றவர்களின் வழிகாட்டிகளாக இன்றும் பயன்படுத்தப்படுகின்றன.

### இரவு எழுத்து

பிரான்ஸில் 1800 ஆம் ஆண்டளவில் நெப்போலியனின் படையில் கடமை புரிந்த 'சார்ள்ஸ் பாபியர்' என்ற இராணுவ வீரர் இரவுநேரத்தில் இராணுவச் சிப்பாய்களால் பாதுகாப்பாகப் பயன்படுத்தக் கூடிய 'இரவு எழுத்து' என்னும் குறியீட்டு முறையைக் கண்டு பிடித்திருந்தார். இரவு வேளைகளில் தகவல்களைப் படிப்பதற்கு விளக்குகளைப் பயன்படுத்தியதால் பல இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தததைக் கவனித்துத் தீர்வாக இந்த முறையைக் கண்டு பிடித்தார். இந்த முறையில் 6 துளைகள் உயரமும், 2 துளைகள் அகலமும் இருந்தன. இந்தத் துளைகளால் ஏற்படுத்தப்படும் வெவ்வேறு வடிவங்கள் எழுத்துக்களைக் குறித்தன.

### விழிப்புலனற்றோருக்கான தொடர்பாக்கல் முறை (பிரைல்)

'லூயிஸ் பிரைல்' 1809 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் உள்ள கூப்விரே-என்ற கிராமத்தில் பிறந்தார். இவரின் தந்தையார் ஒரு தோல் உற்பத்திப் பொருள் செய்யும் தொழிலாளி. இவர் தனது தோல் உற்பத்திப் பொருள்களைத் துளையிட வைத்திருந்த ஆயுதத்தால் தவறுதலாக லூர்யிஸ் பிரைல் தனது கண்ணைக் குத்தியதால் சிறுவயதிலேயே பார்வையிழந்தார். தனது 11 ஆவது வயதில் தன்னைப் போன்று பார்வையிழந்தவர்கள் பயன்படுத்துவதற்காக எழுத்துத் தொடர்பாடல் முறையை சார்ள்ஸ் பாபியரின் இரவு எழுத்துக் குறியீட்டு முறையை, அடிப்படையாகக் கொண்டு உருவாக்கினார்.
இதில் அகலப்பாட்டுக்கு 2 துளைகளும், உயரப்பாட்டுக்கு 3 துளைகளுமாக ஆறு துளைகள் இருந்தன. அவர் பரிஸ் நகரத்தில் தேசிய விழிப்புலனற்றோர் பாடசாலையில் சேர்ந்து தனது பெயரைக்கொண்ட 'பிரைல்' முறையை அபிவிருத்தி செய்தார். இவர் தனது 43 ஆவது வயதில் உயிரிழந்தார். இவர் இறந்து ஒரு வருடத்தின் பின்பு பிரான்ஸ் நாடு பிரைல் முறையை விழிப்புலனற்றோருக்கான தொடர்பாக்கல் முறையாக அறிவித்ததாகக் கூறப்படுகின்றது. லூயிஸ் பிரைல் அவர்களின் கண்டுபிடிப்பு உலகெங்கும் உள்ள எண்ணற்ற விழிப்புலனற்றோருக்கு கல்வி வழங்குவதற்கு உதவும் முறையாக விளங்கியது. பிரைல் தொழில் நுட்பத்தில் பெரிய வளர்ச்சியையும் உலகம் பெற்றிருக்கின்றது.

### விழிப்புலனற்றோருக்கான உபகரணங்கள்

இன்று விழிப்புலனற்றோர் அல்லது பார்வைக்குறைபாடு உள்ளவர்களால் பயன்படுத்தப்படுவதற்கு ஏராளமான உபகரணங்கள் பயன்பாட்டில் உள்ளன. உருப்பெருத்தல் செய்யும் மென்பொருள்கள், கணினித் திரையக வாசிப்பான்கள், பெரிய நிறமுள்ள எழுத்துக்கள் கொண்ட தொலைபேசிகள், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கைபேசிகள் எனப் பல்வேறு உபகரணங்கள் பயன்பாட்டில் உள்ளன. ஒலிவடிவ வெளியீட்டு வசதி உள்ள வழிசெலுத்தும் அமைப்புக்கள் பெரியளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கணினித் தொழில்நுட்பம் மூலம் ஒலிவடிவத்தில் இருந்து தகவல்களையும், தகவல்களில் இருந்து ஒலி வடிவங்களையும் மாற்றக்கூடிய மென்பொருள்கள் பெரிய அளவில் விழிப்புலனற்றோரின் தேவைக்காகப் பயன்படுத்தக் கூடிய விதத்தில் உருவாக்கப்படுகின்றன.

### சிமாட் கிளாசஸ்

'சிமாட் கிளாசஸ்' எனப்படும் கண்ணாடிகளை விழிப்புல னற்றோர் அணிந்திருக்கும் போது வீதிச் சமிக்ஞைகளை ஒலி வடிவத்தில் மாற்றி அவர்களுக்குத் தெரிவிக்கின்றன. பெரும்பாலான விழிப்புலனற்றோர் ஒரேயளவான ஒளி மற்றும் அசைவுகளை உணரத்தக்கவர்களாக இருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.
இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் உருவாக்கிய இந்தக் கண்ணாடிகளில் உள்ள கமராக்களும், மென்பொருளும் பொருள்களைப் பதிவுசெய்து அவர்கள் உணரத்தக்க வகையில் காட்டுகின்றன. இரண்டு கண்ணாடிகளிலும் பொருத்தப்பட்டுள்ள கமராக்கள் கண்கள் செய்யும் வேலையைச் செய்கின்றன. விழிப்புலனற்றோரில் காணப்படும் ஒளியுணர்வுத்தன்மையைக் கொண்டு காணக்கூடிய வகையில் தகவல்கள் கண்ணாடியில் காட்டப்படுவதோடு அவர்கள் அணிந்திருக்கும் ஹெட்போன்கள் மூலம் மென்பொருள்களால் மாற்றியனுப்பப்படும் ஒலி வடிவான தகவல்களையும் கேட்க முடியும்.
இந்தக் கண்ணாடிகள் திசைகாட்டி, ஜி.பி.எஸ் போன்றவற்றையும் கொண்டிருக்கின்றன. 'கனேடியன் நெசனல் இன்ஸ்ரிரியூட் ஃபோ தி பிளைன்ட்' என்ற நிறுவனம் கணினித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விழிப்பு லனற்றோருக்கும், பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கும் உரிய உபகரணங்களை விநியோகித்து வருவதாக 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 'குளோபல் நியூஸ்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்று தெரிவிக்கின்றது. மேற்படி நிறுவனம் சஸ்கட்டூன் இல் உள்ள பார்வைக் குறைபாடுள்ளவர்களையும், விழிப்புலனற்றோர்களையும் அழைத்துப் புதிய தொழில்நுட்பத்தில் உருவான உபகரணங்களைப் பரீட்சித்து வருகின்றது.
நாளாந்தம் உலகத்தில் ஏற்படும் தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கும், விழிப்புலனற்றோர்களுக்கும் நல்ல எதிர்காலத்தை வழங்கும் என எதிர்பார்ப்போம். உலகத்தில் 314 மில்லியன் மக்கள் பாரதூரமான பார்வைக்குறைபாடு உள்ளவர்களாகவும், 37 மில்லியன் மக்கள் முற்றாகப் பார்வையிழந்தவர்களாகவும் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பார்வையிழந்து வாழ்வது என்பது எவ்வளவு துர்ப்பாக்கியமானது என்பதை வாசகர்களாகிய உங்களால் புரிந்து கொள்ள முடியும்.



### உணவுப் பழக்க வழக்கம்

குழந்தைப்பருவத்தில் இருந்து கண்ணுக்குப் போசனையூட்டுகின்ற ஆரோக்கியமான உணவுப்பொருள்களை உண்டு வருவதோடு கண்ணின் ஆரோக்கியத்துக்கு வேண்டிய பயிற்சிகளையும் குழந்தைகள் செய்து வருவதன் மூலமும் எதிர்காலத்தில் பார்வைக் குறைபாடுகளால் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கலாம் என்பதையும் கவனத்தில் கொள்வோம். பொன்னாங்காணி, வல்லாரை போன்ற பச்சை நிறக் கீரைகள் மற்றும் நல்ல மீன்வகைகள், முட்டை, விதை வகைகள், ஒரேஞ் போன்ற சைற்றஸ் நிறைந்த பழவகைகள், ஸ்ரோபெரி, கரட் போன்ற உணவுப் பொருள்களை நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்வது கண்ணின் ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும். இங்கே குறிக்கப்படாத மேலும் பல உணவு வகைகள் கண்ணின் ஆரோக்கியத்துக்கு உகந்தவையாக உள்ளன.
இவற்றின் விவரங்களை அறிந்து வைத்திருத்தல் மிகவும் நல்லது. கொழுப்பு, மாப்பொருள், சீனி அதிகம் கொண்ட உணவுகளைத் தவிர்த்தல் கண் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. விற்றமின் 'ஈ', விற்றமின் 'சி' , விற்றமின் 'ஏ', விற்றமின் 'டி' , சிங் , ஒமேகா 3 , பற்றி அசிட் போன்றவை கண்ணின் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லவை. புகைத்தல் கண்ணுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியது. கண்புரை, கண்ணின் நரம்புகளில் பாதிப்பு போன்றவை புகைத்தல் பழக்கத்தால் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கண்ணைப் புற ஊதாக்கதிர்களின் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதில் 'சன்கிளாசஸ்' முக்கிய பங்கை வகிக்கின்றன. சில குறிக்கப்பட்ட ஆபத்தான வேலைகளைச் செய்யும் பொழுது பாதுகாப்புக் கவசங்களை அல்லது கண்ணாடிகளை அணிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்டுப் பார்வை இழந்தவர்களும் உலகில் உள்ளார்கள். எனவே கண்ணில் காயங்கள் அல்லது எரிவுகள் ஏற்படாது பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகின்றது.

### சிகிச்சையும் ஆலோசனைகளும்

கண்ணிலும் புற்று நோய் ஏற்படலாம். இதுபற்றியும் அறிந்திருத்தல் நல்லது. முதலாம் நிலை, இரண்டாம் நிலை என இரண்டு விதமான கண் புற்றுநோய்கள் வருகின்றன. முதலாம் நிலை கண்விழிகளில் ஏற்படுகின்றது. இரண்டாம் நிலை உடலின் வேறு பாகங்களில் ஏற்பட்டுப் பின்பு கண்ணைத் தாக்குகின்றது.
கண்ணில் எற்படும் புற்றுநோய்களுக்கு சத்திரசிகிச்சை, சீரொளிச் சிகிச்சை, மற்றும் ஏனைய புற்றுநோய்கள் போன்ற சிகிச்சை முறைகள் எனப் பலவகையான சிகிச்சை முறைகள் பயன்பாட்டில் உள்ளன. அதிக நேரம் கணினியைப் பயன்படுத்தும்பொழுது இடைக்கிடை (20 செக்கன்களுக்கு ஒரு தடவை) கண்ணால் திரையகத்தைத் தவிர்த்து ஏனைய இடங்களைப் பார்த்து (20 அடி தூரத்தில் உள்ள பொருள்களை) பயிற்சி செய்வது நல்லது. தொடர்ச்சியாகத் திரையகத்தைப் பார்த்தல் கூடாது. இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை கொஞ்ச தூரம் நடந்து பயிற்சி செய்வது நல்லது. எமது கண்களை மிகவும் கவனமாகப் பராமரிப்பது மிக முக்கியமான விடயம். ஆக, பார்வைக் குறைபாட்டுக்குரிய சிகிச்சைகளுக்கு மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுதல் நன்று. அவர்களின் அறிவுரைப்படி செயலாற்றுவதே சிறந்த தீர்வாக அமையும்.

# 2019 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## வட மாகாண சபை

வட மாகாண சபைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பொருள்கள். சேவைகளை வழங்குவதற்கு உள்ளூர் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம். வவுனியா. மன்னார். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக தேசிய ரீதியிலான பெறுகைகளின் போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்படும் வழங்குநர்களிடம் இருந்தும் விலை மனுக்கள் கோரப்படும்.

1. யாழ்ப்பாணம் 2. வவுனியா 3. மன்னார் 4. கிளிநொச்சி 5. முல்லைத்தீவு

தொகுதி இல: "G"

| உப தொகுதி இல. | பொருள்கள் - விவரம் |
|---|---|
| G-1 | அலுவலக தளபாடங்கள் |
| G-2 | அலுவலக உபகரணங்கள் |
| G-3 | காகிதாதிகள் |
| G-4 | ரோணர்கள் (Toners), ரிபன்கள் (Ribbion) |
| G-5 | கட்டடப் பொருள்களும் கட்டடப் பிரிவிடுதலும் (Partioning) அலங்காரமும் |
| G-6 | புத்தகங்களும், பருவ வெளியீடுகளும் |
| G-7 | மின் உதிரிகள், பொருத்திகள், மின் உபகரணங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள் |
| G-8 | அச்சிடும் பொருள்கள் |
| G-9 | கணனிகளும் உதிரிப்பாகங்களும் |
| G-10 | சமூக நலன் பொருள்கள் |
| G-11 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் , மோட்டார் வாகனங்களுக்கான பற்றிகள் |
| G-12 | பொது உபகரணங்களும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் |
| G-13 | கல்விசார் உபகரணங்கள் |
| G-14 | விளையாட்டு உபகரணங்கள் |
| G-15 | இசைக் கருவிகள் |
| G-16 | வைத்தியசாலைக்கான மருந்து வகைகள் |
| G-17 | ஆயுர்வேத / சுதேச மருந்துகள் |
| G-18 | சுத்திகரிப்பு பொருள்களும் உபகரணங்களும் |
| G-19 | ஆயர்வேத மருந்துச் சரக்குகளும் பலசரக்குப் பொருள்களும் |
| G-20 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (உலர் உணவு மட்டும்) |
| G-21 | வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவும் குளிர்பானமும், சிற்றுண்டி, பேக்கரி உணவு பொருள்கள் |
| G-22 | விவசாய எந்திரங்கள், எந்திர உபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும் |
| G-23 | விவசாய பொருள்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்கள் |
| G-24 | விவசாய விதைகள், நடுகைப் பொருள்கள் |
| G-25 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் ஏனைய பொருள்கள் |
| G-26 | கால்நடைகளுக்கான மருந்துகள் |
| G-27 | மீன்பிடி தொடர்பான பொருள்கள் |
| G-28 | கைத்தொழில் மூலப்பொருள்கள் |
| G-29 | இரசாயனப் பொருள்கள் , ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள் |
| G-30 | வாகனங்களிற்கான ரயர் மற்றும் ரியூப் |
| G-31 | வைத்தியசாலைக்கான துணிகள் வழங்கல் |
| G-32 | பாதணிகள் |
| G-33 | தொலைத்தொடர்பு சாதனங்கள் |
| G-34 | இரும்பு பொருள்சாதனங்கள் |
| G-35 | வைத்தியசாலை வாயு வழங்கல் (Medical gas) |
| G-36 | வைத்தியசாலை ஆய்வுகூட இரசாயனங்களும் மீள் நிரப்பல்களும் (Regrets) |
| G-37 | வைத்தியசாலை தளபாடங்கள் |
| G-38 | வைத்தியசாலைகளுக்கான ஆடைப்பொருள்களும் மற்றும் சுகாதார தொற்று நீக்கிய துண்டுகளும் |
| G-39 | பல் வைத்திய உபகரணங்கள் |
| G-40 | மருத்துவ உபகரணங்கள் |
| G-41 | ஒலி ஒளி உபகரணங்கள் |
| G-42 | மகாநாடு மற்றும் கூட்டங்களுக்கான உணவு வழங்கல் |

தொகுதி இல: "S"

| உப தொகுதி இல | சேவைகள் - விபரம் |
|---|---|
| S-1 | கடிதத்தலைப்பு புத்தகங்கள், வெளியீடுகள் அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாதைகள் அச்சிடுதல், பெயர் பலகை, குறியீட்டு பலகை எழுத்து பொறித்தல், புத்தகம் கட்டுதல், அச்சு அடிச் சட்டம் (Block) தயாரித்தல், இறப்பர் முத்திரை திகதி முத்திரை தயாரித்தல். |
| S -2 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| S -3 | அலுவலக போட்டோ பிரதி இயந்திரங்கள், ரைப்ரைட்டர்கள், றோனியோ மெசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-4 | கணனிகள், பிறின்டர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-5 | குளிரூட்டிகள், மின் உபகரணங்கள் மற்றும் மின்வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-6 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் |
| S-7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், கட்டட தளங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல் |
| S-8 a or b | அ) வாகனம் பழுது பார்த்தல்:- உள்வாரியான திருத்தங்கள் இயந்திரம் மற்றும் வாகனப்பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள்<br>ஆ) வாகனம் பழுது பார்த்தல்:- வெளிவாரியான திருத்தங்கள் தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும் பெயின்ட் அடித்தலும், |
| S-9 | வாகனம் பராமரித்தல்: கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தல், டயர் மாற்றம் செய்தல் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும். |
| S-10 | விவசாய உபகரணங்கள் , தயாரித்தல் / வடிவமைத்தல் மற்றும் விவசாய இயந்திரங்கள் உபகரணங்கள் திருத்தம் |
| S-11 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல் (Passenger Vehicle) |
| S-12 | வாகனங்களுக்கு டயர் மாற்றம் செய்தல் , காற்று நிரப்புதல் , டயர் ரியூப் ஒட்டுதல். |
| S-13 | மர வேலைகள் திருத்தம் (சிறு திருத்தங்கள் ) |
| S-14 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| S-15 | ஒளி மற்றும் ஒலிப்பதிவு (Video and Audio Recording) |
| S-16 | புகைப்படப்பிடிப்பு |
| S-17 | தொலைபேசி உபகரண பழுதுபார்த்தல் |
| S-18 | நிலமட்டப்படுத்தல் சேவைகள் |
| S-19 | குசன் வேலைகள், தளவிரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளக வேலைகள் வாகனங்களுக்கும் தளபாடங்களுக்கும் ( upholstery works of furniture and vehicles ) |
| S-20 | கனரக வாகனங்கள் வாடகைக்கு வழங்கல் |
| S-21 | குழாய் பொருத்துனர் சேவையும் நீர் வழங்கல் சேவையும் |
| S-22 | கணினி மென்பொருள் வழங்கல் |
| S-23 | நாய்களுக்கான கருத்தடை சேவை (Dog sterilization) |
| S-24 | மருத்துவ உபகரணங்கள் பராமரிப்பும் பழுதுபார்த்தலும் |

**நியந்தனைகள்**

1. வழங்குநர்களாக பதிவு செய்தல் 2019ம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்.
2. உள்ளூர் பெறுகைகள் பதிவு செய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும். தேசிய ரீதியிலான பெறுகைகளின் போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும். எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனு கோருவதற்கான உரிமையும் உண்டு.
3. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விவரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர் கொண்டுள்ளார்.
5. மனுக்கள் கோரும்போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருள்கள். சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7. குறிப்பீடப்படும் பொருள்கள் சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விவரங்கள் ஆவணங்களின் உண்மைத் தன்மையானது பிரதம செயலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாக சென்று பார்வையிடுவதன் மூலமோ நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குநர் குறிப்பிட்ட பொருள்கள். சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு தாங்கள் தகுதியற்றவர் என காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
8. பொருள்கள் சேவைகள் விநியோகிப்பதற்கு விருப்பு தெரிவிக்கும் மாவட்டம் / மாவட்டங்கள் வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.
9. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும் பயிற்சி பெற்ற வேலையாள்களின் விவரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரீசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
10. வடமாகாணத்தில் குறைந்தது ஒரு இடத்திலேனும் தங்கள் நிறுவனத்தின் ஒரு கிளை/ஒரு காட்சி அறை/முகவர்/அங்கீகரிக்கப்பட்ட முகவர் (Authorized Dealer) ஆகியவற்றில் ஏதாவது ஒன்றையேனும் வைத்திருத்தல் வேண்டும்.
11. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான காசு முற்பணம் வழங்கப்படமாட்டாது.
12. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட **வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் வரிப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் மீளளிக்கப்படாத வைப்புப் பணத்துடனும் 2018 நவம்பர் மாதம் 16ம்** திகதி அல்லது அதற்கு முன்பதாக **"பிரதிப் - பிரதம செயலாளர்(நிதி), மாகாணத்திறைசேரி மாகாணசபை வளாகம் A9 வீதிஇ கைதடி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாள்களில் (மு.ப 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2019ம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்தல்"** என குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
13. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய ஒவ்வொரு உப பொருள் தொகுதிக்கும். சேவைக்கும் மீளளிக்கப்படாத'வைப்புப் பணமாக **ரூபா.150.00** இற்கான காசுக்கட்டளை **"பிரதிப் பிரதம செயலாளர்- நிதி, வட மாகாணம்."** என்ற பெயரில் யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் மாற்றக்கூடியவாறு பெறப்பட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது **மாகாணசபை வளாகம்** A9 **வீதி, கைதடி , யாழ்ப்பாணம்.** எனும் முகவரியில் இயங்குகின்ற **மாகாணதிறைசேரி** அலுவலகத்தில் அலுவலக வேலை நாள்களில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை) நேரடியாகப் பணத்தினைச் செலுத்திப் பெறுகின்ற பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உப பொருள்கள் அல்லது உப சேவைகளின் தொகுதிக்கு பதிவு கோருவதாயின். ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 150.00 ம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
14. **2018 நவம்பர் மாதம் 16 ஆம்** திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
15. விண்ணப்பப் படிவங்களை வடமாகாணசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இனில் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.
16. மேலதிக விளக்கங்களுக்கு **கணக்காளர், மாகாணதிறைசேரி வட மாகாணம்"** அவர்களுடன் **தொலைபேசி இல 0212220840** மூலம் தொடர்பு கொள்ளமுடியும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

2019ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வட மாகாண சபை

1. வியாபார நிறுவனத்தின் பெயர்
2. வியாபார நிறுவனத்தின் முகவரி
3. வியாபார நிறுவனத்தின் வடமாகாணத்திற்கு உட்பட்ட முகவரி :-
3. 1வியாபார நிறுவனத்தின் காட்சி அறை/முகவர்/அங்கீகரிக்கப்பட்ட முகவர் (Authorized Dealer) முகவரி.-
4. தொலைபேசி இலக்கம்
   நிலையானது (Land) :-
   கைத்தொலைபேசி (Mobile) :-
5. தொலைநகல் (Fax) இலக்கம் :-
6. வியாபார பதிவு இலக்கம் :-
7. வியாபாரத்தின் தன்மை :-
8. பதிவு செய்யப்படவேண்டிய பொருள்கள் / சேவைகளின் தொகுதி :-

| தொகுதி இல | பொருள்கள் / சேவைகள் விவரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

9. கணக்கினை பேணும் வங்கிகளின் பெயர்கள்:-
10. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி (Credit Period):-
11 வற் (VAT) வரி பதிவு இலக்கம் (இருப்பின்):-
12. மின்னஞ்சல் முகவரி :-
13 வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :-
(விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம் :- மாவட்டங்களினை "✓" அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவுசெய்தல் வேண்டும்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

என்னால்/ எங்களால் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் யாவும் சரியானவை எனவும் வட மாகாணசபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருள்கள்/சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறேன். பதிவுக் கட்டணம் ரூபா.150.00 இற்கு ......................ஆம் திகதிய .........................இலக்க காசுக் கட்டளை/பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

........................ ........................ ........................
விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி

**அ.பத்திநாதன்,**
**பிரதம செயலாளர்,**
**வட மாகாண சபை,**
**மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி ,**
**யாழ்ப்பாணம்**

## ஓலைச் சுவடிகள் விநியோகம்

வழமை போல் தேவைகளை உறுதிப்படுத்தி ஏட்டு ஓலைச் சுவடிகளை எம்மிடம் அலுவலக நேரத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அண்ணா தொழிலகம்
துரைவீதி, இணுவில் (C/32115) (11,17)

## தேவை

மிக்ஷர் கம்பனிக்கு சகல வேலைக்கும் ஆள்கள் தேவை.

077 005 0344

## வீடு வாடகைக்குண்டு

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் இரண்டு அறை, சமையலறை, இணைந்த குளியலறை கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.

077 331 8055, 077 844 8614

## மில் வேலைக்கு ஆள்கள் தேவை

அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.

உடன் தொடர்புக்கு : 077 773 3532

## விற்பனைக்கு

WQ XXXX தொடர் இலக்க HERO HONDA PLESSURE
**மோட்டார் சைக்கிள்**
உடன் விற்பனைக்கு உண்டு. (m. 145384) (13.17)

077 252 5538

## வீடு வாடகைக்கு

முதலாம் குறுக்குத்தெரு சப்பல் வீதி சந்தி அருகில் வீடு வாடகைக்கு உண்டு.

077 026 0404 (CS/20575) (11,17)

## மணமகள் தேவை

யாழ்ப்பாண இந்து கௌரவ குடும்பம், 47 வயது, விவாகரத்துப் பெற்ற உயர் பதவியில் இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. (IN/10482) (11,17)

K.ராம்குமார் (சகோதரன்)
perinpammaheshwaran@gmail.com

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



DMI COMPUTER EDUCATION

**DIPLOMA IN ENGLISH**
**Spoken English**

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

Reading | Writing | Speaking | Listening

நவராத்திரி வார புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Tue, Thu 03.30 p.m. | சுன்னாகம் Mon,Wed,Fri 11:30 a.m<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 1:30 p.m<br>கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**IELTS** •Unique Test Tips •Latest course Materials

**IELTS Life Skills (A1,B1)** திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயம்பல் தேவாலய அருகாமை) | M.M.V.வீதி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19,A9 வீதி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021 225 6665 | Tel.: 021-228 5655 |

## மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து) பொருள் கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம்.

மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு பின்வரும் விவசாயப் பொருள்கள் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை காணப்படுவதால் அதற்கான கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது.

**மொந்தன் வாழை, கதலி வாழைக்கான விவரக் குறிப்பு**

பயிர் :- வாழை
இனம் :- மொந்தன்.கதலி
குட்டிவகை :- வால் குட்டியாக இருத்தல் வேண்டும்.
உயரம் :- 2.5 அடி– 3.0 அடி உயரம் உள்ளதாக இருக்க வேண்டும்.
இலைகளின் எண்ணிக்கை :- சராசரியாக 5 - 6 இலைகளைக் கொண்டிருக்கவேண்டும்.
நோய் பீடைத் தாக்கமற்ற வீரியமான நடுகைக்கு உகந்த குட்டியாக இருக்க வேண்டும்.

### Specification Of Tissue Culture Banana

| No | Feature | Minimum requirement |
|---|---|---|
| 1 | Variety | Kolikudu (Kappal) |
| 2 | Leaves | 3-6 Nos. |
| 3 | Acclimatization | Acclimatization complete ready to field planting should be completed. Ready to field planting. |
| 4 | Potting mixture | Top soil, Tea refuse compost= 1:1:1 With poly bags 5''x4'' |
| 5 | Quality | Vigorous |
| 6 | Pests and disease free, mutation free, vigorous. | |

### Specification for Gowpea, Green gram, Black gram

| Crop | Seed class |
|---|---|
| Cowpea, Green gram, Black gram | Breeder/ Foundation/ Registered |
| | Certified/ Commercial |
| | Commercial II |

### Specification for ground nut

| Crop | Seed class |
|---|---|
| Ground nut | Breeder/ Foundation/ Registered |
| | Certified/ Commercial |
| | Commercial II |

**நிபந்தனைகள் :-**

01. கொள்வனவுக்கான கூறுவிலைகள் அனைத்தும் மூடிய கூறுவிலைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
02. கொள்வனவுக்கான பொருள்கள் அதில் குறிப்பிட்ட விவரக் குறிப்புக்களுக்கு அமைவாக (Specification) முழுமையான விவரங்களை உள்ளடங்கியதாக இருத்தல் வேண்டும்.
03. மேற்படி கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம் 2018.10.29 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். பிந்திய கேள்விப்பத்திரம் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விப்பத்திர உறைகள் 2018.10.30ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கேள்வி கேட்பவர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
04. கேள்விக்கான பத்திரங்கள் பிரதியுடன் ஒவ்வொரு கேள்விக்கும் வெவ்வேறு உறையிலிட்டு உறையின் இடதுபக்கமேல் மூலையில் வழங்கப்படும் பொருளின் விவரம் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. இக் கேள்விப்பத்திரமானது 2018.10.29ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் மு/புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளருக்கு கிடைக்கதக்கதாக **பொதுமுகாமையாளர், மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம், A 35, பரந்தன் பிரதானவீதி, கைவேலி புதுக்குடியிருப்பு.** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ இதற்கான கேள்விப்பத்திரத்தை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
**மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு**
**பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்** (AKN/566)(11,17)

## சேவை நலன் பாராட்டு




யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கடந்த 07 வருட காலமாக கணித பாட ஆசிரியராக கடமையாற்றி கல்லூரியின் கணித பாட வளர்ச்சியில் உறுதுணையாக இருந்து சமூகத்தின் அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமான நிலையில் **30 வருட ஆசிரிய சேவையிலிருந்து இன்று (15.10.2018) திங்கட்கிழமை ஓய்வுபெறும்**

### திருமதி ரஜனி ஜெயபாலன்

அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

சேவைக்காலம்:

கொ/பிறெஸ் பிற்றேரியன் மகளிர் ம.வி - 20.01.1989 - 31.03.1993
கிளி/சென்.திரேசா மகளிர் ம.வி - 01.04.1993 - 31.12.2007
கிளி/ பரந்தன் இந்து ம.வி - 01.01. 2008 - 17.05.2009
வ/இராமநாதன் நலன்புரி நிலையம் - வவுனியா- 18.05.2009 - 22.10.2009
யா/டிறிபேக் கல்லூரி - சாவகச்சேரி - 04.11.2009 - 19.09.2010
கிளி/பரந்தன் இந்து ம.வி. - 20.09.2010 - 31.12.2010
யா/டிறிபேக் கல்லூரி - சாவகச்சேரி - 01.01.2011 - 14.10.2018

(…15544) (13.17)

வாழ்த்துவோர்: வட்டமேசை
யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

## BIT

MOBILE NET MCS COMPUTER SERVICES

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்



### கொழும்பு பல்கலைக்கழகத்தின்
வெளிவாரிப் பட்டப்படிப்பு

### விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்திலும் பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.
- க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் ஏனையோர் **FIT** A/L கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் விண்ணப்பிக்க முடியும்.
- இவ்வாண்டு பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றுக்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்க முடியும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் Diploma in Information Technology (NVQ5)சான்றிதழ் வழங்கப்படும்.
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- மேலும் முதுமாணிக்கற்கைநெறியை கொழும்பு, மொரட்டுவ, பேரதெனிய மற்றும் பிரித்தானிய அமெரிக்க கனடிய பல்கலைக்கழகங்களில் வேலை செய்துகொண்டே தொடர முடியும்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் **BIT** கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- மேலும் ***BIT** கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு **Higher Diploma in Information Techonology** சான்றிதழ் பெறும் சந்தர்ப்பம்.

*அரசவங்கிகளில் வெளிநாடுகளிலும் **System Engineer, System Administrators (CCNA, MTA,MCSA, MCSE-USA** தகைமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.
* உயர் வேலைவாய்பிற்கான உத்தரவாதம்.
*முதலாம் ஆண்டு கற்கும் போதே Diplom in Ms office, Web Desighing, Hardware, Networking, Photoshop ,English , Java Programming உள்ளிட்ட 7க்கு மேற்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம்.
* 2000 ம் ஆண்டு முதல் நூற்றுக்கணக்கான தகவல் தொழில் நுட்ப பட்டதாரிகளை உருவாக்கி உள்ளநாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்த நிறுவனம்

**விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில் MCS IT CAMPUS, யாழ். பல்கலைக்கழகம் அருகில்**

**சிறந்த பெறுபேற்றுக்கான சிறப்பு விருதினை கொழும்பு பல்கலைக்கழத்திடமிருந்து விருதினை வென்ற நிறுவனம்**

## CIMA

Chartered Institute of Management Accountants



- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி.
- 16வயதிற்கு மேற்பட்ட எவரும் பயிலலாம்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி
- 2008 ஆம் ஆண்டு யாழில் இக்கற்கை நெறியை தொடர்ச்சியாக சிறப்பாக நடாத்தி வரும் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனம். புரீட்சை மையம்.
- பல நூற்றுக்கணக்கான CIMA UKதகைமையாளர்களை உருவாக்கி உயர் வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்த நிறுவனம்.
- சிறந்த பேறுபேற்றுக்கான விருதினை CIMA _UK நிறுவனத்திடமிருந்து வென்ற நிறுவனம்.
- Diploma in Accounting Package, Diploma in English, Diploma in Msoffice Totally Free

புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரத்திற்கும்
Type<Course>Name> send to 772 395 895

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 21 . 09 . 1947



இறப்பு 15 . 09 . 2018

கடந்த 15.09.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த

# அமரர் கந்தசாமி சிவசுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (14.10.2018) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.10.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறப்பின் போது துயரத்தில் பங்குபற்றிய அனைவருக்கும், தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தொடர்புகொண்டு அனுதாபத்தினைத் தெரிவித்த வர்களுக்கும் மலர் வளையங்கள் சமர்ப்பித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னார் நோயுற்று இருந்தபோது பல வழிகளில் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் சக ஊழியர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**160, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில், யாழ்ப்பாணம்.** (CS/20547)(11.17) **குடும்பத்தினர்.**


# வாணியின் மழைக்கால கோலங்கள்



முற்றிலும் வாடிக்கையாளர்களின் நலன் கருதி அதிரடியான விலைக்கழிவுடன்

- மழைக் கவசங்கள்
- குளிர் அங்கிகள் (சுவற்றர்)
- யக்கட் வகைகள்
- குடை வகைகள்
- நுளம்பு வலைகள்
- சிறுவர்களுக்கான மழைக் கவசங்கள்

பொறிக்கப்பட்ட விலையில் இருந்து குறைத்து வழங்கப்படுகின்றது

## வாணி ரெக்ஸ்

இல. 81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5578



# BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES



After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

BTEC HND

## Computing
- Software Engineering
- Network Engineering

Leading to BSc(Hons)

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்றல் முறை மற்றும் சூழல்
- அனுபவமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
- இலகு தவணைக் கட்டணம்
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது

Pearson | University of East London | University of Wolverhampton

MADHU 0777 102131
SANCHU 0777 692318

INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

20 YEARS
ISO 9001:2008 CERTIFIED

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk

BCAS Ranked "Platinum Partner" No.1 once again

**கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA**

சீட்டிழுப்பு வாரம்: 354
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.10.14
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 98,025,648/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
K 07 27 32 45
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 868
சீட்டிழுப்பு திகதி 2018.10.13 சனிக்கிழமை
U 17 20 46 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,131,692/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
ஊதா நிற டிக்கட்டுகள் 2018.10.15ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 403
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.10.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,003,155/-
வெற்றி இலக்கங்கள் 06 16 66 73
ஆங்கில எழுத்து I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ராசி அதிர்ஷ்டம்**

திகதி 14.10.2018 வெற்றி வாரம் 2382 வர்ணம் ஊதா
துலாம்
வெற்றி இலக்கங்கள் 22 29 41 55
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 202, 972/=
2018.10.16 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## முச்சக்கரவண்டி ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - அறிவுரைப் பத்திரம்

## இலங்கை புகையிரத சேவை

மூன்று மாத காலத்துக்காகப் புகையிரத ஓட்ட பணியாளர் குழு யாழ்ப்பாண புகையிரத நிலையத்துக்கும், தங்குமிட வதிவிடத்துக்கும் இடையே நாளாந்தம் போக்குவரத்துச் செய்வதற்கு முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

இதற்குரிய அறிவுறுத்தல் மற்றும் கேள்விப் பத்திரம் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம் அலுவலகத்தில் மற்றும் போக்குவரத்து அதிகாரி - அநுராதபுரம் அலுவலகத்தில் 16.10.2018 ஆம் திகதியிலிருந்து 24.10.2018 ஆம் திகதி வரை இலவசமாக விநியோகிக்கப்படும்.

இது தொடர்பான சகல விவரங்களையும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்துப் பெற்றுக் கொள்ள முடியும்.

பிரதம புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி -
யாழ்ப்பாணம் - 021 222 2371

போக்குவரத்து அதிகாரி அலுவலகம் -
அநுராதபுரம் - 025 223 5005

**பிரதேச போக்குவரத்து அதிகாரி,**
**பிரதேச போக்குவரத்து அதிகாரி அலுவலகம்,**
**அநுராதபுரம்.**

(C/23840)

## அனுமதிகள் கோரப்படுகின்றன

**யா/ ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை**
**தரம் 6 அனுமதி (2019)**

எமது கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்காக விண்ணப்பப் படிவங்களை இன்று (15.10.2018) திங்கட்கிழமை முதல் அலுவல க நேரத்தில் எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

விண்ணப்ப முடிவு திகதி : 07.11.2018

**- அதிபர் -**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி /தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
எமது பாடசாலையில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைபரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களான



செல்வி நிலவரசி உதயகுமார்
புள்ளிகள் -192
கோட்ட நிலை - 01
மாவட்ட நிலை - 07

Best Wishes Best Wishes

செல்வன்
செல்வநாதன் கலையமுதன்
புள்ளிகள் - 174



ஆகியோரையும் அத்துடன் இப் பரீட்சைக்கு தோற்றி 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர்களையும் (தோற்றியோர் 15 பேர்) பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : பாடசாலைச்சமூகம், கிளி / தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

## குருத்துவ திருநிலைப்படுத்தலின் 25 ஆவது வருட யூபிலி வாழ்த்துகள்

## அருட்பணி அ.எரிக் றொசான் அடிகள்



Congratulations

**16.10.1993 - 16.10.2018**

அச்சுவேலி எனும் அழகிய விளைநிலத்தில்
அழகாய் பூத்த எம் குருமணியே
ஆண்டவர் அடியில் கரங்கள் பற்றி
ஆண்டவர் வழியில் பாதங்கள் பதித்து
இறைபணியை தன் பணியாய் ஏற்று
குருத்துவத்தில் கிறிஸ்துவை வாழ்ந்து கொடுத்து
25 வருட நிறைவின் நாளில்
நன்றியோடு இறைவனை நினைக்கும்
எம் பங்கின் மைந்தனே, குருவே
யூபிலி நாயகனே உம்மை வாழ்த்துகிறோம்
இறையருள் பெற்று பணிதொடர

**நன்றித் திருப்பலி நாளை (16.10.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.**

**அன்போடு அழைக்கின்றோம்**

பங்குத்தந்தை,
பங்குமக்கள்,
அச்சுவேலி.

## தொழிற்கல்வி கண்காட்சியும், தொழிற்சந்தை நிகழ்வும் - 2018

**பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளுக்காக பின்வரும் அரச தொழில்பயிற்சி நிறுவனங்கள் இணைந்து இக்கண்காட்சி மற்றும் தொழிற்சந்தை நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.**

01) தொழில்நுட்பவியற் கல்லூரி / College Of Technology
02) பல்கலைக்கழக கல்லூரி / University College
03) தொழிற்பயிற்சி அதிகாரசபை / VTA
04) தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை / NAITA
05) இலங்கை சமுத்திர பல்கலைக்கழக பிராந்திய நிலையம் / Ocean University
06) இளைஞர் சேவைகள் மன்றம் / NYSC
07) ஏனைய அரச உயர் கல்வி நிறுவனங்கள்
08) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் தொழில் வழங்குநர்கள்.

அனுமதி இலவசம்

★ இடம் – தொழில்நுட்பவியல் கல்லூரி வளாகம், பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
★ காலம் – 16, 17 (செவ்வாய், புதன் ) ஒக்ரோபர் 2018
★ நேரம் – 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

“இன்றைய தொழிற்கல்வியே நாளைய உங்கள் மூலதனம்”

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ்ப்பாணம்.**
**தொழிநுட்பவியற்கல்லூரி, கொக்குவில்.**

### அரசியல்...

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நாவாந்துறைப் பொதுச் சந்தைக்கு முன்பாக நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தை பொது அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்தன.

ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் எனப் பலர் கலந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தினர்.

சிறைகளில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் மன்னிப்பின் ஊடாகவோ அல்லது குறுகிய கால மறுவாழ்வின் ஊடாகவோ அரசு விடுவிக்கவேண்டும் என்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (ற-8)

### பொதுத்...

அமரவீர தெரிவித்தார். பிபிலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது இடைக்கால அரசு அமையுமா? சர்வாதிகார அரசு அமையுமா? என்று அனைவரும் என்னிடத்தில்கேள்வி எழுப்புகின்றனர். அவர்கள் அனைவருக்கும் நான் இந்த இடத்தில் பதிலளிக்கின்றேன். நாடாளுமன்றத் தேர்தலொன்று நடத்தப்படாது அரசைக் கவிழ்ப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பமும் இல்லை.

மக்கள் 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையில் நாடாளுமன்றத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். அதுவரையில் தற்போதைய ஆட்சிதொடர்ந்தும் இடம்பெறும். அரசுடன் யாராவது இணைய விரும்பினால் இணைந்து கொள்ள முடியும். அதற்கு நாம் எதிர்ப்பானவர்கள் அல்லர். அதற்கு எவ்விதமான பெயரையும் சூட்டிக்கொள்ள முடியும். அனைவரும் இணைந்து ஆட்சியமைப்பதே பொருத்தமானதும் சிறந்ததுமாகும் - என்றார். (5.31)

### அரிசி...

சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு சம்மதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அரிசிப் பொதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விலையை விட 10 ரூபா குறைத்து வழங்குவதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ற,5)

## 90% பெண்களுக்கு...

கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு தொடர்பான அறிக்கையை ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் கடந்த வாரம் வெளியிட்டுள்ளது.

வன்முறை, வேறுபாடுகளுக்குள்ளாவது, வறுமை என்பதால் புரிந்து கொள்ளப்பட்ட பிரச்சினைகள், இலங்கையை போலவே உலக நாடுகளிலும் பெண்கள் பாலியல் ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் போதுமான தரவுகள் இல்லை. இந்தப் பிரச்சினைகள் பெண்கள் மற்றும் சிறிய பெண் பிள்ளைகளுக்கு மிகவும் பரீட்சயமானவை என்பதும் ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் ஆண் பயணிகள் சிறிய பெண் பிள்ளைகளைத் தொடுவது, அவர்கள் மீது சாய்ந்து கொண்டிருப்பது போன்றவற்றை தான் நேரில் பார்த்திருப்பதாக 23 வயதான வருணி மானேல் தெரிவித்துள்ளார். பேருந்து நடத்துநர்களும் சிறிய பெண் பிள்ளைகளைப் பேருந்தில் ஏற்றும் போது தேவையற்ற வகையில் தொடுவதையும் பார்த்துள்ளேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

பெண்கள் மற்றும் சிறிய பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் இடங்கள், தொழில் புரியும் இடங்கள், வசிக்கும் இடங்கள் வரை இந்தத் தொந்தரவுகள் இருப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆய்வில் 15 வயது முதல் 35 வயதான 2 ஆயிரத்து 500 பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் உட்படுத்தப்பட்டுள்ளனர். நேர்காணல்கள், கேள்விகள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள 9 மாகாணங்களில் இருக்கும் அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சாதனங்களிலேயே பெண்கள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகும் அதிகளவான அனுபவத்தைக் கொண்டுள்ளனர். வாய்மொழி மூலமான ஆபாசமான அவமதிப்புக்கு உள்ளாக்கப்படுவது. தன்னிச்சையான தொடுகை. இவற்றில் உடல் ரீதியான பாலியல் தொந்தரவுகளே அதிகம். 74 வீதமான பெண்கள் மற்றும் சிறிய பெண் பிள்ளைகள் தாம் வேண்டுமென்றே பாலியல் ரீதியான தொடுகைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறியுள்ளனர்.

இதனால் தமக்கு ஏற்படும் அவமானம் மற்றும் அச்சம் குறித்து ஆய்வின்போது பெண்கள் விபரித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## யாழ்ப்பாணத்திலிருந்து...

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவு கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த பேருந்து வவுனியா நொச்சிமோட்டையில் காலை 5.30 மணியளவில் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

போதைத் தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் லக்மால் தமையில் சார்ஜென்ட் ஜெகத், கொன்ஸ்டபிள்களான தெனியகொட, ரூபவன்ச, மிதுசன், கேரத், மென்டிஸ் ஆகியோரைக் கொண்ட பொலிஸ் குழுவே இந்தச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டது.

பேருந்தில் உள்ள பொதியொன்றைச் சோதனையிட்டபோது கேரளக் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது. அதை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-110)

## நியதிச்...

முத்திரைத் தீர்வை வரி சபைகளுக்குக் கிடைக்கின் றது. ஆனால் வெளிமாவட்டங்களில் பதிவு செய்யும் உறுதிகளுக்கான முத்திரைத் தீர்வைப் பணத்தைப் பெற்றுக் கொள்ளாது சிரமமாக உள்ளது. மாகாண முத்திரை வரி நியதிச் சட்டத்தில் உள்ள குறைபாடே இதற்குக் காரணம் என்று உள்ளூராட்சி மன்றங்கள் சுட்டிக்காட்டுகின்றன. வடக்கு மாகாண சபை உருவாக்கத்தின் பின்னர் முத்திரை வரி நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் காணிகளை கைமாற்றும்போது எழுதப்படும் உறுதிகளுக்கு அறவிடப்படும் கட்டணம் வடக்கு மாகாணத் திறைசேரியில் வைப்பிலிடப்படும். மாவட்டப் பதிவாளரின் ஒப்புதலுடன் மாகாணத் திறைசேரியால் உள்ளூராட்சித் திணைக்களத்துக்குரிய நிதி விடுவிக்கப்படும். மாகாணத்துக்கு வெளியே பிற மாவட்டங்களில் உறுதி எழுதப்பட்டு அந்த மாவட்டங்களில் பதியப்படும் அறுதி உறுதிகளுக்கான முத்திரை தீர்வைப் பணமும் வடக்கு மாகாணத் திறைசேரிக்குக் கிடைக்கின்றது. ஆனால் அந்த நிதியை உள்ளூராட்சிச் சபைகள் பெறுவதற்கான விடுவிப்பு அனுமதியைப் பிற மாகாணங்களில் உள்ள பதிவாளர் நாயகம் வழக்குவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றதால் அந்த நிதி மாகாணத் திறைசேரியில் தேங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

2015ஆம் ஆண்டுக்கான நிதியாக 21 மில்லியன் ரூபாவும், 2016ஆம் ஆண்டுக்காக 41 மில்லியன் ரூபாவும், 2017ஆம் ஆண்டுக்காக 152 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 214 மில்லியன் ரூபா மாகாணத் திறைசேரியில் தேங்கியுள்ளது. இந்தப் பணம் 3 ஆண்டு கால எல்லைக்குள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படாவிட்டால் அந்தப் பணம் மாகாணப் பொதுக் கணக்குக்கு மாற்றப்படும் சந்தர்ப்பம் உண்டு என்று தெரிவிக்கப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் நிதி நெருக்கடியில் உள்ள நிலையில் இந்த நிதியை உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்க உரியவர்கள் ஆவண செய்யவேண்டும் என்றும் கோரப்படுகின்றது.

இது தொடர்பாக மாகாண திறைசேரி அதிகாரிகளிடம் கேட்டபோது:

மாகாண நியதிச் சட்டத்தில் எமது மாகாணத்தில் எழுதப்படும் உறுதிகளுக்கான வருமானத்தை நேரடியாக வழங்கும் சட்ட ஏற்பாடு உண்டு. அது தாமதம் இன்றி நடக்கின்றது. குறிப்பிட்டளவு உறுதிகள் போர் காரணமாக பிற மாவட்டங்களில் ஆரம்பப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவை கைமாறும்போது பிற மாவட்டங்களிலேயே பதிவு செய்யப்படுகின்றன. அவற்றின் பணமும் மாகாணத் திறைசேரிக்குக் கிடைக்கின்றது.

அதற்கான விடுவிப்புப் பத்திரத்தை வழங்கும் சட்ட ஏற்பாடு இல்லாததால் வெளிமாகாணப் பதிவாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். அதை ஒரு திருத்தத்தின் மூலம் சீர் செய்ய முடியும். அதுவரையான காலத்தில் ஏற்படும் நெருக்கடி தொடர்பில் ஆராய வேண்டியுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர். (ம-105)

## Car, Van வாடகைக்கு உண்டு

புதிய Car, Van கள் நாள்/மாத வாடகைக்கு உண்டு.

Alto - 32, 000.00/Month - 5000km

KDH Van - 5, 500.00/Day - 150 km

**Jaffna. - 077 888 7051**

## வாகன கண்காணிப்பு சாதனம்

உங்கள் வாகனத்தின் நடமாட்டங்களை தொலைபேசி மூலம் அவதானிக்கலாம்.

* Milage report, Over Speed, Trip and parking report உண்டு.

* அரச, தனியார் வாகனங்களிற்கு ஏற்றது.


* Running Chart இனை மிக இலகுவாக Print செய்ய முடியும்.

இன்னும் பல வசதிகள் உண்டு.

**Garudan (Pvt) Ltd - 077 888 7051**

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 . 06 . 1951



மறைவு
15 . 10 . 2014

### அமரர் குழந்தைவேல் துரைராஜசிங்கம்

நீங்கள் மறைந்து ஐந்தாண்டுகள் ஆனதோ
நீங்கள் இல்லாமனை பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து தினம் தினம் நாம்
ஏங்கி தவிக்கின்றோம்
வருடங்கள் ஓடி மறைந்தாலும்
உங்களை எங்கள் இதயத்துள் வைத்துள்ளோம்

கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

குடும்பத்தினர்.

திருவண்ணை கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

## கேதார கௌரி விரதம்

**விளம்பி வருஷம் 2018**

**விரதாரம்பம் - 19.10.2018**
**விரதபூர்த்தி - 07.11.2018**

24.09.2018 திங்கட்கிழமை முதல் விரதகாரர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து சிவசக்தி ஐக்கிய ரூபினியாகிய அம்பிகையின் பேரருட் பெருங்கருணையை பெற்றின்புறும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**021 222 5770**
**தேவஸ்தானம்**

(CS/20576)(11,17)

## தாயக நண்பர்களின் விழிநீர்த் துளிகள்

மலர்வு
10 . 01 . 1970



உதிர்வு
07 . 10 . 2018

### திருமதி ஜமுனா சுபேஸ்கரன்

வற்றாத யமுனை நதி
வரண்டுபோய்க் கிடக்கிறது
உற்றாரை உறவினரை
உருகவைத்துத் துயில்கிறது
பற்றோடு கரம் பிடித்தான்
பாசமுடன் பார்த்திருக்கத்
தொற்றாத கொடிய நோய்
இழுத்தெடுத்துச் செல்கிறதே!

பல்கலைக் கழகத்தின்
பான்மைமிகு காதலர் நீர்
இல்வாழ்விலும் தொடர்ந்தீர்
இரு மகவைப் பெற்றெடுத்தீர்
எல்லோர்க்கும் லட்சியமாய்
எழிலாய் வாழ்ந்திருந்தீர்
நல்ல நண்பன் சுபேனை விட்டு
ஜமுனாவை யமன் பறித்தான்

நண்பர் நாம் என்ன செய்வோம்?
கண்ணீரால் அஞ்சலித்தோம்!!


*(இறுதிக்கிரியைகள் 14.10.2018 லண்டனில் நடைபெற்றன)*

தாயக நண்பர்கள்
யாழ்.பல்கலைக்கழகம் (90/91)

(CS/20573)(11,17)

## மரண அறிவித்தல்

மண்ணில்
03 . 01 . 1923



விண்ணில்
13 . 10 . 2018

### சின்னப்பொடி செல்லையா

சங்கானையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி செல்லையா நேற்றுமுன்தினம் (13.10.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - பார்வதி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சுப்பர் - செல்லி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளை மற்றும் சின்னத்தம்பி, காலஞ்சென்றவர்களான நாகம்மா, வல்லிபுரம், கந்தசாமி மற்றும் பசுபதி, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி (முன்னாள் தொலைத்தொடர்பு இயக்குநர் - யாழ்ப்பாணம்,பிரான்ஸ்), விநாயகமூர்த்தி (வேலவன் ரவல்ஸ் உரிமையாளர் - 788), மகேஸ்வரி (ஓய்வு நிலை ஆசிரியர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), பரமேஸ்வரி, விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோசேப் (பிரான்ஸ்), கலிஸ்ரா, குணராஜா, ரவீந்திரன், ராஜி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஜெனீதன் (பொறியியலாளர் - பிரான்ஸ்), ஜோன்லுக் (உதவி பொறியியலாளர் - பிரான்ஸ்), தமிழினி (கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை), பிருந்தாபன் (பொறியியலாளர் -சிங்கப்பூர்), தனுஜன், பாணுஷா, புகலவன், நர்த்தனா, சோபிகா, கௌரிகா, அபிலாஷ், சுகந்தினி (பிரான்ஸ்), பிரேரனா (பிரான்ஸ்), குகானந் (வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் பேரனும், ஜெய்தன் (பிரான்ஸ்), ஜெயோன் (பிரான்ஸ்), ஜெய்லா (பிரான்ஸ்), ஜெலீனா (பிரான்ஸ்), பிருணிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.10.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

(c7956)

தகவல்:
குடும்பத்தினர்



## பொது எதிரணியின் வேட்பாளர் தொடர்பில் இறுதிமுடிவை மகிந்த ராஜபக்சவே எடுப்பார்

*கூறுகின்றார் கோத்தா*

கொழும்பு, ஒக் 15

பொது எதிரணியின் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் இறுதிமுடிவை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவே எடுப்பார் என்று முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்..

கொடகமவில் இடம்பெற்ற எலிய அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது எதிரணியின் அடுத்த அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் அறிந்து கொள்வதற்கு ஐக்கியதேசிய கட்சியே அதிக ஆர்வத்துடன் உள்ளது. அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கவலைப்படாமல் அடுத்த அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான உரிய சரியான தந்திரோபாயங்களை பொது எதிரணி முன்வைக்கவேண்டும். நாங்கள் உரிய தந்திரோபாயங்களை முன்வைத்தால் எதிர்தரப்பு வேட்பாளர் யாராகயிருந்தாலும் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம் -என்றார்

## விண்ணில் பாயவுள்ள இலங்கை மாணவனின் ரொக்கட்

*அயல்நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தல்*

கொழும்பு, ஒக் 15

இலங்கையில் மாணவன் ஒருவரினால் தயாரிக்கப்பட்டு வரும் ரொக்கட் விரைவில் விண்ணில் செலுத்துவது தொடர்பில் அரச தலைவர் கவனம் செலுத்தியுள்ளார்.

கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலய மாணவன் கிஹான் ஹெட்டி ஆராச்சியினால் இந்த ரொக்கட் தயாரிக்கப்பட்டது.

குறித்த பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்கு சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மாணவனை நேரில் சந்தித்து மாணவனின் திறமைக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

மாணவன் தயாரித்த ரொக்கட்டை விண்ணுக்கு செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அதற்கு தேவையான சகல வசதிகளையும் வழங்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரச தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனையடுத்து மாணவனின் தயாரிப்பில் உருவான ரொக்கட் விரைவில் விண்ணில் செலுத்தி பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இம் மாணவனின் தயாரிப்பானது இந்தியா உள்ளிட்ட அயல்நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் கருத்துக்கள் கூறப்படுகின்றன.

*ஆட்சியாளர்கள்*

# இன அடிப்படையிலேயே போரை முன்னெடுத்தார்கள்

*கூறுகின்றார் ஆய்வாளர் அமந்த பெரேரா*

**கொழும்பு, ஒக் 15**

**ஆட்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இன அடிப்படையில்தான் போரை முன்னெ டுத்தார்கள் என்று ஆய்வாளரும் எழுத்தாளருமான அமந்த பெரேரா தெரிவித்தார்.**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் பிராந்திய ஊடகவியலாளர்களுக்காக பயிற்சிச் செயலமர்வு மட்டக்களப்பில் நேற்று நடத்தப்பட்டது. செயலமர்வில் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"சுமார் 30 வருடங்களாக இடம்பெற்ற போரை இனங்கள் என்ற அடிப்படையில்தான் ஆட்சியாளர்களும் ஊடகங்களும் கொண்டு நடத்தின. ஒட்டுமொத்தத்தில் ஆட்சியாளர்கள் மற்றும் ஊடகம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பாளரும் தமக்குச் சார்பான சாதகமான இன அடையாள முறையிலேயே நடந்து கொள்வதை கடந்த கால, சமகால போக்குகள் புலப்படுத்துகின்றன.

இப்பொழுதும் அந்தப்போக்கிலேயே நாம் இருந்து கொண்டிருக்கின்றோம். இன்னமும் அதிலிருந்து விடுபடவில்லை. ஒட்டு மொத்த நாட்டுக்குமே பாதகமான, இந்த நிலமை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது" என்றார்.

## மைத்திரி, ரணில் நாட்டில் இல்லை மக்களுக்கு யார் பொறுப்பு?

கொழும்பு, ஒக் 15

இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஒரே நேரத்தில் வெளிநாடு சென்றிருந்ததால், கடந்தவாரம் ஒரு நாள் முழுவதும்; நாட்டின் 20 மில்லியன் மக்களையும் பொறுப்பேற்கும் நிலையில் எவரும் இருக்கவில்லை என்று கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கடந்த வாரம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சீசெல்ஸ் சென்றிருந்தார். அதற்கு முன்னதாகவே, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே மற்றும் பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதனால், ஒரு நாள் இலங்கை யின் 20 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்குப் பொறுப்பான தலைவர்கள் யாரும் இல்லாத நிலை காணப்பட்டது.

அரச தலைவர், தலைமை அமைச்சருக்கு அடுத்து அதிகார வரிசையில் மூன்றாவது இடத்தில் இருப்பவர் சபாநாயகர். எனினும், சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம், நாட்டைக் கவனித்துக் கொள்ளுமாறு கூறப்படவில்லை.

இதுபோன்ற நிலைமைகள் அடுத்த சில நாள்களிலும் ஏற்படலாம் என்று தெரிகிறது. ஏனெனின், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போலந்துக்குச் செல்லவுள்ளார்.

அங்கிருந்து திரும்பிய பின்னர் சீனாவுக்குச் செல்லவிருக்கிறார். அதேவேளை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தவாரம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

## இடைக்கால அரசு என்ற கதை பொய்யானது

*கூறுகின்றார் அமைச்சர் மகிந்த அமரவீர*

கொழும்பு, ஒக் 15

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு வரை தற்போதைய அரசு பதவியில் இருக்கும் எனவும், இடைக்கால அரசு என்ற கதை பொய்யானது எனவும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மொனராகலை மெல்லகம அன்னாசி பயிரிடும் அபிவிருத்தி வலயத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இடைக்கால அரசு தொடர்பில் அனைவரும் தற்போது பேசி வருகின்றனர். அப்படியான ஒன்றை பற்றி எங்களுக்கு தெரியாது.

இந்த கதையை யார் கூறினார் என்றும் எமக்கு தெரியாது. இடைக்கால அரசு என்ற கதை பச்சை பொய். அப்படியான அரசைப் பற்றி நாங்கள் பேசவுமில்லை.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு வரை தற்போதைய அரசு ஆட்சியில் இருக்கும். இதனால், இடைக்கால அரசு என்ற கதை முற்றிலும் பொய்யானது என்பதை நாங்கள் தெளிவாக கூறுகின்றோம்.

சிலருக்கு பல்வேறு நிலைப்பாடுகள் இருக்கலாம். அவற்றை கூற சுதந்திரம் இருக்கின்றது.

2020ஆம் ஆண்டு தேர்தல் நடக்கும் வரை ஆட்சி மாறாது.

தேர்தல் ஒன்றின் மூலம் மக்களின் வாக்குகளிலேயே அரசு என்ற ஒன்று பதவிக்கு வர வேண்டும்.

வேறு முறைகளில் அரசு அமையாது. தற்போதைய அரசு மற்றும் அரச தலைவருடன் இணைந்து முன்னோக்கி செல்வது தொடர்பில் விரும்பினால் எவரும் பேச்சுவார்த்தை நடத்தலாம். ஆனால், இடைக்கால அரசு என்பது எப்போதும் ஆட்சியமைக்காது என்றார்.

## வெடிகுண்டுடன் ஒருவர் கைது

மதுகம, எலேதுவத்த பகுதியில் மேற்கொண்ட சோதனையின் போது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட வெடிகுண்டு ஒன்றுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மதுகம பொலிஸாரிற்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யடதொல பகுதியை சேர்ந்த 37 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மதுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடம் இருந்த 25 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இடைக்கால அரசிற்கு சாத்தியமில்லை 2020 வரை கூட்டரசு இணைந்தே செயற்படும்

*அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு*

கொழும்பு, ஒக் 15

இடைக்கால அரசு உருவாகுவது சாத்தியமற்றது. 2020 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்தே போட்டியிடும். அதுவரை கூட்டரசு இணைந்தே செயற்ப டும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்தரப்பினர் தம்மை பாதுகாத்துக் கொள்ளவே இடைக்கால அரசை அமைக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றனரே தவிர பொதுநல நோக்கம் ஏதும் கிடையாது.

தற்போது கடந்த காலத்தில் இடம்பெற்ற பல பெரியளவிலான மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் பலர் காணப்படுகின்றனர்.

வெகு விரைவில் பலர் சட்டத்தின் முன்னிலையில் நிறுத்தப்படு வார்கள் எனவும் அவர் தெரிவித்தர்.

## மீண்டும்...

சந்தித்தனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகத்தின் அரசியல் பத்தியில் கூறப்பட்டுள்ளது. பரந்தளவிலான இடைக்கால அரசு அமைப்பதற்கான இரகசியப் பேச்சுக்களை நடத்திய இரண்டு நாள்களின் பின்னர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நீர்கொழும்பில் உள்ள விடுதியில் திருமண நிகழ்விலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அப்போது, விடயங்கள் தவறாகி விட்டன இல்லையா, என்று மைத்திரிபால சிறிசேனவை மகிந்த ராஜபக்ச புன்னகையுடன் வரவேற்றார். அதற்கு மைத்திரிபால சிறிசேனவும், அப்படித்தான் என்று கூறினார்.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீரிகம அமைப்பாளர் சஞ்சய சிறிவர்த்தனவின் மகளுக்கும், மகிந்த ராஜபக்சவை நிழல் தலைவராகக் கொண்ட சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் சந்தியா சிறிவர்த்தனவின் மகனுக்குமே திருமணம் இடம்பெற்றது.

இந்தத் திருமணத்துக்கு வேடர் சமூகத்தின் தலைவர் உருவரிகே வன்னிலா அத்தோவும் அழைக்கப்பட்டிருந்தார். முதன்மை மேசையில் அவருக்கும் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட பாதுகாவலர்களின் கவனம், வேடுவர் தலைவரின் மீதே இருந்தது. அவர் பாரம்பரிய முறைப்படி தனது தோளில் கோடரியை கொளுவியிருந்தார். இதனால், அவரையே அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவினர் கண்காணித்தபடி இருந்தனர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (5)

## ஒரே...

கையால் தடுக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கோண்டாவில் தொடருந்து நிலையத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட தபால் தொடருந்தும், கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த கடுகதி தொடருந்தும், கோண்டாவில் தொடருந்து நிலையத்துக்கு அண்மையில் ஒரே தடத்தில் பயணித்துள்ளன.

இதனை அறிந்த தொடருந்து நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரி துரிதமாகச் செயற்பட்டு, கொழும்பு நோக்கிச் சென்ற தபால் தொடருந்தை நிறுத்துமாறு பணித்துள்ளார். அந்தத் தொடருந்து கோண்டாவில் தொடருந்து நிலையத்திலிருந்து சில மீற்றர்கள் தொலைவில் நிறுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து வந்த தொடருந்து கோண்டாவில் தொடருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டு, தடம் மாற்றப்பட்டது. இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

சுமார் அரை மணி நேர தாமத்தின் பின்னர் இரண்டு தொடருந்தும் தமது பயணங்களைத் தொடர்ந்தன. (5,8)

## பாதீட்டை...

நாம் செயற்படுவதும் இன்றைய தேவை. பாதீடு தோற்கடிக்கப்பட்டு மகிந்த யுகம் ஆரம்பிக்கப்பட்டால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாயிலைக் கூட நாம் தாண்ட முடியாத நிலை ஏற்படும். இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைச் சிறைகளில் உள்ள 107 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டியது அவசியமானது. அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்லாது அனைவரும் உழைக்க வேண்டியதும் கட்டாயமானது.

அவர்களை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று கோருவது மற்றொரு தரப்புக்குத் தீனி போடுவதாகவே அமையும். அடுத்த பாதீட்டைத் தோற்கடிக்க வேண்டும் என்று பொது எதிரணி ஒரு பக்கம் மூச்சாகச் செயற்படுகின்றது. இந்த நிலையில் அதற்குத் தூபமிடுவதுபோன்று செயற்படாது எமது இனத்தின் விடுதலைக்காகச் செயற்பட வேண்டும். அதற்காக அனைத்து வழிகளிலும் இணைந்து போராட வேண்டிய காலமாக இது உள்ளது.

அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் வாய்ப்பு இப்போது கிட்டியுள்ளது. அநுராதபுரம் வரை நடைபயணம் சென்று எமது அவலத்தை எடுத்துக் கூறக் கூடிய நிலமை உள்ளது. பாதீடு தோற்கடிக்கப்பட்டு மீண்டும் மகிந்த யுகம் ஆரம்பமானால் அநுராதபுரம் வரை நடைபயணம் செல்லும் எம்மால் பல்கலைக் கழக வாயிலைக் கூடத் தாண்ட முடியாத நிலமை ஏற்படும்.

எதிர்ப்புக்களைப் பலமாக்கி அழுத்தத்தை அதிகரித்து விடுதலையைப் பெற வேண்டும். அது மகிந்தவுக்கு வாய்ப்பாக அமையாது பார்த்துக் கொள்ள வேண்டியதும் முக்கியமாகும். அதேநேரம் தமிழர் தரப்பு தொடர்ந்து காட்டும் மென்போக்கை அரசு அசட்டை செய்தால் அதன் விளைவுகளுக்கு அரசே பதிலளிக்க வேண்டும் - என்றார். (ற-105)

## பத்திரிகைகளில்...

அரச தலைவர் மக்கள் சேவையின் உத்தியோகபூர்வ பணி நடமாடும் சேவையின் கீழ், பருத்தித்துறை பிரதேச செலயகத்திற்கு உட்பட்ட மக்களுக்கு நேற்று நடத்தப்பட்டது. பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த அரசியல் கைதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா நேற்று முன்தினம் நேரில் சென்று சந்தித்திருந்தார். தங்கள் விடுதலை தொடர்பில் அரச தலைவருடன் பேச்சு நடத்தி அதில் சாதகமான முடிவு எட்டப்படாவிட்டால், கூட்டமைப்பு வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கவேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா அதனை ஏற்றுக் கொண்டதையடுத்து தங்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா நேற்று மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அந்த நிகழ்வில் மேலும் தெரிவித்ததாவது,

வரவு - செலவுத் திட்டத்தில் எமக்கு அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும். போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற அடிப்படையில் அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும். மீள்குடியேற்ற அமைச்சு அரசிடமிருந்து சரியாகத் திட்டமிட்டு அதிக நிதியைப் பெற்றுக் கொள்ளவில்லை. காணிகள் விடுவிக்கப்பட்டாலும் மக்கள் மீள்குடியமர்வுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

மேலும், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக மாற்றுச் சட்டம் தேவையில்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். அவர்களில் தண்டனை வழங்கப்பட்டவர்கள், வழக்கு நடந்து கொண்டிருப்பவர்கள் என்று எந்தப் பேதமும் இல்லாமல் விடுவிக்கப்படவேண்டும். அரசுக்கு ஏற்கனவே இந்த விடயத்தில் நாங்கள் அழுத்தம் கொடுத்திருக்கின்றோம்.

அரச தலைவர் மைத்திரிபாலவுடன் நாளை மறுதினம் புதன்கிழமை பேச்சு நடத்தவுள்ளோம். அதற்கு முன்னதாக பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் நாங்களும் பங்குபற்றவுள்ளோம். இதன்போது அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்க வலியுறுத்துவோம்.

அரசுக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதை, அரசியல் கைதிகள் பிரச்சினையை மாத்திரம் வைத்துத் தீர்மானிக்க முடியாது. காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளன. அவற்றை ஆராய்ந்துதான் நாம் முடிவு எடுக்க முடியும். நாம் வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கப் போவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படியும் நிகழலாம். இந்த ஆண்டுக்கு இடையில் எமது பிரச்சினைகள் தீர்க்கபட வேண்டும் என்றார். (5,7,8,173)

## இளைஞர்கள்...

பிரதேச சபை உறுப்பினர் தாக்கியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும், இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை என்று முன்னணியின் வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் சிவரூபன் லகிந்தன் மறுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காயமடைந்தவர்கள் தெரிவித்ததாவது: ஏழாலை மகா வித்தியாலயத்துக்கு முன்பாக பி.ப. 5 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. அந்தப் பகுதியில் மதுபோதையில் நின்ற பிரதேச சபை உறுப்பினர் தலைமையிலான குழுவினர் அலைபேசி ஊடாக எம்மை அழைத்தனர். அங்கு சென்றபோது, பிரதேச சபை உறுப்பினர் தலைமையிலான குழுவினர் இரும்புக் குழாய்களால் தாக்குதல் நடத்தினர், என்று குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் ஏழாலை வடக்கைச் சேர்ந்த செல்வராசா அரவிந்தன் (வயது-25), செல்வராசா சஜீவன் (வயது- 19) என்ற சகோதரர்களே காயமடைந்துள்ளனர். தாக்குதல் தொடர்பாக மருத்துவமனைப் பொலிஸார் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னணியின் உறுப்பினர் லகிந்தனை தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தச் சம்பவத்தை முற்றாக மறுப்பதாகத் தெரிவித்தார். (5,8)

## எதிர்வரும்...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கல்கமுவ, எஹெட்டுவெவ பண்டாரகம பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

உலக சந்தையில் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படும் போது இலங்கையிலும் எரிபொருள் விலை மாற்றம் அடையும் எனவும் எதிர்வரும் காலத்தில் வாரா வாரம் எரிபொருள் அதிகரிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5,31)

## அணில்...

யாழ்ப்பாணம், ஒக். 15

அணில் பிடிக்கச் சென்ற சிறுவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா வீதியை சேர்ந்த அமீர் முகமத் அருஸ் (வயது-8) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் தரம் 3இல் கல்வி கற்கும் மாணவன், தனது வீட்டுக்கு அருகில் உள்ள உறவினர் வீட்டில் நேற்றுமுன்தினம் காலை அணில் பிடித்துள்ளான். அணிலைப் பிடிக்கும்போது அது கடித்ததால் அதனை விட்டுவிட்டுத் தனது வீட்டுக்குச் சென்றுள்ளான். நேற்றுமுன்தினம் மாலை உறவினர் வீட்டுக்கு மீண்டும் சென்ற சிறுவன் அணிலைப் பிடிக்க முயற்சித்துள்ளான். அணிலை துரத்திச் சென்றபோது எதிர்பாராத விதமாக வீட்டுக்குப் பின்புறம் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டநேரமாகியும் வீட்டுக்குச் சிறுவன் வரவில்லை என்று உறவினர்கள் தேடியுள்ளனர். கிணற்றுக்குள் சிறுவன் உடல் இருப்பதை அவதானித்துள்ளனர். உடனடியாக மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். சிறுவன் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழப்புத் தொடர்பான விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (5,8)

## குடாநாட்டில்...

மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ள 400க்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணி வரை இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதற்காக 40 இடங்களில் வீதித் தடைப் போடப்பட்டிருந்தது.

உந்துருளிகள் உள்ளிட்ட சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. வாகனங்களின் ஆவணங்கள் பொலிஸாரால் பரிசோதிக்கப்பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கையில் 40 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 16 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டிலும், பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 7 பேரும், தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் 7 பேரும், சந்தேகத்தில் 10 பேருமாக 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், போக்குவரத்து விதி மீறல் தொடர்பில் 152 பேருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (5,26,105,106)



## போத்தல் கள்ளுடன் சென்றவர் கைது

முல்லைத்தீவு, ஒக். 15

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கற்சிலைமடுப் பகுதியிலிருந்து அனுமதிப் பத்திரம் இல்லாது தண்டுவான் பகுதிக்கு போத்தல் கள்ளை உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டு சென்ற சாரதி நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்சிலைமடுப் பகுதியில் உள்ள கள் அடைக்கும் நிலையத்திலிருந்து 720 போத்தல்களில் கள்ளை ஏற்றிக் கொண்டு சென்றபோது, முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்ட பெருங்குற்றப் பிரிவு மது ஒழிப்பு போதைத் தடுப்புப் பிரிவினர் சாரதியைக் கைது செய்துள்ளனர். (5,ரி3)

## வாள்வெட்டோடு...

கைது செய்யப்பட்டவர் உடுவிலைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து வாள் ஒன்றும், அலைபேசி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மானிப்பாயில் சில தினங்களுக்கு முன்னர் நடந்த வாள்வெட்டுச் சம்பவங்களுடன் இளைஞருக்குத் தொடர்புகள் உண்டு என்று கிடைத்த தகவலையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ற-8)

## மோதலில்...

பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையப் பகுதியில் நேற்றிரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

7பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், அவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் கோப்பாய் பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர்.

சந்திரகுமார் விஜயகுமாரி (வயது-54) என்ற குடும்பப் பெண்ணே கொலை செய்யப்பட்டார். அவரது மகன் காயமடைந்தார்.

சரஸ்வதி சனசமூக நிலையப் பகுதியில் உயிரிழந்த பெண்ணின் வீட்டுக்கு முன்பாக மோதல் நடந்துள்ளது. உயிரிழந்த பெண்ணின் மகனின் மீது, இளைஞர் குழு தாக்குதல் நடத்தியுள்ளது. தாக்குதலில் இருந்து மகனைப் பாதுகாக்க தாய் முற்பட்டுள்ளார். இதன்போது தாய் மீது பொல்லு மற்றும் இரும்புக் கம்பிகளால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் மயக்கமடைந்து விழவே, தாக்குதல் நடத்திய கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

காயமடைந்த தாயார் உடனடியாகவே தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். மருத்துவமனையில் சேர்க்கப்படும்போது அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் இடம்பெற்ற பகுதிக்கு சுன்னாகம் பொலிஸார் சென்றபோது, அந்தப் பகுதி மக்கள் சம்பவம் இடம்பெற்ற உடன் அறிவித்தும் பொலிஸார் வரவில்லை என்று முரண்பட்டுள்ளனர். மேலும், தாக்குதல் நடைபெற்ற பகுதி கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி என்று தெரிவித்து சுன்னாகம் பொலிஸார் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். (5,8,26,105,106)

see more news in NEWUTHAYAN.COM

# தேசியமட்ட குத்துச்சண்டைப் போட்டியில் வடக்கு மாகாணத்துக்கு ஆறு பதக்கங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 15
தேசியமட்ட குத்துச் சண்டைப் போட்டியில் வடக்கு மாகாணத்துக்கு இரண்டு வெள்ளிப்பதக்கம், நான்கு வெண்கலப் பதக்கம் என ஒட்டுமொத்தமாக ஆறு பதக்கங்கள் கிடைத்தன.
பொலனறுவையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விற்றாலிஸ் நிக்லஸ் 81 கிலோகிராம் எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பிரசாந்தி 81கிலோகிராம் எடைப்பரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
ஆண்களுக்கான பிரிவில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த துரைமணி சதுர்சன், சத்தியமூர்த்தி கேசவன் ஆகியோர் 91 கிலோகிராம் எடைப்பிரிவிலும், ஜெகநாதன் தர்சிகன் 81 கிலோகிராம் எடைப் பிரிவிலும், பெண்களுக்கான போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி பங்குபற்றிய வவுனியாமாவட்டத்தைச் சேர்ந்த விஜயரத்தன 69 கிலோகிராம் எடைப்பிரிவிலும் வெண்கலப் பதக்கங்களையும் கைப்பற்றினர். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 15

**கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடத்தத் திட்டமிட்ட பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று ஆரம்பமாகின்றன. இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

**கால்பந்தாட்டம்**



யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கரப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின்அரையிறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இராணுவ பொலிஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## மருதங்கேணி ஆசிரியர் அணி சம்பியனானது

கரணவாய், ஒக். 15
வடமராட்சி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் மருதங்கேணி கோட்ட ஆசிரியர் அணி சம்பியனானது.
நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் பருத்தித்துறை கோட்ட ஆசிரியர் அணியும் மருதங்கேணி கோட்ட ஆசிரியர் அணியும் மோதின.
முதலில் துடுப்பெடுத்தாடிய மருதங்கேணி அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 97 ஒட்டங்ளைப் பெற்றது. அதிகபட்சமாக ரவீந்திரன் 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ரகுபதி, சிறிதரன், பிரதீபன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பருத்தித்துறை அணி 6.2 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று 55 ஓட்டங்களால் தோல்விடைந்தது. (ம-108)

# போராடி வென்றது நண்பர்கள் அணி!



யாழ்ப்பாணம், ஒக். 15
சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வேலுப்பிள்ளை சோமசுந்தரம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நண்பர்கள் அணி வெற்றிபெற்றது.
சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக்கழக அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## பன்ட்டுக்குச் சிறந்த எதிர்காலம் உண்டு

### வோர்ண் தெரிவிப்பு

இந்திய அணியின் இளம் வீரரான பன்டுக்கு சிறந்த எதிர்காலமுண்டு என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் வோர்ண்.
இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் சகா காயமடைந்ததைத் தொடர்ந்து அவரின் இடத்துக்குப் பதில் வீரராகச் செயற்பட்டு வருகிறார் பன்ட். தொடர்ச்சியாக சதம், அரைச்சதம் என்று சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்தநிலையிலேயே பன்டுக்குச் சிறந்த எதிர்காலமுண்டு என்று புகழ்ந்துள்ளார் வோர்ண். (ம)




இலங்கை வெற்றர் மேசைப்பந்தாட்டச் சங்கத்தினால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் பாடசாலை மாணவர்களுக்கான மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் 12 பாடசாலையைச் சேர்ந்த 50 மாணவர்கள் கலந்து கொண்டனர். (ம-422)

# ஒற்றுமை கழகம் அசத்தல் வெற்றி



யாழ்ப்பாணம், ஒக். 15
சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வேலுப்பிள்ளை சோமசுந்தரம் ஞாபகார்த்த வெற்றிக் கிண் ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஒற்றுமை அணி வெற்றிபெற்றது.
சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக்கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

# மீண்டும் வென்றது இந்தியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றி பெற்று இரண்டு ஆட்டங்களைக் கொண்ட தொடரை 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இந்திய அணி.
ஹைதராபாத்தில் கடந்த 12ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பித்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றது. சேஸ் அதிகபட்சமாக 106 ஓட்டங்களையும், கோல்டர் 52 ஓட்டங்களையும், கோப் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் உமேஸ் யாதவ் 6 இலக்குகளையும், குல்தீப் யாதவ் 3 இலக்குகளையும், அஸ்வின் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பன்ட் 85 ஓட்டங்களுடனும், ரகானே 75 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 92 ஓட்டங்களுடன் சதத்தைத் தவறவிட்டார் பன்ட். 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. ஜடேயா ஓட்டமெதையும் பெறாது ஏமாற்றினார். முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 367 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா.
பந்துவீச்சில் கோல்டர் 5 இலக்குகளையும், கபிரியேல் 3 இலக்குகளையும், வரிக்கன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸிலும் தடுமாறியது. குறிப்பாக ஆரம்ப வீரர்கள் இருவரும் ஓட்டமெதையும் பெறாது வெளியேறினர். பிரீத்வைட்டை யாதவும், பவலை அஸ்வினும் வெளியேற்றினார்கள். மத்திய வரிசையில் அம்பிரிஸ் பெற்ற 38 ஓட்டங்களே அதிகபட்சம். முதல் இன்னிங்ஸில் சதம் கடந்த சேஸ், இரண்டாவது இன்னிங்ஸில் வெறும் 6 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். தடுமாற்றம் தொடர வெறும் 127 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.
பந்துவீச்சில் உமேஸ் யாதவ் 4 இலக்குகளையும், ஜடேயா 3 இலக்குகளையும், அஸ்வின் 2 இலக்குகளையும், குல்தீப் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க இந்திய அணிக்கு 72 ஓட்டங்கள் மட்டுமே இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நாள் முடிவதற்கு 21 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருந்தன. ஆட்டத்தை மூன்றாம் நாளுடன் முடிக்கும் முனைப்பில் இந்திய அணியினது ஆரம்ப வீரர்களின் ஆட்டம் அமைந்தது. ஒருநாள் ஆட்டங்களுக்குரிய சராசரியில் இருவரும் விளையாடிக் கொண்டிருந்தனர். இலக்குகள் எதையும் இழக்காமல் 10 இலக்குகளால் வெற்றிபெற்றது இந்திய அணி. (ம)





நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் நாளை செவ்வாய்க் கிழமை நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இதில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# கிளிநொச்சி மகா வித்தி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 15
கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட சத்தியமூர்த்தி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து உருத்திரபுரம் மகா வித்தியாலய அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# நீல் ஓ பிரையன் ஓய்வு



அயர்லாந்து கிரிக்கெட் அணியின் சிறந்த வீரரான நீல் ஓ பிரையன் பன்னாட்டு அரங்கில் இருந்து ஓய்வு பெற்றார்.
அயர்லாந்து அணியின் இலக்குக் காப்பாளராகவும் துடுப்பாட்ட வீரராகவும் நீல் ஓ பிரையன் செயற்பட்டு வந்தார்.
இவர், கடந்த 2002ஆம் ஆண்டிலிருந்து அயர்லாந்து அணிக்காக மொத்தம் 216 ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.
இந்த ஆண்டு டெஸ்ட் அரங்கில் அறிமுகமானார். இவர் பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெறும் முடிவை நேற்று அறிவித்தார். (ம)

## மரண அறிவித்தல்



### செல்வி யோகலட்சுமி இராசையா

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யோகலட்சுமி இராசையா நேற்று (14.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பூமணி தம்பதிகளின் அன்பு மகளும், உதயலட்சுமி, சிராளன், சற்குரு, மகேந்திரன் ஆகியோரின் சகோதரியும், பேரம்பலம், கமலா, ஜெகதீஸ்வரி (பட்டு), ஜெகதீஸ்வரி (ஜெயம்) ஆகியோரின் மைத்துனியும், நாகதேவி, நாகநந்தினி, நாகநந்தன் ஆகியோரின் சிறிய தாயும், சியாமினி, சங்கர், காலஞ்சென்ற சதீஸ் மற்றும் கணேசு, மணிவண்ணன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
இணுவில். இ.மகேந்திரன் (அண்ணா)

**021 300 2640, 077 356 2913**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிட்ட வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
- வரவேற்பாளர்கள்
- பத்திரிகை மடிப்பவர்கள் / விநியோகிப்பாளர்கள்
- இயந்திர இயக்குநர் / உதவியாளர்கள்



ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் திகதிகளில் உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.

**யாழ்ப்பாணம் : இன்று (15.10.2018) திங்கட்கிழமை**
**கிளிநொச்சி : நாளை (16.10.2018) செவ்வாய்க்கிழமை**
**நேரம் : 09.30 மணிமுதல் 3.00 மணிவரை**

யாழ்ப்பாணம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளிநொச்சி:
கராடிபோக்குச் சந்தி A9 வீதி, கிளிநொச்சி.

## கோக்லி புதிய சாதனை

அணித் தலைவர் பதவியில் அதிக ஓட்டங்களைக் குவித்த ஆசிய அணித் தலைவர் என்ற சாதனையை நிலைநாட்டினார் இந்திய அணியின் தலைவர் கோக்லி. பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான மிஸ்பா உல் ஹக் 56 ஆட்டங்களுக்குத் தலைவராகச் செயற்பட்டு 4 ஆயிரத்து 214 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். அவரின் இந்தச் சாதனையை கோக்லி 42 ஆட்டங்களில் முறியடித்தார். அவர் இதுவரை 4 ஆயிரத்து 233 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். (ம)


அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
அமெரிக்க இலவச விசா வாய்ப்பு பெற விரையுங்கள் - இந்த வருடமே இறுதி வருடம்
0768226243
V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

அமெரிக்க லொத்தர் விசா



2020 ஆம் ஆண்டுக்கான லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
திருமுருகன் கொம் நெற்
321, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
077 755 4528



011 5 411 411



2018 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த லக்தரு சிறார்கள் அனைவருக்கும் எமது நல் வாழ்த்துக்கள்.!

பிள்ளைகளுடனே வளர்ச்சி பெறும் லக்தரு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

ஐந்தாந்தர பரீட்சையில் சித்தியெய்திய மாணவச் செல்வங்களுக்கு பரிசு மழை

- பரீட்சைக்கு முன் ஆகக் குறைந்தது ரூ. 5,000/- மீதியை கணக்கில் பேணிய
  - 2018 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த SDB லக்தரு கணக்குரிமையாளர்கள் அனைவருக்கும் பரிசுகள்
  - மாவட்ட ரீதியில் முதல் 25 பேரினுள் அடங்குவீர்களாயின், ரூ. 20,000/- பெறுமதியான சீதனம் முதலீட்டுச் சான்றிதழ்
- பரீட்சைக்கு முன் ஆகக் குறைந்தது ரூ. 10,000/- மீதியை கணக்கில் பேணிய நீங்கள் நாடளாவிய ரீதியில் முதல் 5 பேரினுள் அடங்குவீராயின், ரூ. 50,000/- பெறுமதியான சீதனம் முதலீட்டுச் சான்றிதழ்

லக்தரு பரிசளிப்பு விழாவிற்கான விண்ணப்பப்படிவத்தினை www.sdb.lk அல்லது அருகிலுள்ள SDB வங்கி கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தினை **2018 நவம்பர் மாதம் 09ஆம்** திகதிக்கு முன்னர் அருகிலுள்ள SDB வங்கிக் கிளையில் கையளிக்கவும்.

அடுத்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் சிறார்களே, அடுத்தாண்டு லக்தரு பரிசு மழை இதனை விடவும் அதிகமாகவிருப்பதனால் நல்ல முறையில் பரீட்சையில் சித்தியடைந்து பரிசுகளை வென்றிட இப்பொழுதே ஆயத்தமாகுங்கள்.

*நிபந்தனைகளுக்குட்பட்டது

SDB வங்கி

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ



**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.